விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

Registered as a Newspaper in Srilanka


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 13 திங்கட்கிழமை (29.07.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 222

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

## அரசாங்கக் கூட்டணியில் முன்னாள் புலிகள் இல்லை

### அமைச்சர் சுசில் அறிவிப்பு



வட மாகாண சபைத் தேர்தலில் மத்தியில் ஆளும் சுதந்திரக் கட்சி தலைமையிலான ஆளும் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் எவரும் இல்லை என்று அக் கட்சி அறிவித்துள்ளது. வெற்றி பெறுவதற்கு தகுதியானவர்களுக்கு மட்டுமே வாய்ப்பு வழங்கியுள்ளதாகவும் ஆளும் மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். (02ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்களிடையே உடன்பாடு?

இலங்கை-இந்திய மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் இரு நாட்டு மீனவர்களுக்கிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இந்த முயற்சியை வரவேற்றுள்ள இலங்கை தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக பல (19ஆம் பக்கம் பார்க்க)

## தயாசிறிக்கு எதிராக ஐ.தே.க வழக்கு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு கட்சி தாவியது மட்டுமன்றி ஐ.தே.கவை அவதூறாக பேசியமை குறித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவுக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பண்டார (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு இன்று வேட்புமனுத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று திங்கட்கிழமை ஐந்து மாவட்டங்களிலும் சம நேரத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்யவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் வேட்புமனுவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஒப்பமிட்டனர்.

இது தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே இதனை அவர் தெரிவித்தார்.

வட மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களில் இன்று இந்த வேட்பு மனுத்தாக்கல் சம நேரத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் முதன்மை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலும், கிளிநொச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தலைமையிலும், வவுனியாவில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையிலும், முல்லைத்தீவில் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தலைமையிலும் மன்னாரில் (19ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண வேட்பாளர்களை அறிவித்தது த.கூட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடவுள்ள யாழ்.வேட்பாளர்களின் விபரங்கள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் அடிப்படையில் பெயர் விபரங்கள்.

**தமிழரசுக் கட்சி:**

முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், மாநகர சபை முன்னாள் ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம், திருமதி எழிலன் ஆனந்தி, ஆனோல்ட், யாழ்.மாநகர சபை உறுப்பினர் பரஞ்சோதி, சயந்தன், சிவலோகம், கஜதீபன், சுகிர்தன்.

**ஈ.பி.ஆர்.எல்.எப்:**

யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரம், கலாநிதி சர்வேஸ்வரன், ஐங்கரநேசன், சுப்பிரமணியம்.

**ரெலோ:**

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், மாநகர சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம், குகதாஸ்.

**புளொட்:**

அக்கட்சியின் த்லைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன்.

**தமிழர் விடுதலைக் கூட்டணி:**

முத்தையா தம்பிராசா, கணபதிப்பிள்ளை தருமலிங்கம்.

ஆகியோர் போட்டியிடவுள்ளதாக தமிழ்த் தேசியக கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது. (எ -4)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை
வினாத்தாள்
இரசாயனவியல் II
(மேலி மாகாண வினாத்தாள்)

### வடக்கு மாகாண வேட்பாளர் பட்டியலில்

## சிரரஸை இணைக்கக் கோரி தீக்குளிக்க முயன்ற இளைஞன்



(யாழ்ப்பாணம்)

சுதந்திரக் கட்சிக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முஸ்லிம்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின்போது இளைஞர் ஒருவர் தீக்குளிக்க முயற்சித்துள்ளார்.

வட மாகாண சபைத் தேர்தலில் சுதந்திரக் கட்சி சார்பாக போட்டியிடுவதற்கு விண்ணப்பித்த எம்.எம்.சிராஸ் வேட்பாளர் பட்டியலில் தெரிவு இடம்பெறாததையடுத்து இந்த மறியல் போராட்டம் இடம்பெற்றது.

இதில் ஆர்ப்பாட்டத்தில் (19ஆம் பக்கம் பார்க்க)

### வட மாகாண சபைத் தேர்தல்

## த.தே.கூட்டமைப்பின் சார்பில் எழிலனின் மனைவி போட்டி



ஆனந்தி

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த எழிலனின் மனைவி ஆனந்தி போட்டியிடவுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

இந்தத் தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் மூன்று பெண்கள் போட்டியிடவுள்ளதாகவும் தமிழரசுக்கட்சியின் சார்பில் இருவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் ஒருவரும் என மூன்று பேர் களமிறக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முன்னாள் போராளி எழிலனின் மனைவி ஆனந்தி, கிளிநொச்சி மாவட்டத்தைச் பிரதிநிதித்துவப்படுத்தி, கிளி.கிராஞ்சி அ.த.க.பாடசாலை ஆசிரியை திருமதி வினுபானந்தகுமாரி (20ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஓய்வுபெற்ற நீதியரசர் விக்னேஸ்வரன் வடக்கில் போட்டியிட முடியாதது ஏன்?

## அமைச்சர் பசிலிடம் சம்பந்தன் கேள்வி

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டையைச் சேர்ந்த பசில் ராஜபக்ச கம்பஹாவில் போட்டியிட முடியுமானால் விக்னேஸ்வரன் ஏன் யாழ்ப்பாணத்தில் போட்டியிட முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வடமாகாண முதலமைச்சர் வேட்பாளராக வடக்கைச் சேராத முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் விக்னேஸ்வரனை தெரிவு செய்ததன் மூலம் வடமாகாண மக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவமதித்துவிட்டதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறிய கருத்துக்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே சம்பந்தன் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

தமிழ் மக்களால் நேசிக்கப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வடமாகாண முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதை தீர்மானிக்கும் ஜனநாயக உரிமை உள்ளது. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்வடமாகாணமுதலமைச்சர் வேட்பாளர் தெரிவு குறித்து குறை கூறுவதற்கு அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு எவ்வித உரிமையும் கிடையாது.

விக்னேஸ்வரன் வடமாகாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்தான். வடமாகாணத்தில் அவருக்கு சொந்தமான காணிகள் மற்றும் நிலங்கள் உள்ளன. அத்துடன், வடக்கில் நீண்டகாலம் நீதவானாகவும் பணியாற்றியுள்ள அவர், வடக்குக் கிழக்கு மக்களின் மொழி, கலை மற்றும் கலாசாரம் தொடர்பில் மிகுந்த பற்றும், மரியாதையும் கொண்டவர். வடக்குக் கிழக்கு மக்களின் அபிலாசைகளை அவர் நன்கு உணர்ந்தவர்.

நீதிவழுவாத தீர்க்க தரிசனம் கொண்ட ஒருவரை நாம் வடமாகாணசபையின் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தியுள்ளதானது அனைத்து தமிழ் மக்களுக்கும் பெருமை சேர்க்கும் விடயமாகும். இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண முதலமைச்சர் வேட்பாளரான விக்னேஸ்வரனை விமர்சனம் செய்ய அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு எவ்வித உரிமையும் கிடையாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கமே தமிழ் மக்கள் எப்போதும் இருக்கின்றனர். அதேபோன்று தமிழ் மக்களின் அபிலாசைகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நன்கு உணர்ந்துள்ளது. இன்றைய சூழ்நிலையில் வடமாகாண முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஸ்வரனை களமிறக்கியதன் மூலம் அனைவரது கவனமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கம் திரும்பியுள்ளது என்று இரா. சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)



புங்குடுதீவில் பல சமூக சேவைகளை ஆற்றிவந்த சிவப்பிரகாசம் உத்தரதாசனுக்கு புங்குடுதீவு சீவலப்பிட்டி சனசமூக நிலையத்தினரால் "சமூகஜோதி" என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அவருக்கு ஓய்வு பெற்ற நீதிபதி மு. திருநாவுக்கரசு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

# பருத்தித்துறையில் சுரங்கப்பாதை

(யாழ்ப்பாணம்)

யாழ். பருத்தித்துறை நகரத்தில் சுரங்கப் பாதையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை கடற்கரைக்குச் செல்லும் வீதியிலேயே இந்தச் சுரங்கப் பாதை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நகரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி அபிவிருத்திப் பணியின் போது இந்தச் சுரங்கப்பாதை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை நகரத்தில் இருந்து கடற் கரைக்கு செல்வதற்குரிய பாதையாக இது காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்த சுரங்கப்பாதை எந்தக் காலத்திற்குரியது?, யார் இதனைப் பயன்படுத்தினார்கள்? என்ற தகவல்கள் இதுவரை இல்லாத போதும் இதனை விடுதலைப்புலிகள் பயன்படுத்தியிருக்கலாம் என்ற சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. (எ-8)

# முப்பது நிமிடங்களில் 7 பேரைக் கடித்த நாய்

(யாழ்ப்பாணம்)

நாய்கடிக்கு இலக்காகிய நிலையில் 30 நிமிடங்களுக்குள் ஏழுபேர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக யாழ்.போதனாவைத்தியசாலை அறிவித்துள்ளது.

யாழ். நகரப் பகுதியிலேயே நேற்றுக் காலை வேளையில் சுமார் 30 நிமிடங்களுக்குள் ஏழு பேரை நாய் கடித்துள்ளது.

அதில் ஒரு நாய் 5 பேரையும், நீர்வேலிப் பகுதியில் மற்றொரு நாய் இரண்டு பேரையும் கடித்துள்ளது.

நாய்க் கடிக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் என். சுப்பிரமணியம் (வயது 72), ரி. தர்ஷிகா (வயது 3), ரி. பரமேஸ்வரன் (வயது 69), சிவகுமாரன் லோரன்ஸ், செல்வநாயகம் போஜினி (வயது 23), தவேந்திரன், ரவீந்திரன் (வயது 38) ஆகியோரே யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-8)

# சீமெந்து தொழிற்சாலையை புனரமைக்க 1.5 பில். முதலீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க சொத்துக்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக 1.5 பில்லியன் ரூபாய் நிதி முதலீடு செய்யப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒருவருட காலப்பகுதியில் தொழிற்சாலையை இயக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த தொழிற்சாலையில், நாள் ஒன்றுக்கு 50 கிலோகிராம் எடைகொண்ட 12 ஆயிரம் சீமெந்து மூட்டைகளை உற்பத்தி செய்ய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறித்த வேலைத்திட்டம் நிறைவடைந்த பின்னர், இலங்கையில் சீமெந்தின் விலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ-8)

# அரசாங்கக் கூட்டணி...

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்கு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களை வழங்காதிருக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டர் எனப்படும் வேலாயுதம் தயாநிதிக்கு வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புரிமை கிடைக்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தமுறை மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கான வேட்பு மனுவில் கையொப்பமிடும் நடவடிக்கை ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது தயா மாஸ்டர் அங்கு பிரசன்னமாகியிருக்கவில்லை.

தாம் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பாக வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அவர் ஏற்கெனவே அறிவித்திருந்தார்.

இந்தநிலையில், தயா மாஸ்டருக்கான வேட்புரிமை ஆளும் கட்சியினால் நிராகரிக்கப்பட்ட நிலையில், அவர் தனித்து போட்டியிடுவதற்கு முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 22 ஆம் திகதி தயாமாஸ்டர், சிறிலங்கா சுதந்திர கட்சியில் உறுப்புரிமையை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கே.பி, என அழைக்கப்படும் குமரன் பத்மநாதன், புலிகளின் முன்னாள் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் போட்டியிடுவார்கள் என அடிக்கடி பேசப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யார் தேர்தலில் போட்டியிட்டாலும் அரச தரப்பு வெற்றியீட்டினால் முதலமைச்சரை தாமே தெரிவு செய்வதாக ஈ.பி.டி.பியின் பொது செயலாளர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் பி.பி.சியின் தமிழோசைக்கு தெரிவித்திருந்தார்.

அத்துடன், எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுபவர்களில் 36 பேரில் 20 பேர் ஈ.பி.டி.பி கட்சியைச் சார்ந்தவர்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வட மாகாண சபைக்கான வேட்புமனுவில் எம்.எம்.சிராஸின் பெயரும் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஆட்சேபனை தெரிவித்து அவரது ஆதரவாளர்கள் நேற்று முற்பகல் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.(எ-8)

# பொலிஸாரின் பெயரைப் பயன்படுத்தி கப்பம் பெற்றுவந்த குழு கைது

(காலி)

பொலிஸ் உயர் அதிகாரிகளின் பெயரைப் பயன்படுத்தி பல நபர்களிடம் கப்பம் பெற்று வந்த குழுவொன்றை காலி வந்துரம்ப பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஏழு பேர் கொண்ட இந்த குழுவில், களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் சிலரும் அடங்குவதாக பொலிஸார் கூறினர்.

சிறைச்சாலையில் இருந்து, பிரதிப் பொலிஸ்மா அதிபர், பொலிஸ் அத்தியட்சகர் எனக் கூறி, பல்வேறு பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, சம்பந்தப்பட்ட பொலிஸ் பிரிவில் உள்ள நபர்களில் பெயர்களைக் கூறி, அவர்களின் தொலைபேசி இலக்கத்தை எடுத்து தம்மை தொடர்பு கொள்ளுமாறு சந்தேக நபர்கள் உத்தரவிட்டு வந்துள்ளனர்.

இதனை நம்பிய பல பொலிஸ் அதிகாரிகள், சந்தேக நபர்கள் குறிப்பிடும் நபர்களின் தொலைபேசி இலக்கங்களை பெற்று அதனை அவர்களிடம் வழங்கியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ-8)


**பிள்ளையார் இன்**

இன்று முதல் அதிவிசேட 25% விலைக் கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவை யுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

**இன்றைய விசேட உணவு:**

✔ தோசை (உருளைக் கிழங்கு கறியுடன்) ரூபா 80/-
✔ மசாலா தோசை (உருளைக் கிழங்கு கறியுடன்)
மசாலாபூரி சப்பாத்தி (உருளைக் கிழங்கு கறியுடன்)

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(4159)


# 31ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 1927 – 06 – 25 | இறப்பு 2013 – 06 – 30

அமரர்

**ஆதிநாராயணசாமி மயில்வாகனம்**

(வல்வெட்டித்துறை)

ஐயா ஐயா என்று நாளெல்லாம்
வாயார நாம் அழைக்க எமை தவிக்க விட்டு
மீளாத் துயிலில் உறங்கியது ஏனோ?
மகிழ்வோடு எமை பெற்று வளர்த்து –இப்
பாரினிலே நாம் சிறக்க வழி சமைத்தீரோ! இன்று
எமைத் தவிக்க விட்டு மீளாத் துயிலில் உறங்கியது ஏனோ?
உமைப் பிரிந்து ஆனதோ நாட்கள் முப்பத்து ஒன்று
ஆனால் எமக்கு முப்பத்து ஒன்று யுகங்களே
கழிந்தது போல் உள்ளதையா – எமை
ஆறுதல் படுத்த மீண்டும் உங்கள் பூ முகம்
காண வாராயோ? – எம் அருகில்

நாளை 30.07.2013 (செவ்வாய்க்கிழமை) அன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியை நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நெடியகாடு, வல்வெட்டித்துறை. (C-4161) தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நட்பின் இலக்கணம்

ஒருவர் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஒரு மாதிரியாக வந்தார் என்ன விடயம்? என்று விசாரித்தேன்.

எனது நண்பன் ஒருவனுடன் கருத்து வேறுபாடு. இனி மேல் நமக்குள் எந்த சம்பந்தமும் வேண்டாம் என்று நட்பை முறித்துக் கொண்டு வந்து விட்டேன் என்றார்.

''நண்பர்கள் என்று இருந்தால் கருத்து வேறுபாடு வரத்தான் செய்யும் '' என்றேன்.

''கருத்து வேறுபாடு வராமல் இருப்பதற்கு ஏதாவது வழி உண்டா?''என்று கேட்டார்.

''அதைப் பற்றி நிபுணர்கள் சில யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள்'' என்றேன். முதல் விடயம் என்ன தெரியுமா? உங்கள் நண்பருக்கு ஒரு செய்தி சொல்ல வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் நேரடியாகச் சொல்லுங்கள். அல்லது நேரடியாகக் கைப்பட எழுதுங்கள். அதாவது நேரடித் தொடர்பு முக்கியம். அதை விட்டுவிட்டு இன்னொருவர் மூலமாக நண்பர்களுக்கு செய்தி அனுப்பினால் நீங்கள் சொல்லும் செய்தி அப்படியே போய்ச் சேராது. அது எதிர்மறையாகக் கூட வாய்ப்புக்களுக்கு கூட்டிக் குறைத்துச் சொல்லி விடுவார்கள். அது குழப்பத்தில் கொண்டு வந்து விடும். இரண்டாவது யோசனை. நீங்கள் ஒரு நல்ல காரியத்தைச் செய்யும் போது உங்கள் நண்பரையும் சேர்த்துக் கொள்ளுங்கள். அவருக்கும் அதில் ஓர் ஈடுபாட்டை உருவாக்குங்கள்.

மூன்றாவது யோசனை,

நமது பக்கத்திலிருக்கும் நண்பர் மகிழ்ச்சியடைவது போல் ஏதாவது செய்ய வேண்டும். சின்ன சின்ன செயல்களாக இருந்தாலும் பரவாயில்லை. அவர் நமக்கு எதுவும் செய்ய வில்லையே! நாம் எதற்கு செய்ய வேண்டும் என நினைக்கக்கூடாது.

நான்காவது யோசனை, உங்களுக்கு ஒரு பிரச்சினையா! அல்லது உங்கள் நண்பருக்கு ஒரு பிரச்சினையா? எதுவாக இருந்தாலும் இரண்டு பேர் சேர்ந்து அமர்ந்திருந்து ஆலோசனை செய்யுங்கள். நம்ம யோசனையும் கேட்கப் பட்டதே! என்ற நினைப்பு அவருக்கு மன நிறைவைக் கொடுக்கும். ஐந்தாவது யோசனை உங்கள் நண்பர் ஏதோ ஒரு காரியத்தை சொல்கிறார். நீங்கள் உடனே தவறு என்று தீர்ப்புச் சொல்லாதீர்கள். அவர் அதைச் செய்வதற்கான நியாயங்கள் எவ்வளவோ இருக்கு. அதைப் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

ஆறாவது யோசனை,

உங்கள் நண்பர் என்ன சொன்னாலும் அதைப் பொறுமையாகக் கேளுங்கள் .அவர் சொல்வதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர் சொல்ல விரும்புவதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர் சொல்ல முடியாமல் தவிப்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். இப்படி மூன்று விதமாகவும் அவரைப் புரிந்து கொண்டு அதற்குத் தகுந்தாற்போல் செயற்பட வேண்டும்.

ஏழாவது யோசனை,

உங்கள் நண்பர் உங்களிடம் வந்து ஏதோ ஒரு கருத்தைச் சொல்கிறார். அது உங்களுக்குப் பிடிக்கவில்லை. அதற்காக உடனே நீர் சொல்வது சரியில்லை. நான் ஒத்துக் கொள்ள மாட்டேன் என்றெல்லாம் மறுத்துக் கூறாதீர்கள். அவர் சொல்வதையும் கேட்க வேண்டும்.

பொறுமையாகச் சிந்திக்க வேண்டும். அதன் பின்னர் பதில் சொல்ல வேண்டும். இப்படியெல்லாம் நடந்து கொண்டால் நண்பர்களுக்குள் கருத்து வேறுபாடு வராதாம் வல்லுநர்கள் தொகுத்து சொல்லியிருக்கும் விடயங்கள் இவை.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# இறக்குமதியாகும் பால்மாவில் டிசிடி என்னும் இரசாயன கலப்பு?

இலங்கைக்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பால்மா வகைகள் பலவற்றில் டிசிடி (Dicyan diamide)என்ற இரசாயன பொருள் கலந்திருப்பதாக தொழில்நுட்ப ஆய்வுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

வெளிநாட்டு பால்மா வகைகளில் டிசிடி இரசாயனம் கலந்திருப்பதாக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்டிருந்த சர்ச்சையின் போது சுகாதார அமைச்சும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையும் அது பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டிருந்தன.

இந்த பால்மா வகைகளில் உடலுக்கு தீங்கு ஏற்படுத்தும் பொருட்கள் இல் லை என்று சுகாதார அமைச்சும் முன்னர் அறிக்கை வெளியிட்டிருந்தது. ஆனால் தற்போது மீண்டும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தலைமையிலான தொழில்நுட்ப ஆய்வுத்துறைஅமைச்சு தனியான ஆய்வொன்றை நடத்திவெளிநாட்டு பால்மா வகைகளில் டிசிடி கலந்திருப்பதாக ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட்டுள்ளது.

DCD என்பது விவசாயத்திற்குப் பயன்படுத்துகின்ற அல்லது வைக்கோலுக்கு பயன்படுத்துகின்ற ஒரு வகை இரசாயனப் பொருள். நாங்கள் ஆய்வுக்குட்படுத்திய வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் எல்லா பால்மா வகைகளிலும் இந்த DCD இரசாயனம் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தொழில்நுட்ப ஆய்வுத்துறை அமைச்சின் ஊடக செய்தியாளர் தனுஷ்க ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த பால்மா வகைகளைத் தொடர்ந்தும் இறக்குமதி செய்வதை அனுமதிப்பதா? அல்லது இலங்கையில் தடை செய்வதா? என்ற தீர்மானத்தை நுகர்வோர் அதிகார சபையும் சுகாதார அமைச்சும் இணைந்து எடுக்கும் பட்சத்தில் நாட்டின் சுங்கத்துறை அதன் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கையை எடுக்கும் என்று தனுஷ்க இராமநாயக்க கூறினார்.

இதேவேளை தாம் முன்னர் நடத்திய ஆய்வு முடிவுகளின் படி இறக்குமதியாகும் பால்மா வகைகளில் உடலுக்கு தீங்கேற்படுத்தும் இரசாயனம் எதுவும் இல்லையென்று சுகாதார அமைச்சின் உணவு பாதுகாப்புக் குழு உறுதி செய்திருப்பதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் ரூமிமர்ஷுக் கூறினார்.

கடந்த மார்ச் மாதம் 17 ஆம் திகதியிலிருந்து இது பற்றி நாங்கள் ஆராய்ந்துள்ளோம். ஜனாதிபதியின் உத்தரவின்படி பால்மா மாதிரிகளை நாங்கள் வெளிநாட்டில் பரிசோதனை செய்திருந்தோம். அப்போது இந்த பால்மா வகைகளில் உடலுக்குத் தீங்கு ஏற்படுத்தும் ஏதும் இல்லை என சுகாதார அமைச்சு அறிவித்தது என்றார் ரூமி மர்ஷுக். இப்போது மீண்டும் மற்றொரு அரச நிறுவனம் பால் மா வகைகளில் பிசிடி இருப்பதாக கூறியிருப்பதை புத்திரிகைச் செய்திகள் மூலமாகவே தாம் அறிந்து கொண்டதாகவும் தெரிவித்தார். மக்களின்உடலுக்குதீங்கு ஏற்படுத்தும் பொருள் பற்றி அறிவிக்க வேண்டியது சுகாதார அமைச்சுதான் என்றும் இந்த புதிய ஆய்வு முடிவு பற்றி அடுத்து வரும் நாட்களில் சுகாதார அமைச்சு எடுக்கும் தீர்மானத்தின் படியே தமது அடுத்த கட்ட நடவடிக்கை அமையும் என்றும் நுகர்வோர் பாது காப்புச் சபைத் தலைவர் தெரிவித்தார். இதேவேளை தமது பால்மா வகைகளில் டிசிடி இரசாயனம் கலந்திருப்பதாக எழுந்த சர்சைகளை அடுத்துநியூசிலாந்தின் பிரதான பால்மா ஏற் றுமதி நிறுவனமும் அந்நாட்டு அரசும் ஆய்வுகளை மேற்கொண்டு தமது பால்மா வகைகளில் உடலுக்கு தீங்கேற்படுத்தும் பொருட்கள் இல்லை என்று கடந்த ஆண்டில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வடமராட்சி வடக்கில் நடமாடும் சேவை

வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளுக்கான தேசிய அடையாள அட்டை வழங்கலுக்கான நடமாடும் சேவை இன்று திங்கட்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் வரை நடைபெறவுள்ளது.

இதில் ஜே/401, ஜே/417 வரை யான கிராம அலுவலர் பிரிவுக்களுக்கு இன்று பருத்தித்துறை பிரதேச செயலகத் திலும் ஜே/393, ஜே/ 400 வரையான கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நாளை அல்வாய் திக்கம் சனசமூக நிலையத்திலும் ஜே/ 383, ஜே/392 வரையான கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நாளை மறுதினம் வல்வெட்டித்துறை பழைய நகரசபை மேல் மண்டபத்திலும் காலை 9 மணி தொடக்கம் பி.ப. 4 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையூடாக புதிய, தொலைந்த மற்றும் திருத்தத்திற்கான தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்கான சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும். இச் சேவையை பெற்றுக் கொள்வதற்கு உரிய புகைப்படத்துடன் கூடிய ஏனைய ஆவணங்களுடன் வருகைதருமாறும் மேலதிக விபரங்களை தங்கள் பிரிவு கிராம அலுவ லரிடம் பெற்றுக் கொள்ளலாம் எனவும் பருத்தித்துறை பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (அ-ம-19)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 80 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 90-160 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 120 | 80 |
| தக்காளி | 80 | 60 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 60 |
| கோவா | 70 | 90 | 120 | 120 |
| கரட் | 150 | 150-240 | 140 | 200 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 20 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 200 | 140 | 140-180 | 200 |
| பெரிய வெங்காயம் | 140 | 110 | 120 | 120 |
| பாகற்காய் | 60 | 40 | 50 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 30 | 50 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | — | 60 |
| பயற்றங்காய் | 40 | 40 | 40 | 140 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 | 140 |
| பீற்றூட் | 60 | 40 | 80 | 80 |
| கறிமிளகாய் | 60 | 80 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 140 | 200 | 160 |
| போஞ்சி | 100 | 120 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | 20 | — | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 35 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 | 120 |

# இராசி பலன்

*29.07.2013*
*(ஆடி 13, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு*
*சப்தமி பிற்பகல் 3.57 மணிவரை*
*அச்சுவினி பின்னிரவு 5.52 மணிவரை*
*இராகுகாலம் 7.33-9.03 மணிவரை*
*சுபநேரம் 12.03-1.33 மணிவரை*

**மேடம்** நல்லவர்களை சந்தித்து நலம்காணும் நாள், திட்டமிட்ட காரியம் ஒன்றில் திடீர் மாற்றம் செய்வீர்கள், வேலைச் சுமை கூடும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும், போசன நன்மையுண்டு.

**இடபம்** எதிலும் வேகத்தைக் குறைத்து பொறுமையாக செயற்படுவது நல்லது, பொறுப்பாக வேலை செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு உட்பட நேரிடலாம், சயனசுகக் குறைவான நாள்.

**மிதுனம்** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரும் நாள், வருமானம் திருப்திகரமாக அமையும், புதிய பொருட்கள் வீடு வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் அதிகரிக்கும், பயணத்தால் பணவரவு கிடைக்கும், தலைமைப் பொறுப்புக்கள் உங்களைத் தேடிவரலாம்.

**சிங்கம்** எதிர்ப்புக்கள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், தந்தை வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும், சாமர்த்தியமாக பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**கன்னி** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஒருவகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் செலவாகலாம், கௌரவக் குறைவான நாள்.

**துலாம்** உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும், பிற இனத்தவரால் பெரு மை சேரும், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** பகைவர்கள் விலகுவர், உடன் பிறப்புக்கள் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வருவர், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், புத்திசாதுரியமாக நடந்து பொருள் வரவைப் பெருக்கிக் கொள்வீர்கள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள், பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரும், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளை சொல்லலாம்.

**கும்பம்** தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், மூத்த சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

**மீனம்** வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், வாக்கு மேன்மையுண்டு, சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படும், எதிர்பாராத கவலைகள் சில ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு அரச வங்கிகளின் ஏ.ரி.எம்கள் ஒன்றிணைப்பு



மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஆகியவற்றின் 900க்கும் அதிளகமான ஏரிஎம்கள் ஒரே வலையமைப்பினுள் இணைக்கப் பட்டுள்ளன.

இதன் மூலம் இவ்விரண்டு வங்கிகளையும் சேர்ந்த வாடிககை யாளர்கள் தமது பண மீளப்பெறு கைகளை இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கி ஏரிஎம் இயந்திரங்களின் ஊடாக மேற்கொள்வதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சேவை முதன் முறையான இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் ஆரம்பித்து வைத்திருந்தார். இலங்கை முழுவதும் மொத்தமாக 3000க்கும் அதிகமான ஏரிஎம் இயந்திரங்கள் காணப்படுவதாகவும், இவை அனைத்தையும் ஒரே வலையமைப்பினுள் உள்வாங்கச் செய்வதே தமது இலக்கு எனவும் இவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த வலையமைப்புக்கான சேவையை லங்காகிளியர் வழங்கியிருந்தது. இந்த முறையிலான பண மீளப்பெறுகைகளின்போது, வாடிக்கையாளர் கணக்குகள் நேரடியாக பற்று வைக்கப்படுவதுடன், முழுமையான கொடுக்கல் வாங்கல் இரண்டு சுழற்சியில் மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏனைய பல வங்கிகளும் இந்த வலையமைப்பில் வெகு விரைவில் இணைந்து கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## உலக சந்தையில் தங்கத்தின் விலை சரிவு

சர்வதேச சந்தையில் தங்கத் தின் விலை கடந்த வார இறுதியில் கொடுக்கல் வாங்கல்களின் போது அவுன்ஸ் ஒன்று 1319.46 அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது.

இது கடந்த புதன்கிழமையுடன் ஒப்பிடுகையில் 2 வீத சரிவு என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் பொருளாதார மீட்சி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்ததை தொடர்ந்து கடந்த ஒரு மாத காலமாக தங்கத்தின் விலையில் சற்று அதிகரிப்பை அவதானிக்க முடிந்தது.

ஆயினும், புதன்கிழமை வெளியாகியிருந்த அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் பொருளாதார தரவுகள் இந்த சடுதியான வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ளதாக சர்வதேச செய்திச் சேவைகள் அறிவித்துள்ளன.

## பங்குக் கொ/வு தொடரும்

இலங்கையில் பட்டியலிடப் பட்டுள்ள கம்பனிகளின் பங்குகள் கொள்வனவில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தொடர்ந்தும் அதிகளவு ஆர்வத்தை வெளிப்படுத்துவார்கள் என DNH ஃபினான்சியல் சேர்விசஸ் அறிவித்துள்ளது.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கொழும்பு பங்குச்சந்தையிலிருந்து வெளியேறும் போது, பெருமளவு சரிவு காணப்பட்ட போதிலும், இந்த ஆண்டின் ஆரம்பம் முதல் இது வரை வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கொள்வனவு அதிகரித்து காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலை ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியிலும் தொடர்ந்து காணப்படுமென DNH ஃபினான்சியல் சேர்விசஸ் குறிப்பிட்டுள்ளது.




## 15ஆவது அகவையை கொண்டாடும் சூரியன் வானொலி




103.4 மற்றும் 103.6 ஆகிய பண்பலைகளின் வழியாக இலங்கையில் எல்லா இடங்களிலும் மிகத் துல்லியமாக ஒலிபரப்பாகும் சூரியன் எப்.எம் இலங்கையின் முதற்தரத் தமிழ் வானொலியாக மட்டுமல்லாமல் இணையத்தின் வாயிலாக உலகின் சகல நாடுகளிலும் பெருவாரியான நேயர்களைத் தன் வசப்படுத்தியுள்ளது.

ஆசிய ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் அப்போதைய முகாமைத்துவப் பணிப்பாளரும், இப்போதைய நிறுவனத் தலைவருமான ரெய்னோ சில்வாவின் சரியாகத் திட்டமிட்டு ஆரம்பித்து வைத்த சூரியன் வானொலி இந்த 15 வருடங்களிலும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சூரியன் வானொலி அந்தந்தக் காலகட்டத்தில் புது விஷயங்களையும் புதிய படைப்புக்களையும் முதலில் அறிமுகப்படுத்தி தமிழ் வானொலிகளில் மக்களிடம் நீங்காத இடத்தைப் பிடித்திருக்கிறது.

நேயர்களுக்குப் பிடித்த நிகழ்ச்சி வடிவமைப்புக்கள், பாடல் ஒலிபரப்புக்கள், விளம்பர உருவாக்கங்கள், செய்தி ஒலிபரப்புக்கள், மேடை, வீதி நிகழ்ச்சிகள் என்று சூரியனின் கைவண்ணங்கள் மிளிராத துறைகளே இல்லை எனலாம்.

சூரியனின் அறிவிப்பாளர்குழுவை வழிநடத்தும் பணிப்பாளர் A.R.V. லோஷன் சூரியனின் காலைநேர நிகழ்ச்சியான சூரிய ராகங்களைப் படைத்து நேயர்களோடு நெருங்கிப் பழகும் அனுபவம் வாய்ந்த ஒலிபரப்பாளர்.

கலகல சந்த்ரு சூரியனின் முகாமையாளராகக் கடமையாற்று வதோடு வாரநாட்களில் இசைச் சமர் நிகழ்ச்சியிலும் கலக்குபவர்.

சூரியனின் ஆரம்பகால நிகழ்ச்சி முகாமையாளரான, இலங்கையின் அதி சிரேஷ்ட ஒலிபரப்பாளர் நடராஜசிவம் இப்போது தனது அனுபவங்களை இளையவர்களுக்குக் கற்றுத்தரும் ஆலோசகராகக் கடமையாற்றுகிறார்.

ஒவ்வொரு நிகழ்ச்சியையும் சிறப்பாக, ரசனையோடு, படைப்பாற்றலோடு தரும் பெரியதொரு அறிவிப்பாளர் பட்டாளமே சூரியனின் நிகழ்ச்சிகளுக்குப் பலம் என்னலாம்.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,041.06 | 6,051.77 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,409.16 | 3427.87 ⇧ |


விலை அசைவுகளின் அடிப்படையில் — புரள்வு (ரூபா.மில்.) 1,393.46

[illegible] சிலோன் பிறிண்டேர்ஸ்(1260.00),சிலாவ் பினான்ஸ்(5.30), ஆஸிரி சென்றல்(272.50),எஸ்எம்பி லீசிங்(0.80),பின்லேஸ் கொழும்பு(309.90).

[illegible] .எஸ்எம்பி லீசிங்(ஹ)(0.30),சிஜரி(118.60), பிசிஎச் ஹோல்டிங்ஸ்(1.30), ரீ சிமோல் ஹோல்டர்(43.20), கூஜெ(62.00)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# ஏ/தி வருமானம் வீழ்ச்சி



ஆண்டின் முதல் 5 மாதங்களில நாட்டின் இறக்குமதி செலவினம் 9.4வீதத்தால் வீழ்ச்சியடைந்து 7581 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்ததுடன், ஏற்றுமதி வருமானம் 6.6 வீதத்தால் வீழ்ச்சியடைந்து 3854 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் பதிவாகியிருந்ததாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

மே மாதத்தில் குறிப்பாக இறக்குமதி பொருட்களான எரிபொருள், ஆடை மற்றும் ஆடை உற்பத்திகள், போக்குவரத்து சாதனங்கள், இரும்புகள், பசளை வகைகள், வாகனங்கள் மற்றும் உலர் உணவு பொருட்கள் போன்றவற்றின் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்திருந்தது. கோதுமை, தங்கம் மற்றும் நிர்மாண பொருட்கள் போன்றனவற்றின் மீதான செலவினம் அதிகரித்து காணப்பட்டது.

நடப்பு ஆண்டின் மே மாதத்தில் தங்கத்தின் இறக்குமதி கடந்து ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 44.4 வீதம் அதிகரித்து காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தேயிலை ஏற்றுமதியின் அளவு குறைவாக காணப்பட்டமையின் காரணமாக, தேயிலை மூலமான ஏற்றுமதி வருமானம் மே மாதத்தில் குறைவாக பதிவாகியிருந்ததுடன், ஆடை உற்பத்திகள் 2 வீத அதிகரிப்பையும் மே மாதத்தில் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மிகச் சிறந்த இஸ்லாமிய நிதிச் சேவை வழங்குநர்

லண்டனில் அமைந்துள்ள சர்வதேச நிதி சஞ்சிகையான International Finance Magazine (IFM) அமானா தகாஃபுல் பிஎல்சிற்கு இலங்கையின் "மிகச் சிறந்த இஸ்லாமிய நிதிச்சேவை வழங்குனர்" என்ற பட்டத்தை அளித்துள்ளது.

IFM விருதுகளானது சர்வதேச நிதிச் சேவைகள் துறையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியவாறு பெறுமதி சேர்க்கும் வகையில் செயற்படும் தனிநபர்கள் அல்லது ஸ்தாபனங்களை அங்கீகரித்து வழங்கப்படுகின்றது. புத்தமைவு மற்றும் சிறப்பான

Amãna Takaful Insurance Redefined

செயற்திறனை வெளிப்படுத்தும் நிறுவனங்களுக்கே பெருமைக்குரிய இந்த விருது வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த விருதினை ஈட்டியமை பற்றி கருத்துரைத்த அமானா தகாஃபுல் பிஎல்சி பிரதம நிறைவேற்று அதிகாரி பஸால் கஃபூர் "2013 ம் ஆண்டுக்கான சர்வதேச நிதி சஞ்சிகை விருதினைப் பெற்றுள்ளமை குறித்து மிகுந்த பெருமையடைகின்றோம். என்றார்.

# ரூ.14 ஆயிரம் கோடியை முதலிடுகிறது சாம்சங்

தென்கொரியாவைச் சேர்ந்த மிகப்பெரிய மின்னணுப் பொருட்கள் தயாரிப்பு நிறுவனம் சாம்சங். இதன் ஸ்மார்ட்போன்கள் மிகப் பிரபலமானது. ஆனால், அப்பிள் நிறுவனத்தின் உயர்ரக செல்போன்கள் இதற்கு கடும் போட்டியாக உள்ளது.

இந்நிலையில், நடப்பு ஆண்டின் முதல் காலாண்டில் சாம்சங் நிறுவனத்தின் செல்போன் மூலமான நிகரலாபம் 3.5 சதவீதம் அளவுக்கு குறைந்துள்ளது. வரும் காலங்களில் தன்னுடைய ஸ்மார்ட் போன்களுக்கு மேலும் கடும் போட்டி ஏற்படும் என்று கருதும் சாம்சங், தற்போதுள்ளவற்றில் இருந்து மேலும் அழகான மற்றும் நவீன ஸ்மார்ட்போன்களை தயாரிப்பதற்காக கூடுதலாக ரூ.14 ஆயிரம் கோடியை முதலீடு செய்ய உள்ளதாக அறிவித்துள்ளது.

**2 கோடிவிற்பனை**

சாம்சங் அண்மையில் வெளியிட்ட அறிக்கையின் படி, அதன் கேலக்ஸி எஸ் 4 ஸ்மார்ட் போன் விற்பனை, இதுவரை 2 கோடியை எட்டியுள்ளது. இது அறிமுகமாகி 2 மாதத்தில் ஏற்பட்டுள்ள விற்பனையாகும். இது உண்மையானால், இதன் முன்னோடியான சாம்சங் எஸ் 3 ஸ்மார்ட் போன் விற்பனையைக் காட்டிலும், இதன் விற்பனை 1.7 பங்கு வேகமாகும்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 130.03 | 133.23 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 199.63 | 205.48 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 171.81 | 177.57 |
| சுவிஸ் பிராங் | 138.90 | 144.28 |
| கனேடிய டொலர் | 125.73 | 130.43 |
| அவுஸ்திரேலிய டொலர் | 119.62 | 124.31 |
| சிங்கப்பூர் டொலர் | 102.30 | 105.89 |
| ஜப்பான் யென் | 1.30 | 1.35 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.22 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.80 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிஹின் லங்கா விமான சேவைக்கு மூன்று புதிய விமானங்கள்

நட்டத்தில் இயங்கி வரும் இலங்கை அரசுக்கு சொந்தமான மிஹின் லங்கா விமான சேவை புதிய விமானங்கள் 3 ஐ கொள்வனவு செய்யும் பொருட்டு திறைசேரியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதில் போயிங் விமானமொன்றைக் குத்தகைக்கு பெறும் திட்டமும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச விமான சேவை நிறுவனங்களுடனான போட்டிக்கு ஈடுகொடுக்கும் வகையில் தமக்கு புதிய விமானங்கள் தேவைப்படுவதாக அந்நிறுவனத்தின் தலைவர் நிஷாந்த விக்ரமசிங்க ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

மேலும் இதற்கான நிதியைப் பெறும் பொருட்டு திறைசேரியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் இதற்கு தேவைப்படும் தொகை எவ்வளவு என தகவல் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

அண்மையில் வெளியிடப்பட்ட அரசாங்க பொது முயற்சிகள் பற்றி ஆராயும் பாராளுமன்ற குழு (கோப்) அறிக்கையின் படி மிஹின் லங்கா பெரும் நட்டம் அடைந்து வருகின்றமை உறுதியாகியுள்ளது.

கோப் அறிக்கையின் படி அந்நிறுவனமானது 2009, 2010, 2011 ஆகிய வருடங்களில் முறையே ஆயிரத்து 300 மில்லியன் ரூபா, ஆயிரத்து 221 மில்லியன் ரூபா, 940 மில்லியன் ரூபா நட்டமடைந்துள்ளது.

இது மாத்திரமன்றி அதன் இயக்குநர்களுக்கான கட்டணத்தையும் இரு மடங்காக அதிகரித்திருப்பதாக அவதானிகள் குற்றஞ்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை டுவிட்டர் சமூக வலையமைப்பில் சிலரின் கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்க மிஹின் லங்கா நட்டத்தில் இயங்குவது தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஆதரவாக பதலளித்திருந்தார். (அ-2)

வலம்புரி
விளம்பரத்தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815,
021 567 1532

# முனீஸ்வரன் சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தான சங்காபிஷேகம் எதிர்வ ரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வியாழக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

அன்றைய தினம் பிற்பகல் 5 மணிக்கு வசந்த மண்டப பூசையும் அடுத்து இரதோற்சவமும் இடம்பெறும். மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும்.(அ-2)

**விற்பனைக்கு**
Toyato Corolla (121) கார் wpkc....
விற்பனைக்கு உண்டு.
**தொடர்புகொள்ள: 0777173414**
(3479)

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**
நீல நிற Yamaha Fazer WR XXXX
இலக்கமுடைய மோட்டார் சைக்கிள்
மிகவும் மலிவு. நல்ல நிலையில்
உடன் விற்பனைக்குண்டு.
**தொ.பே: 0779107153**
தொடர்பு: A.G.செல்வம்
107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
(3480)

# இளைஞர் தின விழாவில் பாப்பரசர் பங்கேற்பு



பிரேசில் தலைநகர் ரியோ டி ஜெனிரோ நகரில் உலக இளைஞர் தின விழா நடைபெற்று வருகின்றது. இவ் விழாவிற்கு தலைமை தாங் குவதற்கென புனித பாப்பரசர் பிரான்சிஸ் வாடிகன் நகரில் இருந்து ரியோ டி ஜெனிரோவிற்கு விஜயம் செய்துள்ளார்.

பிரேசிலில் வாழும் அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் , கலைஞர்கள் இடையே நேற்று முன்தினம் அவர் சொற்பொழிவு ஆற்றினார். சொற்பொழிவுக்குப் பின்னர் பாப்பரசர் பிரான்சிஸ் மேடையின் மீது பல்வேறு தரப்பினரையும் அழைத்து வாழ்த்தினார். பாப்பரசரிடம் வாழ்த்து பெற சில இந்தியர்களும் மேடையேறினர். அப்போது வெற்று உடம்புடன் (மார்புப்பகுதியில்) காது மற்றும் கழுத்து கைகளில் மூங்கிலால் ஆன பழங்கால அணிகலன்களையும் அணிந்து வந்த ஒருவர் தனது தலைப்பாகையை பாப்பரசரிடம் அளித்து அதை அணிந்துக் கொள்ளும்படி வேண்டினார்.

சற்றும் தாமதிக்காத பாப்பரசர் அந்த தலைப்பாகையை அணிந்தபடி மக்களை நோக்கி உற்சாகமாக கையசைத்தார். பாப்பரசரின் எளிமையை அங்கு கூடியிருந்த மக்கள் மன நெகிழ்ச்சியுடன் பாராட்டினர். (அ-2)

# பல்கலைகளோடு பாடசாலைகளை இணைக்கும் வகையில் நடவடிக்கை

நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களோடு இணையும் வகையில் பாடசாலைகளை அறிமுகப்படுத்த உயர்கல்வி அமைச்சு புதிய வேலைத்திட்டம் ஒன்றைச் செயற்படுத்தவுள்ளது.


பல்கலைக்கழகங்கள் அமைந்துள்ள இடங்களுக்கு அருகில் இருக்கும் பாடசாலைகள் இத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

குறித்த பாடசாலைகளுக்கு பல்கலைக்கழகங்களில் காணப்படும் வசதிகள்போன்று ஏற்படுத்திக்கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கம் என உயர்கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் அப்பாடசாலைகளுக்கு புதிய கல்விமுறை மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுக்கவுள்ளதாக உயர்கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தில் இணைத்துக்கொள்ளவுள்ள பாடசாலைகள் சில அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வியமைச்சு, உயர்கல்வியமைச்சு இணைந்து இச்செயற்றிட்டத்தை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளன. (அ-2)



அனலை தீவு ஐயனார் ஆலயத்தின் தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்ற போது... (படம்: உ.சாஜின்)

இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து(V)<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>உயரம்: 5'7"கி.பா:18.75 செவ்1<br>தகைமை/தொழில்: **A/LDiploma in Mass media**சமுத்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ:B045 | பிறப்பு: 1990 இந்து(V)<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா : 16<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: **A/L**வங்கி பயிலுனர்<br>தொ.இ:G2128 |
| பிறப்பு: 1984 இந்து(விஸ்வகுலம)<br>நட்சத்திரம்:உத்திரட்டாதி 3<br>உயரம்: 5'7" கி.பா:40செவ் 4<br>தகைமை/தொழில்: **A/L** அச்சகம் சொந்தம்<br>தொ.இ:B2104 | பிறப்பு: 1982 இந்து(குருகுலம்)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா : 33.5 செ 1<br>உயரம்: 155 செ.மீ<br>தகைமை/தொழில்: கலைமாணி (இறுதி வருடம்)ஆசிரியை<br>தொ.இ:G2133 |
| பிறப்பு: 1981 இந்து(KO)<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>உயரம்: 5'6"<br>கி.பா : 84.50 சூ,செவ் 1<br>தகைமை/தொழில்: **BSc (surveying)**நில அளவையாளர்<br>தொ.இ:B2105 | பிறப்பு: 1978 இந்து(V)<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா :39.5 செவ் 8<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: **A/L** கணக்காளர் தனியார்<br>தொ.இ:G2136 |
| பிறப்பு: 1978 இந்து (V)<br>நட்சத்திரம்: பூராடம்<br>உயரம்: 5'6"<br>கி.பா : 62 செவ் 7<br>தகைமை/தொழில்: **A/L, BCom (1st Year)**வியாபாரம்<br>தொ.இ:B2106 | பிறப்பு: 1977 இந்து (Na)<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா : 52.5 செவ் 7<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: **A/L**<br>தொ.இ:G2140 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிச்சவீட்டு கோரியை புனரமைத்து தாருங்கள்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக் கேணியில் அமைந்திருக்கும் கோரியை (வெளிச்ச வீட்டுக் கோபுரம்) திருத்தித் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவது;

நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்த இக் கோரியானது தற்சமயம் ஒளிரும் தன்மை குறைந்து மங்கியதான ஒளியுடன் காணப்படுகின்றது.

இதனைவிட இக் கோரியில் ஆங்காங்கே வெடிப்புக்கள் ஏற்பட்டு அந்த வெடிப்புக்களின் ஊடே சில செடி கொடிகள் மரங்கள் வளர்ந்தும் காணப்படுகின்றன.

இக் கோரியை முன்னைய காலம் முதல் இன்றுவரைக்கும் கடற்றொழிலாளர்கள் ஆழ் கடலுக்கு சென்று மீண்டும் கரை சேர்வதற்கு ஒரு குறிகாட்டியாக பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த கோரின் ஒளி மங்கல் அடைந்ததும் மரங்கள் வளர்ந்தும் காணப்படுவதால் மீனவர்கள் கரை திரும்புகையில் கரையை இனங் காண்பது கடினமாக உள்ளது.

எனவே இக் கோரியை மீண்டும் புனரமைப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-ம-64)



நன்றி: மிரர்

# வேட்பாளர் தெரிவிலிருந்து சிராஸை நீக்கியதை கண்டித்து ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட இருந்த




சிராஸ் இறுதி நேரத்தில் நீக்கப்பட்டமைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றைய தினம் இடம் பெற்றுள்ளது.

இவ் ஆர்ப்பாட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்திற்கு முன்னால் சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக இடம் பெற்றிருந்தது.

யாழ்.மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலிருந்து அழைத்துவரப்பட்ட மக்களே இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த பெரும்பாலான மக்கள் தாம் ஏன் அங்கு வந்துள்ளனரென்ற உண்மை நிலை தெரியாது திண்டாடிக் கொண்டிருந்தனர்.

சிராஸ் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைத்துக் கொள்ளப்பட்டு உடனடியாக வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்படல் வேண்டும் என்று கோரியே மேற்படி ஆர்ப்பாட்டம் இடம் பெற்றிருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டிருந்த மக்களில் பெரும்பகுதியினர் சிராஸிற்கு ஆதரவாக குரலெழுப்புவர்களாகவும் ஒரு பகுதியினர் அங்கு யாது நடைபெறுகின்றதென்று நிழல் மரங்களின் கீழ் நின்று வினோதம் பார்ப்பவர்களாக நின்றிருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

மேலும் குழந்தைகள் பசியால் வீரிட்டு அழுவதையும் ஒரு சில பெண்கள் மயக்கமுற்று விழுந்ததனையும் அவதானிக்க முடிந்தது.

பின்னர் சிராஸ் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்படுவர் என உயர்மட்டத்திலிருந்து வந்த அறிவிப்பை தொடர்ந்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் நடுவில் மஞ்சி பிஸ்கட்டும் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

(அ-4)

## தொழிற்றிறன் கண்காட்சி

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடத்தப்படும் தொழிற்றிறன் கண்காட்சி நாளை செவ் வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்டச் செயலக கிராம அபிவிரு த்தி அலுவலக மாவட்ட உத்தியோகத்தர் திரு மதி நவமணி அலோசியஸ் ஜெயராஜன் தலை மையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கிராம அபி விருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ஜே.ஜே. சி.பெலிசியன், யாழ். பிரதேச செயலாளர் சுகுணரதி தெய்வேந்திரன், கௌரவ விருந்தினர்களாக புனித அடைக்கல அன்னை ஆலய பங்குத்தந்தை அருட்திரு றெஜி றாஜேஸ் வரன், புனித மரியாள் வித்தியாலய அதிபர் எஸ். மொறாயஸ் ஆகியோர் கலந்து கொள் ளவுள்ளனர் என யாழ். மாவட்ட கிராம அபி விருத்தி அலுவலக மாவட்ட உத்தியோகத்தர் திருமதி என். ஏ.ஜெயராஜன் தெரிவித்துள்ளார்.

(அ)

# சாரதி மற்றும் நடத்துநர் இடையே கைகலப்பு

(மிருசுவில்)

யாழ்.தனியார் பேருந்து புறப்படும் இடத்திற்கு முன்பாகவுள்ள வீதியில் சாரதி மற்றும் நடத்துநர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த் தகராறு கைகலப்பில் முடிந்தது.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி செல்லும் தனியார் பேருந்து தரிப்பிடத்தை விட்டு வீதிக்கு வந்த வேளை அங்கு தரித்து நின்ற மல்லாவி செல்லும் பேருந்தில் இருந்த பளை பிரதேசத்தை சேர்ந்த சில பயணிகள் புறப்பட தயாரான வவுனியா பேருந்தில் ஏறியுள்ளனர்.

இதனைக் கண்ணுற்ற மல்லாவி பேருந்தின் நடத்துநர் வவுனியா புறப்பட்ட பேருந்தை நிறுத்தி அதன் சாவியை பறித்து பின்னர் தகராறில் ஈடுபட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இரு பேருந்து நடத்துநர்களுக்கிடையிலும் வாய்த்தகராறு அதிகரித்ததோடு மல்லாவி பேருந்து நடத்துநர் ரவுடி பாணியில் இறங்க அருகிலிருந்து மரத்தடிகளை முறித்து வவுனியா பேருந்து நடத்துநரை தாக்க முயன்றுள்ளார்.

மல்லாவி பேருந்தில் இருந்த பளைப் பிரதேச பயணிகள் வவுனியா பேருந்தில் ஏற்றியமையே இப்பிரச்சினைக்கு காரணம் என சுட்டிக்ககாட்டப்பட்டுள்ளது.


இந்நிலையில் அங்கு வந்த ஏனைய சாரதிகள் இருதரப்பினரையும் சமாதானப் படுத்தி வவுனியா பேருநதை அனுப்பி வைத்தனர்.

மேற்படி பிரச்சினைகள் இவ்விடத்தில் வழமையாக நடைபெறுவதுண்டு. இதனால் பயணிகளே தொடர்ந்து பாதிக்கப் படுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ-9-85)





நெடுந்தீவு கலாசார பேரவை மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலகம் என்பன அண்மையில் நடத்திய நெடுந்தீவு கலாசார பெருவிழாவில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவதையும் நெடுந்தீவு பிரதேச செயலகத்திற்கான கொடி மற்றும் இலட்சினையை வடிவமைத்தமைக்காக பி.சுகேந்திரனுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தேர்தல் சுதந்திரமாக நடைபெற படையினரை முகாம்களில் முடக்குக

## சம்பந்தன் எம்.பி. வலியுறுத்து



(கொழும்பு)

**வடமாகாண சபைத்தேர்தல் சுதந்திரமான முறையில் இடம்பெறவேண்டுமாயின் படைத்தரப்பினரை முகாம்களில் முடக்கவேண்டும் என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

வடமாகாண சபைத்தேர்தல் மற்றும் வேட்பாளர்கள் தெரிவு தொடர்பில் பி.பி.சி தமி ழோசைக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடமாகாண சபைத்தேர்தலுக்கான வேட்பாளர்கள் தொடர்பில் ஆராயப்பட்டு ஏறத்தாழ இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. ஐந்து மாவட்டங்களுக்குமான எமது பட்டியல் இன்னமும் சில நாட்களில் சமர்ப்பிக்கப்படும்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளின் தலைவர்களும் ஒன்றுகூடி தங்களது வேட்பாளர்கள் தொடர்பாக ஏகமனதாக முடிவெடுத்து ஒற்றுமையாக ஒருமித்து மக்களின் ஆதரவைப் பெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. ஆயினும் நியமனப்பத்திரங்கள் இன்னமும் தாக்கல் செய்யப்படவில்லை.இந்நிலையில் ஏனைய கட்சிகளிலிருந்து அவற்றின் தலைவர்கள் எவராவது போட்டியிட விரும்பினால் அதற்கு எவ்விதமான ஆட்சேபனையும் இருக்காது. அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும்.

இடதுசாரிக்கட்சிகளின் ஆதரவை நாங்கள் வரவேற்கின்றோம். அதேபோன்று அவர்களுக்கும் நாம் எமது ஆதரவை வழங்குவோம். வடமாகாணசபைத் தேர்தலைப் பொறுத்தமட்டில் விசேடமாக அவர்களுக்கு வேட்பாளர்கள் தெரிவில் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருப்பதாக நான் கூறமாட்டேன்.

ஆனால் அவர்களுடன் தொடர்புடைய நபர்களது பெயர்களும் எங்களுடைய பட்டியலில் இருக்கலாம். அந்தக் கட்சிகளுடைய வேட்பாளர்களாக எமது கட்சியில் எவரும் போட்டியிடவில்லை. அவர்கள் அனைவரும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் வேட்பாளர்கள்தான். அவர்களுடைய கருத்துக்களும் உள்வாங்கப்பட்டுத்தான் முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கையின் படைத்தரப்பினர் அரசாங்கத் தரப்பில் செயற்பட்டு ஆளும் கட்சிக்காக வேட்பாளர்களைத் தேடுவதில் பங்களித்து வருகிறார்கள். அத்துடன் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் சார்பில் தேர்தலில் முன்னிறுத்தப்படவுள்ளவர்கள் படைத்தரப்பினரால் அச்சுறுத்தப்படுகின்றனர். இத்தகைய செயற்பாடுகள் தொடர்பில் எமக்கு முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

வடமாகாணசபைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னதாகவே படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைகள் தேர்தலின் போது அரசாங்கத்தின் சார்பில் அவர்கள் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றது.

படைத்தரப்பின் இத்தகைய நடவடிக்கைகள் நிறுத்தப்படாவிடின் அது வேறு பிரச்சினைகளுக்கு காரணமாக அமையும். இந்தத் தேர்தலைக் கண்காணிப்பதற்காக எல்லோரும் சுதந்திரமாகச் செயற்படக்கூடிய மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டிருக்கின்றோம்.

தேர்தலின்போது படைத்தரப்பினர் கட்டுப்படுத்தப்பட்டு அவர்கள் தேர்தல் கருமங்களில் ஈடுபடாதிருக்க வேண்டும். அரசாங்கம் ஒரு சுதந்திரமான தேர்தலை நடத்தவிரும்பினால் படைத்தரப்பினரை முகாம்களில் வைத்துக் கொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# பிரித்தானிய முதலீட்டாளர்கள் இலங்கை பயணிக்க தயக்கம்

## பிரிட்டன் பிரதி உயர்ஸ்தானிகர்

பிரித்தானிய முதலீட்டாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்யத் தயங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பணிநீக்கம் செய்யப்பட்டமை மற்றும் காணிப்பிரச்சினைகள் போன்றவை காரணமாக இலங்கையில் முதலீடு செய்வதில் பிரித்தானிய முதலீட்டாளர்கள் தயக்கம் காட்டிவருவதாக இலங்கைக்கான பிரித்தானிய பிரதி உயர்ஸ்தானிகர் ரொபி புலொச் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாகவே யுத்தத்தின் பின்னர் பிரித்தானிய முதலீட்டாளர்கள் அதிகளவில் இலங்கைக்கு வருகை தரவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பௌதீக கட்டமைப்பு மாற்றங்கள் வரவேற்கப்பட வேண்டிய வகையில் அமைந்துள்ள போதிலும் சட்டப்பிணக்குகள் குறித்த விவகாரங்களில் அச்சுறுத்தல்கள் நிலவி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

அச்சம் காரணமாக அதிகளவான பிரித்தானிய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய விரும்பவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முதலீட்டாளர்களையும் சுற்றுலாப் பயணிகளையும் அதிகளவில் ஈர்க்க வேண்டுமாயின் இலங்கை சர்வதேச சமூகத்திலிருந்து தன்னை தனிமைப்படுத்திக்கொள்ளக்கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீண்டகாலமாக யுத்தம் நிலவி வந்த இலங்கையில் அரசாங்கம் தற்பொழுது மேற்கொண்டுள்ள சில விடயங்கள் பாராட்டப்பட வேண்டியவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# வயது முதிர்ந்த மரணதண்டனைக் கைதிகள் விடுதலை

(கொழும்பு)

வயது முதிர்ந்த மரணதண்டனைக் கைதிகளை விடுதலை செய்வது குறித்து ஆராயுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

மரணதண்டனை விதிக்கப்பட்டு நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூத்த குடிமக்களை விடுதலை செய்வதற்கான சாத்தியங்கள் குறித்து ஆராயுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிறைச்சாலைத் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளார்.

அறுபது வயதுக்கும் கூடியதாக பத்தாண்டுகளுக்கு மேல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மரண தண்டனைக் கைதிகளை விடுதலை செய்வது குறித்தே ஆராயப்படவுள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலை யில் 50 இற்கும் மேற்பட்ட வயது முதிர்ந்த மரணதண்டனைக் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# கடலில் நகர வளாகம் உருவாக்க உடன்படிக்கை கைச்சாத்து

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் கடலை நிரப்பி நகரவளாகம் ஒன்றை உருவாக்குவதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

230 ஹெக்டெயரில் நகரத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமே கைச்சாத்திடப்பட்டுள்ளது. சீன நிறுவனத்திற்கும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கும் இடையிலேயே குறித்த ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்திடப்பட்டது.

17 ஆயிரத்து 920 கோடி ரூபா செலவிலேயே இந்த நகர வளாகம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

புதிய கொழும்பு தெற்கு துறைமுகத்திற்கு அடுத்ததாகவுள்ள 230 ஹெக்ரேயர் நிலப்பரப்பை துறைமுக அதிகார சபை மீளப் பெற்றுக் கொள்ளவுள்ளதாக துறைமுக அதிகார சபையின் தலைவர் பிரியாத் பண்டு விக்ரம தெரிவித்துள்ளார்.

இலங்கை தலைநகரின் கரையோரத்தை நவீனமயப்படுத்தும் விதமாக சீன தொடர்பாடல் கட்டுமான நிறுவனமானது துறைமுக நகரம் ஒன்றை உருவாக்க ஒப்புக் கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நாங்கள் தற்போது துறைமுகத்திற்கு அருகிலுள்ள நிலத்தை துறைமுக அதிகாரசபையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து அங்கே சிறிய நகரம் ஒன்றை உருவாக்கவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கான பணிகள் செப்டெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்படும். புதிய துறைமுக நகரத்தைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நிலத்தை மீள உரிமையாக்கும் நடவடிக்கையானது 39 மாதங்களுக்குள் நிறைவடைந்து விடும் என நாம் நம்புகின்றோம் என்றும் அவர் கூறினார். (அ-2)



**யாழ் இந்துக் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள பொதுக் குடிநீர் கிணற்றில் பொது மக்களால் அன்றாடம் பாவிக்கப்படும் நீர் வழிந்தோட வாய்க்காலின்றி வீதியோரத்தில் தேங்கி நின்று நுளம்புப் பெருக்கத்திற்கு ஏற்றதொரு சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. அத்துடன் அவ் வீதியால் பயணிக்கும் பொதுமக்களும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். வீதியோரத்தில் தேங்கி நிற்கும் நீரை படத்தில் காணலாம். (படம்-உ.சாளீன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதை கூறும் கதைகள்

தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலேல் தோன்றாமை நன்று என்ற வள்ளுவர் பெருந்தகையின் வாக்குக்கு ஏற்ப புகழ் வெளியீட்டு ஆசிரியர் லோகநாதன் விஜேந்திரனின் சிந்தனையில் உருவான **"கதை கூறும் கதைகள்"** என்னும் கதைத் தொகுப்பு. ஆசிரியர் தனது சிந்தனைகளையும் தான் சமூகம் மீது கொண்டுள்ள கரிசனையையும் இந்நாவலினூடாக வெளிப்படுத்தியுள்ளார்.

ஆசிரியர் தனது முன்னுரையில் **''பத்திரிகைகளில் முன்னர் வெளிநாட்டுச் செய்திப்பகுதியில்''** முக்கிய இடம் பிடித்த பல குற்றச் செயல்கள், தற்போது எங்கள் பத்திரிகைகளின் உள்ளூர் செய்திப் பகுதிகளில் முழுவதுமாக நிறைந்திருக்கின்றன. இந்தச் செய்திகள் எங்கள் சமூகத்தின் தற்போதைய நிலையை எடுத்துக் கூறுகின்றன. தொடர்ந்தும் கடந்தவை கட ந்து போகட்டும் இனிக் கடக்கப் போபவை பற்றிச் சிந்திப்போம் என்று கூறியிருப்பது முற்றுமுழுதாக எமது எதிர்காலச் சந்ததியினராகிய இன்றைய மாணவர்களின் கல்வி, ஒழுக்கம் என்பவற்றில் நாம் இனியும் அசமந்தமாக இருக்கக் கூடாது என்னும் செய்தியை எமக்குக் கூறி நிற்கின்றது.

இந்நூல் முற்றுமுழுதாக பெற்றோர்களையும் மாணவர்களையும் இலக்கு வைத்து எழுதப்பட்டிருப்பினும் பாடசாலைகள், திணைக்களங்களில் நற்சிந்தனை கூறுபவர்களுக்




கும், அறிவுரை கூறுவோருக்கும் பயன்மிக்க ஒன்றாக அமைகின்றது என்பதில் ஐயமில்லை. நூலில் மிகச் சிறந்த மொழிநடைகையாளப்பட்டிருப்பதானது எவரும் இலகுவாக நூலை வாசித்துப் புரிந்து கொள்வதற்கு சாதகமாக உள்ளது. பட்டமும் நூலும் என்னும் முதலாவது கதையில் பட்டம் மாணவர்களையும் நூல் பெற்றோர்களையும் சித்தரித்து கூறப்பட்டுள்ளது.

பட்டம் பறப்பதற்கு காற்று அவசியம். காற்றடித்தால் பட்டம் பறக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததோர் விடயம். ஆனால் தொடர்ந்தும் பட்டம் உயரப் பறக்க நூல் எவ்வளவு துணை நிற்கின்றது என்பது மறை முகமான விடயம். நூல் பட்டத்தை பிடித்து இழுத்து வைத்திருக்கின்றது. இவ் இழுவை தான் பட்டத்தை நிலைத்து நிற்க வைக்கின்றது. இது போலவே மாணவர்கள் வாழ்வில் உயரவும் மேன்மை அடை

**ஜொனி மதுரநாயகம்**
**சட்டத்தரணி**


யவும் பெற்றோர்கள் மாணவர்களின் மீது விதிக்கும் கட்டுப் பாடுகள், கண்டிப்புக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது இக் கதையில் கூறப்பட்ட முக்கிய விடயமாகும்.

''தோட்ட வேலியும் ஓட்டையும்''கதை நாம் கண்டும் காணாமலும் செய்யும் தவறுகளின் விளைவுகள் பற்றிக் கூறுகிறது. தோட்ட வேலியில் ஓர் ஆடு நுழையுமளவு இடைவெளி இருந்தால் அந்த வேலியே அர்த்த மற்றதாகிவிடும். இது போலவே எமது சிறிய தவறுகளும் எம் அடையாளங்களை அழித்து எம்மை தப்பானவர் களாக அடையாளப்படுத்தும் என்பது ஆசிரியரின் கருத்தாக இருக்கின்றது. இவ்வாறு இந்நூலில் இடம் பிடித்துள்ள 31 கதைகளூடாகவும் வெளிப்படுத்தப்படும் செய்தி கள் யாவருக்கும் மனதில் பதியும் வண்ணம் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்நூலில் உள்ள இரண்டு ஓநாய்கள் கதை சிறுபிள்ளைகளின் பெற்றோருக்கு முக்கியமான ஓர் செய்தியைச் சொல்கின்றது. சிறு வயதில் கோபம், பொறாமை, ஆக்ரோஷம், அகங்காரம் போன்ற பழக்கங்களுடன் வளரும் குழந்தைகளை அப் பழக்கங்களே வழிநடத்தும். அவர்கள் சமூகத்திற்கு தப்பானவர்களாகவே வெளித்தெரிவர். மாறாக அன்பு, பாசம், இரக்கம், சந்தோஷம், உற்சாகம் என்பவற்றுடன் வளர்க்கப்படும் குழந்தை சமூகத்திற்கு அந்த நல்லனவற்றையே திரும்பவும் வெளிப் படுத்தும் என்பதே இக் கதை மூலம் வெளிப்படுத்தப்படும் விடயம்.

நல்ல பழக்கங்களாலும் சிந்தனைகளாலும் சிறுவர்களின் மனதை நிறைத்துவிட வேண்டும். அல்லாவிடினும் தீயவைகள் தானாவே அவர்களின் மனதில் குடியேறிவிடும் என்பது யதார்த்தமான உண்மை. இது இந்நூலிலும் அழுத்தமாக கூறப்பட்டுள்ளது. மேலும் இயற்கை வெறுமையை வெறுக்கின்றது. அதனால் வெறுமையான மனதுகளில் தீயசிந்தனைகளும் கெட்ட எண்ணங்களும் இலகுவில் விதைக்கப்பட்டு விடும் என்ற கருத்தினூடாக கூறப்படுவது பெற்றோர்கள் பிள்ளைகளை ஓய்வாக இருக்க விடாது. எப்போதும் ஏதாவது இலக்குகளை நோக்கி ஓடிக் கொண்டிருக்க செய்யவேண்டும் என்பதுதான்.

எனவே இந்நூல் நாடு முழுவதும் உள்ள அனைவரும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக அனைத்துக் கடைகளிலும் கிடைக்கும். எனவே ஆசிரியரின் கருத்துக்கள் அனைத்து தரப்



**லோ.விஜேந்திரன்**
**(நூலாசிரியர்)**

பினர்களிட மும் போய் சேரும் என்பது எனது நம்பிக்கையாகும். காலம் வரைந்து விட்டுச் சென்ற கனமான பதிவுகளின் மத்தியில் ஆசிரியர் லோகநாதன் விஜேந்திரன் எமக்குத் தந்திருக்கும் கதைகூறும் கதைகள் நிச்சயம் காலம் கடந்தும் வாழ்வது மட்டுமன்றி இக் கதைகளை வாசிப்பதன் மூலம் 99 ஆடுகள் அல்லாவிட்டாலும் ஒரு ஆடு ஆயினும் மனந்திருப்புமானால் அது ஆசிரியரின் பெரு வெற்றியாகும். அவர் எழுத்து வாழ்க! அவர் கொண்ட கொள்கை வாழ்க! இந்த உல கம் இன்னும் அவரிடம் நிறைய எதிர்பார்த்து அவரை வாழ்த்தி நிற்கின்றது.

---

# மக்களை கஷ்டத்துக்குள்ளாக்கியோர் இன்று முதலைக்கண்ணீர் வடிக்கின்றனர்

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் அட்டவணைகளுக்கு ஏற்ப செயற்பட்டு மக்களை கஷ்டத்திற்கு உள்ளாக்கியவர்கள் இன்று முதலைக் கண்ணீர் வடிப்பதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.


2002 ஆம் ஆண்டில் இருந்து நோர்வேயின் அனுசரணையில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் போது தமது சொந்த நலன்களைக் கருதி சிலர் செயற்பட்டனர்.

எனினும், இன்று அவர்கள் விடுதலைப்புலிகளால் கேடயங்களாக பயன்படுத்தப்பட்ட மக்களிடம் போலிக் கண்ணீர் வடிப்பதாக கோத்தபாய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

உகண்டா விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர் ஆங்கில செய்தித்தாளுக்கு அவர் வழங் கிய செவ்வியில் இந்தக் கருத்துக்களை குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

2007 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பணியாளர்களை விடுதலைப் புலிகள் தடுத்து வைத்த



போது, கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் தூதரகம் புலிகளுடன் இரகசிய பேச்சுக்களை நடத்தி அவர்களை விடுவித் தது.

அதுவும் ஐக்கிய நாடுகளின் நியூயோர்க் தலைமையகம் கேள்வி எழுப்பிய பின்னரே அந்த பணியாளர்கள் விடுவிக்கப்பட்டனர். இந் நிலையில் சிறுவர் போராளிகள் விடயத்தில் ஐக்கிய நாடுகளின் கோரிக்கைகளைக் கூட விடுதலைப் புலிகள் செயற்படுத்தவில்லை என்று கோத்தபாய குற்றம் சுமத்தினார். (அ-2)

# ஹலால் சான்றிதழை நீக்காவிடின் நாடளாவிய ரீதியில் போராட்டம்

## பொதுபல சேனா எச்சரிக்கை

(கொழும்பு)

ஹலால் சான்றிதழை முழுமையாக நீக்காவிடின் நாடளாவிய ரீதியில் போராட்டம் வெடிக்கும் என பொது பலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுக்கு தெரிவித்துள்ளதாகவும் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்காவிடின் தாம் நிச்சயமாக அதனைத் தடுத்து நிறுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவிருப்பவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஹலால் சான்றிதழை நிறுத்த வேண்டும் என கோரி நாம் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண் டோம். அதன் விளைவாக பேச்சுவார்த்தைகள் பல்வேறு மட்டங்களில் முன்னெடுக்கப்பட்டதுடன் அதனை நீக்குவதாகவும் உறுதியளிக்கப்பட்டது. ஆனால் அந்த வாக்குறுதி தற்போது மீறப்பட்டுள்ளது.

சந்தைகளில் சென்று பார்த்தால், ஹலால் இலட்சனைகள் பொறிக்கப்பட்ட உணவுப் பொருட்களைக் காணமுடிகின்றது. எனவே அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து அதனை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நாம் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

எமது இந்த கோரிக்கைக்கு உரிய பதில் கிடைக்கும் என நாம் எதிர் பார்க்கின்றோம். அவ்வாறு கிடைக்கவில்லையெனில் மீண்டும் ஹலால் சான்றுக்கு எதிராக பாரிய போராட்டம் நடத்தி அதனை நிறுத்தியே தீருவோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# 6 கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் புறநிலைப் படிப்புக்கள் அலகில் 6 கற்கை நெறிகளை ஆரம்பிக்கவுள்ளதாக அதன் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் தொடர்பாடலுக்கான ஆங்கிலம், மனித உரிமைகள், அலுவலக முகாமைத்துவம், முன்பள்ளிக்கல்வி, அனர்த்த முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம் ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

எனவே இதில் கற்க 18 வயதுக்கு மேற்பட்டோர் விண்ணப்பிக்கமுடியும் என அவர்மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# தமிழக மக்களின் மனநிலையை மத்தியரசு புரிந்துகொண்டுள்ளது

## அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழர்கள் விவகாரத் தில் தமிழக மக்களின் மன நிலையை புரிந்து கொண்டு இந்திய மத்திய அரசு செயற்பட்டு வருகிறது என்று மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

சென்னை சத்தியமூர்த்தி பவனில் செய்தியாளர்களிடம் அவர் மேற்கண்ட வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த விவகாரத்தில் தமிழக மக் களின் மனநிலையை இந்திய மத்திய அரசு, புரிந்து கொண்டுள்ளது. அதன் வெளிப்பாடுதான் முதல் அமைச்சர் ஜெயலலிதா, தி.மு.க. தலைவர் கருணாநிதி மற்றும் கம்யூனிஸ்டு தலைவர்களுக்கு எழுதிய கடிதமாகும். இக்கடிதத்தில் பிரதமர் மத்திய அரசின் நிலைப் பாட்டைத் தெளிவாக அவர்களுக்கு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சிங்களவர்களுக்கு இணையான பாதுகாப்பு, உரிமை நலன், அதிகாரத்தில் சம பங்கு உள்ளிட்ட அனைத்து சாராம்சங்களையும் உள்ளடக்கியது தான் ரஜீவ்-ஜெயவர்த்தன ஒப்பந்தம். அந்த சாராம்சத்தில் எந்த குறையும் வராதபடி நடைமுறைப்படுத்த மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்றார். (அ-2)

# பொலிஸாருக்கு எதிராக 209 முறைப்பாடுகள் பதிவு

பொலிஸார் துன்புறுத்தல்களை மேற்கொண்டதாக மனித உரிமை ஆணைக்குழுவிடம் 209 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பொதுமக்கள் இவ்வாறு பொலிஸாருக்கு எதிராக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரையில் 200 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்தப்படும் என மனித உரிமை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

1996 ஆம் ஆண்டு மனித உரிமைச் சட்டத்தின் கீழ் மனித உரிமை ஆணைக்குழு விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமென தெரிவித்துள் ளது. (அ-2)

# மு.காங்கிரஸிலிருந்து சேகுதாவூத் விலகுவார்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர ஸின் தவிசாளர் பசீர் சேகுதாவூத் கட்சியை விட்டு விலகிச் செல்லவுள்ளார் என எதிர்பார்க்கப்படுகிறது. கட்சித் தரப்புக்கள் இதனைத் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் ஐக்கிய மக்கள் முன்னணியின் சின்னத்தின் கீழ் போட்டியிட வேண்டும் என்று சேகுதாவூத் வலியுறுத்தி வந்தார்.

எனினும் அதனை செவிமடுக்காத கட்சியின் தலைமை தமது கட்சி மாகாண சபைத் தேர்தலில் தனித்து போட்டியிடும் என்ற தீர்மானத்தை எடுத்துள்ளது.

இந் நிலையில் எதிர்வரும் 5 ஆம் திகதியன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் கூடி இந் நிலைமைகள் தொடர்பில் ஆராயவுள்ளது. (அ-2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

529

## பாதாள ராட்சசன்



மகதராஜ்யத்தை ஆண்டு வந்த சக்திசேனரின் ஆட்சிக்காலத்தில் ஒரு சமயம் சாதிக் கலவரம் உண்டாயிற்று. பல சாதிகளைச் சேர்ந்தவர்களிடையே ஒற்றுமை குறைந்து, சண்டை, சச்சரவு பெருகின. நாட்டின் ஒழுங்கும், கட்டுப்பாடும் குலைந்தது. ஒவ்வொரு சாதியினரும் தங்கள் முக்கிய கடமைகளைப் புறக்கணித்து தேவையற்ற வம்பிலும், வழக்கிலும் ஈடுபட்டதால், ராஜ்யத்தின் அமைதி குலைந்தது. கலவரத்தை ஒடுக்க, சக்திசேனர் புதிதாகப் பல சட்டங்களை இயற்றினார். அப்படியும், சண்டை சச்சரவு குறையவில்லை.

உடனே, தன் முதன் மந்திரி சர்மாவை மன்னர் தீவிர ஆலோசனை செய்ய அழைத்தார். "மந்திரியாரே! நம் ராஜ்யத்தில் ஏற்பட்டு வரும் சாதிக் கலவரங்களை ஒடுக்கப் பல முயற்சிகள்

### அம்புலிமாமா கதைகள்

நான் செய்தும் அவை பலனளிக்கவில்லை. உங்களுக்குப் புதிதாக ஏதாவது யோசனை தோன்றி உள்ளதா?" என்று கேட்டார். "மகாராஜா இந்தப் பிரச்சினைகளுக்கு மூலகாரணம் என்ன என்பதைவிளக்க முதலில் உங்களுக்கு ஒரு கதை சொல்கிறேன். அதை கவனமாகக் கேளுங்கள்" என்றார்.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பாதாளலோகத்தில் ராட்சசர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். ஒருசமயம், அகோரன் என்ற ராட்சசன் பாதாளலோகத்தை ஆண்டு வந்த ராட்சச மன்னனை எதிர்த்துக் கலகத்தில் இறங்கினான். உடனே ராட்சச மன்னன் அவனை பாதாளலோகத்திலிருந்து வெளியேற்ற, அவன் பூலோகம் வந்து சேர்ந்தான்.

ஏராளமான மனிதர்கள் வாழும் பகுதியை அடைந்ததும், அவனுக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. ஏனெனில், அவனுக்குப் பசித்த போதெல்லாம், உண்பதற்கு நிறைய மனிதர்கள் கிடைத்தனர். அவனுடைய அகோரப் பசிக்கு நூற்றுக்கணக்கான மனிதர்கள் பலியாக, பூலோகமெங்கும் கலவரம் உண்டாகியது.

அகோரன் இன்னும் சில ஆண்டுகள் பூமியில் வசித்தால், மனிதகுலமே நசித்துப் போகும் என்று தோன்றியது. அகோரன் அவ்வாறு அட்டகாசம் செய்து வந்த காலத்தில், பூலோகத்தில் பல ராஜ்யங்களும், பல சிற்றரசர்களும் இருந்தனர். ஆனால், அவர்களுக்குள் ஒற்றுமை நிலவவில்லை. ஒவ்வொரு மன்னனும் தன் பக்கத்து ராஜ்யத்து மன்னனுடன் விரோதம் பாராட்டி வந்தான். அடிக்கடி போர் மூண்டதன் விளைவாக, ஆயுதங்கள் ஏராளமாகத் தயாரிக்கப்பட்டன. மேலும் புதுவிதமான



ஆயுதங்களைக் கண்டுபிடிப்பதிலும், படையெடுக்கத் திட்டம் வகுப்பதிலுமே மன்னர்கள் காலங்கழித்தனர்.

அதனால், அகோரன் திடீரென ஒரு ஊரில் தோன்றும் போது, ஊர் மக்கள் திரண்டு அவனை ஆயுதங்களினால் தாக்கினாலும், குறைந்த எண்ணிக்கை கொண்ட மக்களால் அவனை ஒன்றும் செய்யமுடியவில்லை. சாதாரண ஆயுதங்கள் அவன் மீது எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

அப்போதுதான் அவர்களுக்குத் தாங்கள் தனிப்பட்ட முறையில் அவனை எதிர்க்க முடியாது என்ற ஞனோதயம் உண்டாயிற்று. பூலோகம் முழுவதும் ஒன்று சேர்ந்து ஒரே நேரத்தில் தாக்கினால் அவனை வதம் செய்ய முடியும் என்ற உண்மை புலப்பட்டது.

உடனே, பூலோகத்திலிருந்த அனைத்து மன்னர்களும் ஒன்று கூடினர். வயது முதிர்ந்த ஒரு மன்னர், "லட்சம் எறும்புகள் ஒன்று சேர்ந்தால் ஒரு பாம்பையே கொல்லமுடியும். மெலிதான புற்களை ஒன்று சேர்த்து கயிறாக்கினால் அதைக் கொண்டு ஒரு யானையைக் கூடக் கட்டிப் போடமுடியும். அதுபோல், நாம் அனைவரும் ஒன்று திரண்டு அவனைத் தாக்குவோம்!" என்று அறிவுரை கூறினார். பூலோக மனிதர்கள் அனைவரும் ஒன்றுசேர, எண்ணிக்கை கோடியைத் தாண்டியது.

அனைவரும் தங்கள் பொதுப் பகைவனை எதிர்க்க ஒருங்கிணைந்து செயற்பட்டனர். மக்கள் ஒன்றுகூடி அகோரனைச் சூழ்ந்து கொண்டுதாக்கினர். முதன் முதலாக அகோரன் மிரண்டு போனான்! பயந்து ஓடிய அகோரனை, மக்கள் துரத்திச் சென்று விடாமல் தாக்க, காயமடைந்த ராட்சசன் ஓடித் தப்பித்துக் கொண்டு காட்டிற்குள் புகுந்தான்.

மக்கள் தங்கள் சாதி, மத பேதங்களை மறந்து ஒற்றுமையாகி விட்டனர் என்றும், இனி அவர்களோடு தன்னால் மோத முடியாது என்றும் தெரிந்து கொண்ட அகோரன், அதன்பிறகு மனிதர்களையே மறந்துவிட்டு, காட்டில் வாழும் மிருகங்களை மட்டுமே கொன்று தின்ன ஆரம்பித்தான்.

ஒருநாள் காட்டில் ஒரு பெண்ணைக் கண்ட அகோரன் பல நாட்களுக்குப் பின் மனித மாமிசம் கிடைக்கப் போகிறது என்ற மகிழ்ச்சியில், அவள் மீது பாய, அவள் திடீரென ஒரு ராட்சசியாக மாறினாள். அப்போதுதான் அவளும் பாதாளலோகத்து வாசி என்று தெரிந்து கொண்டான். அவளை அவன் ஏற்கனவே பாதாளலோகத்தில் பார்த்திருக்கிறான். அவள் பெயர் அகோரிகா!

அவனைக் கண்டதுமே அவள், "அகோரா! உன்னைத் தேடித்தான் நான் பூலோகம் வந்தேன். நீ சென்றபிறகு எனக்கு அங்கே இருக்கவே பிடிக்கவில்லை" என்றாள். அவளிடம் தன் பூலோக அனுபவங் களைப் பகிர்ந்து கொண்ட அகோரன், "பல நாட்களுக்கு எனக்கு மனித மாமிசம் தாராளமாகக்



கிடைத் தது. இனி அது கிடைக்காது. ஏனெனில் பூலோக மனிதர்கள் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாகி விட்டனர். ஆகவே, நாம் இந்தக் காட்டிலேதான் வசிக்க வேண்டி வரும்!" என்றான்.

"அடப் பைத்தியமே!" என்ற அகோரிகா "மனிதர்கள் புத்திசாலிகள் தான்! ஆனால், அவர்களிடையே காணபடும் ஒற்றுமை தற்காலிகமானது தான்! நாம் இந்த உருவத்தை விட்டு, மனித உருவம் எடுத்து அவர்களிடையே வாழ்வோம்! பிறகு அவர்களுடைய ஒற்றுமையைக் குலைப்போம்! அதை செய்து விட்டால் போதும்! நானும், நீயும் பூமியில் மனிதர்களிடையே ஆனந்தமாக வாழலாம்!" என்றான்.


மறுகணமே இருவரும் மனித உருவம் எடுத்து, ஊருக்குள் நுழைந்தனர். அகோரிகா சொன்னதுபோல் மனிதர்கள் புத்திசாலிகளாக இருந்தும் சுயநலம் மிக்கவர்களாக இருந்தனர். அகோரனும், அகோரிகாவும் மெதுவாக மனிதர்களிடையே சாதி, மத, மொழி வேற்றுமைகளுக்கான விதைகளை ஊன்றினர். சிறிது சிறிதாக மக்களிடையே சாதி மதக் கலவரங்கள் உண்டாயின. மக்கள் ஒருவருக்கு ஒருவர் தாக்கி இறக்க அவர்களின் உடல்களை அகோரனும், அகோரிகாவும் தின்றனர்.

இருவருக்கும் வாழ்க்கை மிக நன்றாக அமைந்துவிட்டதால் பூலோகத்திலேயே நிரந்தரமாகத் தங்கிவிட முடிவு செய்தனர். அவர்கள் இருவரும் மண வாழ்க்கையில் இணைய வாரிசுகளும் தோன்றின. அவர்களிடம், "குழந்தைகளே மனிதர்களுக்கு நாம் ராட்சசர்கள் என்று தெரியாத வண்ணம் நடந்து கொள்ளுங்கள். தெரிந்தால் அவர்கள் மீண்டும் ஒற்றுமையாகச் சேர்ந்து நம்மை ஒழித்து விடுவார்கள்" என்று இருவரும் புத்திமதி கூறினர்.

மேற்கூறிய கதையை இந்த இடத்தில் நிறுத்திய மந்திரி, "இன்றும் அகோரனுடைய சந்ததியினர் நம் இடையே பரவியிருப்பதுதான் சாதிக் கலவரத்திற்கு முக்கிய காரணம்! அவர்களைக் கண்டுபிடித்து முளையிலேயே அடக்கினாலேயொழிய சாதிக் கலவரங்கள் ஒழியாது" என்றார்.

தொடர்ந்து "மகாராஜா! மனிதகுலம் 'அமைதியான வாழ்கையைத் தான் விரும்புகிறது. அவர்களுக்கிடையே இவ்வாறு சண்டையும் பூசலும் உண்டாகிறதெனில், அவர்களைத் தூண்டிவிடும் தீயசக்திகள் சில அவர்களிடையே ஒளிந்துள்ளனர். அவர்களைக் கண்டுபிடித்து யாராக இருந்தாலும் கடுமையாகத் தண்டிக்க வேண்டும்!" என்றார்.

மந்திரியின் யோசனையைக் கேட்டுத் தெளிவடைந்த சக்திசேனர், மக்களிடையே முளைத்திருந்த தீயசக்திகள் என்னும்களைச் செடிகளை அகற்றி



னார். அதன்பிறகு மகதராஜ்யம் அமைதியாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை

## 2013 (ஓகஸ்ட்) மாதிரி வினாத்தாள் — மேல்மாகாணம்

# இரசாயனவியல் – II

### பகுதி IIA

(1) (a) **பின்வருவனவற்றுள் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து விடையளிக்குக.**

(i) Be, B, C, N இல் இலத்திரனாட்டம் கூடியது?

(ii) $Na_2O$, MgO, $Al_2O_3$ இல் உயர் உருகுநிலை உடையது?

(iii) $NO_2$, $N_2O$, $NH_4^+$ இல் N இன் மின்னெதிர் இயல்பு கூடியதாக அமைவது?

(iv) HF, HCl, HBr இல் அமிலத்தன்மை கூடியது?

(v) $BeF_2$, $MgF_2$, $CaF_2$ இல் நீரில் கரையும் தகவு கூடியது?

(b) $HZO_3^{2-}$ எனும் அயனின் அணுக்களின் கட்டமைப்பு

```
     O
     |
H- Z - O   ஆகும்.
     |
     O
```

(i) இதற்கு பொருத்தமான உலூயியின் கட்டமைப்பை வரைக.


(ii) Z இன் ஆவர்த்தன கூட்டமாக அமையப் பொருத்தமானது

(iii) Z இன் அணு எண் 30 இலும் குறைவு எனில் Z இனை இனங்காண்க.

(iv) Z இன் ஓபிற்றல் கலப்பு வகை யாது?

(v) $ZO_4^{2-}$ ஆனது Z இன் பிறிதொரு அனயன் இதன் கேத்திரகணித வடிவத்தை வரைக.

(c) X,Y,Z மூன்றும் ஒரே ஆவர்த்தன மூலகங்கள் சிலவாகும். இவற்றின் அணுவெண்கள் 20 இலும் குறைவு. இவற்றின் சில சேர்வைகளின் கேத்திரகணித வடிவங்கள்



I II III

(i) மூலகங்கள் X,Y,Z இனை பெயர் ரீதியாக இனங்காண்க.

(ii) இச் சேர்வைகளில் X, Y, Z மூன்றினதும் ஒட்சியேற்ற எண்கள் யாவை?

(iii) இச் சேர்வைகளின் மைய அணுக்களின் கலப்பினை ஏற்படுத்தும் ஓபிற்றல்களை இனங்காண்க.

I .................... II ................ III ....................

(iv) இச் சேர்வைகளில் X, Y, Z இன் இலத்திரன் சோடிகளின் கேத்திர கணிதம் யாது?

(v) சேர்வை III இல் Z - O - Z இன்

(i) பிணைப்புக் கோணம் அண்ணளவாக யாது?

(i) Z - O - இடையிலான பிணைப்பை உருவாக்கும் ஓபிற்றல் வகைகள் யாவை?

(2) NaOH உடன் பின்வருவன அடையும் தாக்கத்திற்கு பொருத்தமான ஈடுசெய்த சமன்பாடுகளை தருக.

(i) $I_2$ உடன்

(ii) S உடன்

(iii) $NO_2$ உடன்

(iv) இத் தாக்கங்கள் மூன்றும் ஒரே வகைக்குரியனவா, அல்லவா என்பது எவ்வாறு விளக்குவீர்?

(b) பின்வரும் குளோரைட்டுக்களை கருதுக.

$MgCl_2$, $BiCl_3$, $PCl_3$, $NCl_3$, $SiCl_4$

(i) இவை ஒவ்வொன்றும் எத்தகைய பிணைப்புக்குரியன எனத் தனித்தனி தருக.

(ii) இவற்றுக்கு நீர் சேர்க்கும்போது

(a) வெண்கலங்களைத் தருவது எது? அதற்கான ஈடுசெய்த சமன்பாட்டைத் தருக.

(b) வெண்பளிங்கு அல்லது ஈர்மூல மென்னமிலத்தை தருவது எது?

தாக்கச் சமன்பாட்டை தெளிவாகத் தருக.

(c) மூல இயல்புடைய வாயுவைத் தருவது எது?

(d) பகுதி 'c' யில் ஒரு மூலமும் அமிலமும் விளைவாக பெறப்படும். ஆனால் உப்பு உருவாகாது ஏன் என சுருக்கமாக குறிப்பிடுக.

(e) கறியுப்பில் மாசாக காணப்பட்டு அதனை நீர்மயமாக்குவதற்கு காரணமாக அமைவது எது?

(c) பின்வருவனவற்றின் IUPAC பெயர்களைத் தருக.


I. (i) $[CoCl_2(H_2O)_4]Cl$

(ii) $[Ni(NH_3)_6]Cl_2$

(iii) $K_3[Fe(CN)_6]$

II. இச் சேர்வைகளின் சிக்கலயன்களின் கேத்திரகணித வடிவத்தை மட்டும் தருக.

(3) (a) ஒரு மின்பகுப்பு தாக்கத்திற்கான வரிப்படத்தைக் கருதுக.




(i) மூலகம் A யாது?

(ii) வாயு B யாது?

(iii) வாயு C யாது?

(iv) அனோட்டு தாக்கம் யாது?

(v) கதோட்டு தாக்கம் யாது?

(vi) 3A மின்னோட்டம் 30 நிமிடங்கட்கு மேற்படி மின்பகுப்பில் பயன்படுத்தின் வெளிப்படும் வாயு B யின் கனவளவு அறைவெப்பநிலையில் யாது? (வாயுவின் மூலர்க்கனவளவு=$24.0dm^3$)

(vii) வெளிப்படும் வாயு C யின் கனவளவை உய்த்தறிக.

(b) (i) பொது வாயுச் சமன்பாட்டையும் இயக்கப்பண்புச் சமன்பாட்டையும் பயன்படுத்தி $C^2$, மூலர்திணிவு (M), பொது வாயு மாறிலி (R) தனிவெப்பநிலை என்பவற்றிற்கு இடையிலான தொடர்பைப் பெறுக.

(ii) 400 K இல் Ar வாயுவினதும் Ne வாயுவினதும் கதிவர்க்க இடைகள் முறையே $C_1^2$, $C_2^2$ எனின் இவற்றின் இடைத் தொடர்பைப் பெறுக. (Ar=40, Ne=20)

(iii) வாயுக்களின் இயக்கப் பண்புச் சமன்பாட்டிலிருந்து பொதுவாயுச் சமன்பாட்டை உய்த்தறிக.

(c) A, B இரண்டும் முற்றிலும் கலக்கும் தகவற்ற திரவங்கள். இவற்றின் தூய ஆவியமுக்கங்கள் முறையே $P^o_A$, $P^o_B$ ஆகும். A, B இன் கலவையொன்று 98°C யில் பொது அமுக்கத்தில் கொதிக்கிறது எனின் இவ் வெப்பநிலையில்

(i) $P^o_A$, $P^o_B$ இற்கு ஒரு தொடர்பைத் தருக.

(i) $P^o_A=3P^o_B$ ஆக அமைந்தால் கொதித்து வெளிப்படும் ஆவியில் A, B யின் மூல்பின்ன அமைப்பு யாது?

(iii) ஆவியில் A, B இரண்டும் சமதிணிவு உடையனவாயின் A, B யின் மூலர்திணிவுகள் $M_A$, $M_B$ இன் விகிதத்தைக் காண்க.

(4) (a) மூலக்கூற்றுச் சூத்திரம் $C_6H_8O$ இனை உடைய இரு சேர்வைகள் A, B ஆகும். இரண்டும் ஒளியியல் தொழிற்பாடுடையன. $CuCl / NH_3$ உடன் சிவப்பு வீழ்படிவு தருவது A மட்டும் ஆகும். ஆயினும் இரண்டு பீலிங் கரைசலுடன் செங்கட்டிச் சிவப்பு வீழ்படிவைத் தருவனவாகும். A, B இரண்டையும் $Pd/H_2$, திண்ம $BaSO_4$, கந்தகத்துடன் தாழ்த்த இரு விளைவுகள் C, D முறையே பெறப்பட்டன. இவற்றில் D மட்டும் கேத்திரகணித சமபகுதிய தன்மைக்குரியது. C, D இரண்டும் ஒளியியல் தொழிற்பாட்டையும் $AgNO_3 / NH_3$ உடன் வெள்ளியாடியையும் தருவன. எனின் \

(i) A, B, C, D யின் கட்டமைப்புக்களைத் தருக.

(ii) A, D யின் IUPAC பெயர்களைத் தருக.

(b) $CH_3CHO$ ஆனது dil NaOH உடன் தொழிற்பட விடப்பட்டுள்ளது. இரு விளைவுகள் E, F பெறப்பட்டன.

(i) E, F இன் வடிவங்களை வரைக.

(ii) E, F ஐ தனித்தனி வெப்பமாக்கும்போது ஒவ்வொன்றும் இருசமபகுதிய கட்டமைப்புக்கள் G, H ஐ மட்டும் கொடுத்தன. G, H இனை வரைக.

(iii) $CH_3CHO$ ஆனது NaOH உடன் அடையும் தாக்கப் பொறிமுறை தொடர்பான வினாக்கள் இவை.

I. இது எவ்வகைத் தாக்கம்?

II. இங்கு முதலில் உருவாக்கப்படும் தாக்கி இனம் யாது?


III. பகுதி II இல் உருவாக்கப்பட்ட தாக்கி $CH_3CHO$ உடன் தாக்கும்போது உருவாகும் முதல் இடைநிலையின் கட்டமைப்பு யாது?

(c) 3 - phenylpropenal எனும் சேர்வையினைக் கருதுக.

(i) இதன் கட்டமைப்பு யாது?

(ii) இச் சேர்வை கறுவாத் தைலத்தின் ஒரு கூறாகும். இதன் பொதுப் பெயர் யாது?

(iii) பென்சல்டிகைட்டிலிருந்து ஆரம்பித்து 3 - phenylpropenal தயாரிப்பில் படிமுறை கீழேயுண்டு.




வட்டத்தில் இதற்கு பொருத்தமான தாக்கு பொருளையும் நிபந்தனையையும் குறிப்பிடுக.

### பகுதி II B

**ஏதாவது இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

(5) (a) பின்வருவனவற்றிற்குப் பொருத்தமான இரசாயனச் சமன்பாடுகளைத் தருக.

I. (i) KOH(aq) இனதும் HCl(aq) இனதும் நியம நடுநிலையாக்க வெப்பவுள்ளுறை $-57.3 KJ mol^{-1}$

(ii) $H_2O(l)$ இன் நியம தோன்றல் வெப்பவுள்ளுறை $-286 KJ mol^{-1}$

(iii) HCl (aq) இன் நியம தோன்றல் வெப்பவுள்ளுறை $-164 KJ mol^{-1}$

(iv) KOH(aq) இன் நியம தோன்றல் வெப்பவுள்ளுறை $-487 KJ mol^{-1}$

(v) KCl(s) இன் நியம கரைசலாக்க வெப்பவுள்ளுறை $+18.4 KJ mol^{-1}$

(ii) பகுதி I இன் தரவுகளிலிருந்து KCl(s) இன் நியம தோன்றல் வெப்பவுள்ளுறையைக் கணிக்குக.

(b) $A_2B_4(g)$ ⇌ $A_2(g) + 2B_2(g)$ என்னும் சமநிலை 600 K இல் உண்டு. இவ் வெப்பநிலையில் $A_2B_4$ இன் கூட்டப்பிரிகை x mol / mol ஆகும். தொகுதியின் மொத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுக்கம் P Pa ஆகும் எனின்

(i) $K_p$ க்கான கோவையை x, p யில் தருக.

(ii) கூட்டப்பிரிகை 75% ஆகவும் சமநிலை அமுக்கம் $2x10^6 Pa$ ஆகும் எனின் $K_p$ யாது?

(iii) பின் தொகுதியின் அமுக்கத்தை மாற்றி கூட்டப்பிரிகை 50% ஆக குறைக்கப்பட்டது. எனின் $A_2(g)$ இன் பகுதியமுக்கத்தைக் கணிக்குக. (உமது விடையை எளிய பின்னங்களில் தருக)

(c) ஒரு இலட்சிய கரைசலை ஆக்கும் இரு திரவங்கள் A, B ஆகும். இவற்றின் தூய ஆவியமுக்கம் முறையே $P^o_A$, $P^o_B$

(i) A:B=3:2 மூல் ஆகவுள்ள ஒரு கரைசலின் ஆவியில் A:B=3:1 மூல் ஆகும் எனின் $P^o_A:P^o_B$ விகிதம் யாதாகும்?

(ii) A, B யின் கொதிநிலை அமைப்பு வரைபை பருமட்டாக வரைக. இதில் ஆவியமுக்க வரைபையும் குறித்துக் காட்டுக.

(iii) A, B இனை வேறுபிரித்தெடுக்க பயன்படும் தத்துவத்தைப் பெயரிடுக.

(iv) பகுதி (iii) இல் குறிப்பிடப்படும் தத்துவம் பயன்படும் ஒரு கைத்தொழிலை பெயரிடுக.

(6) (a) I. தரப்பட்ட ஒரு ஓர்மூல மென்னமிலம் HA யின் $40.0\ cm^3$ க்கு $0.1\ mol\ dm^{-3}$ NaOH கரைசலின் $10.0\ cm^3$ சேர்க்கப்பட்டபோது கரைசலின் pH 4.5 மேலும் NaOH இன் $10.0\ cm^3$ சேர்க்கப்பட்டபோது 5 ஆகும். எனின் HA யின் செறிவையும் அதன் $K_a$ ஐயும் கணிக்குக. *Hint:* $pH = pKa + \log \frac{salt}{[Acid]}$

(ii) பகுதி I இல் குறிப்பிட்ட $20\ cm^3$ HA கரைசலை நியமிக்க தேவையான மேற்படி NaOH கரைசலின் கனவளவு யாது? நியமிப்பில் பெறப்பட்ட கரைசலின் pH யாது?

(iii) மேற்படி நியமிப்புக்கு பொருத்தமான ஒரு காட்டியை பெயரிடுக. உமது விடைக்கான காரணத்தை குறிப்பிடுக.

(b) தரப்பட்ட கரைசலொன்று $1.0x10^{-3}\ mol\ dm^{-3}\ Mg^{2+}$ அயன்களையும் $NH_4Cl$ இனையும் கொண்டுள்ளது. இதற்குள் $0.01\ mol\ dm^{-3}$ ஆகும் வரை $NH_3(g)$ செலுத்திக் கரைக்கப்பட்டது.

$Ksp(Mg(OH)_2) = 6.4x10^{-12}\ mol^3\ dm^{-9}$ . $Kb(NH_3(aq)) = 1.6x10^{-5}\ mol\ dm^{-3}$ எனின்

(i) இங்கு $Mg(OH)_2$ வீழ்படிவுறாது தடுப்பதற்கு கரைசலில் $NH_4$ செறிவு குறைந்தது யாதாக வேண்டும்?

(ii) $Mg^{2+}$ இற்கு பதில் அதே செறிவுடைய $Al^{3+}$ அயன்கள் இருந்திருப்பின் அது வீழ்படிவுறுமா?

$Ksp(Al(OH)_3) = 1x10^{-52}\ mol^4\ dm^{-12}$

(iii) $Ca^{2+}$, $Mg^{2+}$, $Sr^{2+}$, $Ba^{2+}$ கொண்ட ஒரு கரைசலில் $NH_4Cl$ மிகையாக சேர்த்தபின் $(NH_4)_2CO_3$ இட்டால் $MgCO_3$ வீழ்படிவாவதில்லை. ஏனையவை வீழ்படிவாகின்றன. இதனை பற்றி சுருக்கமாக விளக்குக.

(c) (I) $100\ cm^3$ நீருடனும் $100\ cm^3\ CCl_4$ உடனும் 5.08g திண்ம $I_2$ இட்டு குலுக்கப்பட்டு சமநிலையடைய விடப்பட்டது. சமநிலையில் நீர்ப்படையில் உள்ள $I_2$ ஐ நியமிக்க $0.05 mol\ dm^{-3}\ Na_2S_2O_3$ கரைசலின் $8.0 cm^3$ தேவைப்பட்டது. $CCl_4$ க்கும் நீருக்குமிடையில் $I_2$ இன் பங்கீட்டுக் குணகம் யாது?


(II) $0.20\ mol\ dm^{-3}$ KI நீர்க்கரைசலுடன் திண்ம $I_2$ இட்டு குலுக்கப்பட்டு கரைக்கப்பட்டது. பின் கரைசலுடன் $CCl_4$ இட்டு குலுக்கப்பட்டது. சமநிலையில் நீர்ப்படையில் மொத்த $I_2$ இன் செறிவு $0.08\ mol\ dm^{-3}$, $CCl_4$ இல் $0.10\ mol\ dm^{-3}$ எனின்

(i) நீரில் சுயாதீன $[I_2(aq)]$ யாது?


(ii) $I^-$ உடன் சேர்ந்த $[I_2(aq)]$ யாது?

(iii) $I_2$ உடன் சேராத $I^-$ இன் செறிவு யாது?

(iv) $I_2(aq) + I^-(aq) \quad I_3(aq)$ எனும் சமநிலையில் $K_c$ இனைக் காண்க.

(7) (a) (i) $CH_3CHO$ +  எனும் தாக்கத்தின் விளைவைத் தருக.


(ii) மேற்படி தாக்கப் பொறிமுறையில் முதலில் உருவாகும் இடைநிலையைத் தருக.



(b)  தரப்பட்ட இரசாயனங்கள் பின்வருமாறு


$AlCl_3$, $CH_3COCl$, $LiAlH_4$, $H_2O$, dil $H_2SO_4$, Na, $CH_3Br$, $Br_2$, KOH, $C_2H_5OH$, conc.$H_2SO_4$

இவற்றைப் பயன்படுத்தி மேற்படி மாற்றீட்டை எவ்வாறு செய்வீர்?

(c) $CH_3CH=CH_2$ மட்டும் ஆரம்ப சேதனப் பொருளாகப் பயன்படுத்தி

CH3C = CH.C(OH).COOH ஐ எவ்வாறு தயாரிப்பீர்?
 |          |
CH3       CH3

(d)  இலிருந்து ஆரம்பித்து  ஐ எவ்வாறு தயாரிப்பீர்?



## பகுதி IIC

**ஏதாவது இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

(8) (a) A, B என்பன இரு அசேதன உப்புக்கள். இவற்றுக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனைகள் பின்வருமாறு.

| | A | B |
|---|---|---|
| (i) $FeSO_4$, conc. $H_2SO_4$ | கபில வளையம் காணப்பட்டது | சூடாக்கப்பட ஊதாநிற ஆவி வெளிப்பட்டது |
| (ii) dil HCl சேர்க்கப்பட்டது | மாற்றம் இல்லை | மாற்றம் இல்லை |
| (iii) பகுதி (ii) இல் கரைசலுக்கு $H_2S$ செலுத்தப்பட்டது | கறுப்பு வீழ்படிவு dil $HNO_3$ இல் கரைந்து நீல கரைசல் தோன்றியது. | மாற்றம் இல்லை |
| (iv) பகுதி (iii) இன் வடி கரைசல் கொதித்தல் பின் $HNO_3$ இட்டு மீண்டும்கொதிக்க வைக்கப்பட்டது. பின் $NH_4Cl$ இட்டு மிகை $NH_3(aq)$ இடப்பட்டது. | மாற்றம் இல்லை | மாற்றம் இல்லை |
| (v) பகுதி (iv) இன் கரைசலுக்கு $H_2S$ செலுத்தப்பட்டது. | மாற்றம் இல்லை | வெள்ளை வீழ்படிவு |

தாக்கங்களை விளக்கி A, B ஐ இனங்காண்க.

(b) 


A, B, C, D, E, F, G இனை இனங்காண்க.

(c) Potassium iodate (V) திண்மத்தின் 1.070g திணிவு நீரில் கரைந்து $100cm^3$ கரைசலாக்கப்பட்டது. கரைசலின் $10.0cm^3$ ஆனது மிகை KI(aq) உடன் dil $H_2SO_4$ முன்னிலையில் குலுக்கப்பட்டது. விளைவுக்கரைசலை மாப்பொருள் முன்னிலையில் நியமிப்பதற்கு தரப்பட்ட $Na_2S_2O_3$ கரைசலின் $22.5\ cm^3$ பயன்பட்டது. (K=39, I=127, O=16)

(i) தொடர்பான சமன்பாடுகளை ஈடுசெய்து தருக.

(ii) $Na_2S_2O_3(aq)$ இன் செறிவைக் காண்க.

(iii) Potassium iodate (V) இனை இங்கு தேர்ந்தெடுத்து $Na_2S_2O_3$ கரைசலை மேற்குறித்தவாறு நியமிப்பதற்கு காரணம் யாது?

(9) (a) அமோனிய சோடா முறை / சோல்வே முறையில் $Na_2CO_3$ தயாரிப்பு தொடர்பான வினாக்கள்

(i) மூலப்பொருள் / பொருட்கள் யாவை?

(ii) தொடர்புபட்ட சமன்பாடுகளைத் தருக.

(iii) இம்முறையின் வினைத்திறனைக் கூட்டுவதற்கு கையாளப்படும் முறைகள் யாவை?

(iv) மீள்சுழற்சிக்குட்படுபவை யாவை? எவ்வாறு?

(v) $NaHCO_3$ தயாரித்த பின்பே $Na_2CO_3$ ஆக்கப்படுகிறது. இதனை விளக்குக.

(vi) இலங்கையில் இத்தொழிற்சாலை அமைய பொருத்தமான இடம் / இடங்கள் தகுந்த காரணங்களுடன் குறிப்பிடுக.

(b) (i) வளிமண்டலத்தின் அமைப்பை மாற்றுவதற்கு பங்களிப்பு செய்யும் சேர்வைகளை (குறைந்தது 8) இனங்காண்க.


| | |
|---|---|
| (ii) அமில மழை (A) | சுவாசத் தடை வாயு (D) |
| ஓசோன் படை நலிதல் (B) | நுண்ணங்கி செயற்பாட்டின் மூலம் உருவாகும் வாயு (E) |
| பச்சை வீட்டு விளைவு (C) | குறைத்தகனம் மூலம் உருவாகும் வாயு (F) |

மேற்கூறிய வாயுக்களை மேற்படி அடிப்படையில் பிரித்துக் காட்டுக.

(iii) வாகன புகை போக்கிகள் கட்டுப்பாடற்ற நிலையில் வெளிப்படும் வாயுக்கள் யாவை? இவற்றை எவ்வாறு குறைப்பீர்கள்?

(iv) அமில மழை என்பது யாது? இதற்கு காரணமான வாயுக்கள் எவ்வாறு வளியில் சேருகின்றன? அமில மழையால் ஏற்படும் பாதிப்புகள் நான்கினை இனங்காட்டுக.

(c) எரிசோடா தயாரிப்பில் மென்சவ்வு கலத்தின் வரிப்படம் கீழேயுண்டு.




(i) இங்கு A, B, C, D, E, F, G, H, I இனால் குறிக்கப்படுபவை யாவை?

(ii) அனோட் தாக்கம் யாது?

(iii) கதோட் தாக்கம் யாது?

(iv) C யின் பயன் யாது?

(10) சுண்ணாம்புக்கல், கற்கரி, நீர் என்பவற்றை மூலப் பொருட்களாகக் கொண்டு ethyne தயாரிப்பில் முக்கிய படிமுறைகளை குறிப்பிடுக. இதிலிருந்து நீர்க்குழாய்கள், நீர்த்தாங்கிகள் தயாரிக்கப் பயன்படும் ஒரு பல்பகுதியத்தை தயாரிக்க எவ்வாறு முற்படுவீர்?

இப்பல்பகுதியம் எவ்வகைக்குரியது?

நீட்டல் / குறுக்குச் சங்கிலி, இயற்கை / தொகுப்பு, வெப்பமிறுக்கும் / வெப்பமிளக்கும் கூட்டல் / ஒடுக்கல்

இவற்றிலிருந்து பொருத்தமான சொற்றொடர்களை பயன்படுத்துக.

(b) $2Fe^{3+}(aq) + 2I^-(aq) \rightarrow 2Fe^{2+} + I_2(g)$ எனும் தாக்கத்தைக் கருதுக.

இத்தாக்கத்தில் தாக்க வீதத்தை ஓரலகு நேரத்தில் உருவாகும் $I_2$ சார்பாக தாக்க வீதத்தை அளக்கலாம். இதற்கு $2Na_2S_2O_3(aq) + I_2(aq) \rightarrow 2NaI(aq) + Na_2S_4O_6(aq)$ இனைப் பயன்படுத்தலாம். இங்கு மாப்பொருள் காட்டி பயன்படுத்தப்படுகிறது. மாப்பொருள் நீலமாக தொடங்க எடுக்கும் நேரம் அளக்கப்படுகிறது.

| Expt. | 0.1 mol $dm^{-3}$ $Fe^{3+}(aq)/cm^3$ | 0.3 mol $dm^{-3}$ $I^-(aq)/cm^3$ | 0.05 mol $dm^{-3}$ $Na_2S_2O_3(aq)/cm^3$ | மாப்பொருள் துளிகள் | நீர்/$cm^3$ | நேரம்/s |
|---|---|---|---|---|---|---|
| 1 | 25.0 | 25.0 | 5.0 | 2 | 50 | 20.0 |
| 2. | 20.0 | 25.0 | 5.0 | 2 | 10 | 25.0 |
| 3. | 15.0 | 25.0 | 5.0 | 2 | 15 | 33.3 |
| 4 | 25.0 | 20.0 | 5.0 | 2 | 10 | 25 |
| 5 | 25.0 | 15.0 | 5.0 | 2 | 15 | t |

(i) $R=K[Fe^{3+}(aq)^m[I^-(aq)]^n$ இல் m,n இனைத் துணிக.

(ii) பரிசோதனை 2 இல் 25.0 s இல் முற்றாக தாக்கமுற்ற தாக்கி யாது?

(iii) பரிசோதனை 3 இல் நீலநிறம் தோன்ற எடுக்கும் நேரத்தில் மிகுதியாக உள்ள $Fe^{3+}$ செறிவு யாது?

(iv) பரிசோதனை 5 இல் $Fe^{3+}(aq)$, $I^-(aq)$, $Na_2S_2O_3(aq)$ மாப்பொருள், நீர் என்ற ஒழுங்கில் தாக்கிகள் ஒன்றன்பின் ஒன்றாக சேர்த்த பொழுது பெறப்பட்ட நேரம் தவறாக அமைந்தது. இது ஏன்?

(v) பரிசோதனை 5 இல் சரியான t ஐ அளக்க எவ்வொழுங்கு கடைப்பிடிக்கப்பட வேண்டும்?

(vi) பரிசோதனை 5 இல் சரியான ஒழுங்கு கடைப்பிடிக்கப்படின் t இன் பெறுமானம் யாதாகும்?

(c) ஒரு மூலகம் A யின் ஒட்சைட்டு $A_2O_5$ இதனை நீர் கரைசலாக்கி $0.1 moldm^{-3}$ கரைசலாக்கப்பட்டது. விளைவுக் கரைசலின் $25.0cm^3$ இற்கு மிகை $SO_2$ செலுத்த A யின் ஒட்சியேற்ற நிலை n உடையசேர்வை பெறப்பட்டது. இதனை மீண்டும் A யின் ஆரம்ப ஒட்சியேற்ற நிலைக்கு கொண்டு வருவதற்கு $0.02\ moldm^{-3}$, $50.0\ cm^3\ KMnO_4 / H^+$ கரைசல் தேவைப்பட்டது. எனின் n இன் பெறுமானம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் மிகு கொல்லிப் பாவை



## ஆன்மீகம் 72

### அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

சித்தர்கள் உருவாக்கிய கொல்லி மலைப் பாவை என் இதயத்தில் அன்று முதல் நிரந்தரமாக கோயில் கொண்டாள். இந்த கதண்டுகள் பெரிய உருவமுடையவை, கூட்டமாக வந்து தாக்கும். கதண்டுகள் தேனீயைப் போல கொடுக்கினால் கொட்டும். கொட்டிய இடம் கொளுக்கட்டை போல் வீங்கிவிடும். கொட்டிய இடத்தில் அதன் விஷமுள் ஒட்டியிருக்கும். அதிகமாக தாக்கப்பட்டால் ஆள் மீண்டும் எஜவதே கடினம். அதுதாக்கும் போது ஓடினால் விடாமல் துரத்தி, துரத்திக் கொட்டும் தலையைமூடிக் கொண்டு, தரையில் படுத்துக்கொண்டால் அவை மனிதனை தாக்குவதில்லை.

இவைகள் குகைகள், பழங்கால கட்டிடங்கள், பழங்கால மலைக்கோயில்களில் வசிக்கும் புதையல் இருக்கும் இடத்தில் இவை காவல் இருக்கும். புதையலை எடுக்க முனைந்தால் கடுமையாகத் தாக்கும் என்றும் சொல்கிறார்கள். அன்னையின் பாதத்தை சரணடைந்தது தான் என்னைக் காப்பாற்றியது போல் வண்டுகளைப் பற்றிய உண்மையறியாத என்னை தெய்வத்தின் திருப்பாதங்கள் தான் அன்று காப்பாற்றின. இப்படி நிகழ்ந்தது, அந்த பூஜையின் பலன் தானே!கதண்டுகளின் தாக்குதலுக்கு இலக்கான எங்களுடன் வந்தவர்களில் இரண்டு நபர்கள் மயங்கி விழுந்தனர். அவர்களைத் தூக்கிக்கொண்டு சித்தர் பெருமானிடம் சென்றடைந்து நடந்ததை விவரித்தனர்.

இது கண்டு விஷமுட்களை பிடுங்கி எடுத்துவிட்டு சஞ்சீவி தைலத்தை தேய்த்துவிட்டார். குறிப்பாக மயங்கிய நிலையில் இருந்த அந்த இருவரும் சுருக்கமாக சொல்லப் போனால் புனர் ஜென்மந்தான் எடுத்தார்கள் எனலாம்.

இதே நேரம் கோயிலில் அம்மன் காலடியில் கிடந்த என் மேல் ஊர்ந்து கொண்டிருந்த வண்டுகள் என் உடலிலிருந்து விலகி ரீங்காரமிட்டுக் கோயிலை விட்டு திடீரென கிளம்பிய மற்ற வண்டுகளுடன் இணைந்து பறந்தன. சற்று நேரத்தில் ஓங்கார ரீங்கார ஒலி மெல்ல, மெல்ல தேய்ந்து மறைந்தது. என் உடல் மேல் ஒரு வண்டு கூட அமர்ந்திருக்கவில்லை. மெல்ல அச்சத்துடன் தலைதூக்கி பார்த்து வண்டுகளினால் வந்த ஆபத்தை நீங்கியதை உணர்ந்து, அச்சம் தெளிந்து எழுந்தேன். சித்தர் அமர்ந்திருந்த இடத்தை நோக்கி நடந்தேன். சித்தர் அவர்கள் அமர்ந்திருந்த இடத்தை நெருங்க, நெருங்க ஆசானைச் சூழ்ந்திருந்த சூழ்நிலை எனக்குப் புரிந்திருந்தது. கதண்டு வண்டுகளின் கடும் தாக்குதலை, தாக்குப் பிடிக்க முடியாமல் புறமுதுகிட்டு உயிரைக்காப்பாற்ற வாயு வேகத்தில் ஓடிய அந்தக் கும்பல் சித்தரை சுற்றி உட்கார்ந்தும், படுத்தும் கிடக்கும் போர் வீரர்களைப் போல் தெரிந்தது. பதட்டத்துடன் என் நடையின் வேகத்தைக் கூட்டி நெருங்கினேன். சித்தர் பெருமான் கோபமாகக் காணப்பட்டார். திகைத்துப்பேய், மௌனமாய் நின்றேன்.



கொல்லி மலையில் ஆகாச அருவி

திடீர் என்று சித்தர் அவர்கள் சினந்து, என்னிடம் சீறினார். என்னய்யா இது! உன்னை நம்பித்தானே, இவர் நம்பி வந்தவர்களை, சாமி கும்பிடவந்தவர்களை அந்தம்மா இப்படி கொடுமைபடுத்தியனுப்பியிருக்கிறதே!... இது எனக்கு ஏற்பட்ட அவமானம் என்றவர் சற்று நேரம் மௌனமாய், கோயில் இருக்கும் திசையில், கோபமாக நோக்கினார். பிறகு தணிந்த குரலில் இவர்களுக்கு ஏதாவது ஆனால் யார் பதில் சொல்ல முடியும்? இவ்வளவு நடந்திருக்கிறது. அப்புறம் அந்தக் கோயிலில் உனக்கென்ன வேலை? உடனே வரவேண்டியது தானே? என்று கூறியவர் அந்த இடத்தை விட்டு தனிமையை நாடிச் சென்றார். வண்டு கடிக்காளானவர்களிடம், அவர்கள் உடல் நிலை பற்றி விசாரித்தேன்.

தொடரும்


# அபிவிருத்தி: மனிதமேம்பாட்டின் பாதையா அல்லது அடக்குமுறையின் கருவியா...?

27-07-2013 தொடர்ச்சி

**அபிவிருத்திப் பிரச்சினைகளும் மனித மேம்பாட்டுத்தடைகளும்**

வடக்கிலும், கிழக்கிலும் பல அபிவிருத்தி பிரச்சினைகள் உண்டு. இவை மனித மேம்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடையவை. பெரும்பாலான மக்களின் வாழ்வாதரங்களின் பலவீனங்களும் ஸ்திரமின்மையும் அவர்களின் மனிதமேம்பாட்டின் விருத்தியைப் பாதிக்கின்றது. மறுபுறம் மனித ஆற்றலின் குறைவிருத்தி அவர்களின் வாழ்வாதரங்களின் விருத்தயை பாதிக்கின்றது. இத்தகைய பிரச்சினைகளைத் தனிமனித மட்டத்திலோ குடும்ப மட்டத்திலோ முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. அவற்றைப்பரந்த அரசியல் பொருளாதார மட்டத்தில் இனங்காணல் அவசியம். போரினதும், சுனாமியினதும் விளைவுகளுடன் போருக்குப் பின்னர் நடைபெறும் மாற்றங்களும் மிக முக்கியத்துவம் பெறுகின்றன.

நிலம் மற்றும் கரையோரவளங்கள் மீதான கட்டுப்பாடுகள், உடைமை மாற்றங்கள் பலரின் வாழ்வாதாரங்களைப் பாதித்துள்ளன. மூன்று தசாப்தங்களாகப் போர் வடக்கு கிழக்கின் அரசியல் பொருளாதாரத்தைக் கரையோரக் கடல்வளங்கள் போன்றவற்றை கைக்கொள்ளும் சூழலையும் சாத்தியப்பாடுகளையும் தொடர்ச்சியாக பாதித்தது. இடப்பெயர்வுகள் எப்போதும் ஆயுதப்போரின் தவிர்க்க முடியாத விளைவுகள் அல்ல. வடக்கு கிழக்கில் பெருமளவிலான இடப்பெயர்வுகள் இலங்கை இராணுவத்தினதும் விடுதலைப்புலிகளினதும் திட்டமிட்ட நடவடிக்கைகள் ஆகும். உயர் பாதுகாப்பு வலயங்கள், இராணுவத்தளங்கள், பாதுகாப்பு அரண்தள் போன்றவற்றினால் மக்களின் வாழ்வும் வாழ்வாதாரங்களும் பாதிக்கப்பட்டன. மக்களின் பாதுகாப்பும் வாழ்வாதாரங்களும் இருசாரரின் இராணுவ அரசியல் முன்னுரிமைகளுக்குச் கீழ்படுத்தப்பட்டன. ஆகவே, திட்டமிட்ட



இடப்பெயர்வுகளும் இனச்சுத்திகரிப்பும் இரு கட்சிகளினதும் பொதுப் பண்பாக இருந்தது. இடப்பெயர்வு, வாழ்வாதாரங்களின் இழப்பு, உழைப் பாற்றல் கொண்ட குடும்ப அங்கத்தவர்களின் இழப்பு, சுகாதார கல்வி வசதிகளின் சீரழிவும் இழப்பு எல்லாம் தற்காலிக மனிதாபிமான பிரச்சினைகளாக மட்டுமே இனங்காணப்பட்டு இவற்றினால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண நிறுவனங்கள் உதவிகளை வழங்கினர். இந்த மனிதாபிமானப் பிரச்சினைகள் எதிர்பார்த்ததையும் விட நீண்டகாலப் பிரச்சினைகளாயின. நிவாரண நிறு வனங்களின் மனிதாபிமானப் பங்கு பாராட்டப்பட வேண்டியதே. ஆனால், ஒன்றுக்கு மேற்பட்ட சந்ததியினருக்குப் பயனுள்ள சுகாதார கல்வி மற்றய தொழிற்பயிற்சி வசதிகளும் வாய்ப்புக்களும் கிட்டவில்லை. இவற்றின் விளைவுகள் மனித அபிவிருத்திக்கு குறிப்பாக இளம் சந்ததியினரின் முன்னேற்றத்திற்குத் தடைகளாயின. இதனால் ஏற்பட்ட மனித ஆற்றலின் குறைவிருத்தி தனிமனிதரினதும் சமூகத்தினதும் முன்னேற்றத்திற்குத் தொடர்ந்தும் தடையாக இருக்கிறது. வடக்கு, கிழக்கில் நிலமும் கரையோர வளங்களும் மக்களின் வாழ்வாதாரச் சாதனங்கள் அல்லது தனியார்துறை யின் முதலீட்டுக்கான பொருளாதார வளங்கள் மட்டுமல்ல இவை அங்கு வாழும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் கூட்டு அடையாளங்களுடனும் கலாச்சார வாழ்க்கையுடனும் நெருங்கிய தொடர்புடையன. இது ஆழமான முரண்பாடுகளாகிப் பெரிய அரசியல் பிரச்சின்னையாகிவிட்டது. குறிப்பாக தமிழ் மக்களின் தாயகக் கோரிக்கையும் அரசகாணிகளில் குடியேற்றங்களுக்கும் நில அபகரிப் புக்கும் எதிராக இவ்விரு சமூகத்தினரும் தெரிவிக்கும் எதிர்ப்பு போருக்குப் பின்னர் முக்கிய பிரச்சினைகளாகிவிட்டன. தாயகக் கோரிக்கையை நிராகரித்து இராணுவரீதியான வெற்றிக்கூடாக முழுப் பிரதேசத்தையும் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ள அரசு அந்தப் பிரதேசம் மீதான பூரண கட்டுப் பாட்டை எந்த வகையிலும் விட்டுக் கொடுகாதவகையிலே அதன் வளங்களின் உடைமை உற்வுகளை மீளமைக்கும் திட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

போருக்குப்பின்னர் தொடரும் உயர்பாதுகாப்பு வலயங்கள் இவற்றை நிரந்தரமாக இராணுவ முகாம்களாகவும் குடியிருப்புகளாகவும் மாற்றும் திட்டங்கள், விசேட பொருளாதார வலயங்களின் பிரகடனங்கள், பௌத்த புனித பிரதேசப் பிரகடனங்கள், இனரீதியில் ஜனத்தொகை விகிதாசாரத்தை மாற்றும் நோக்கில் குறிப்பிட்ட பிரதேசங்களை முன்பு தொடர்பற்ற பிரதேசங்களுடன் நிர்வாக ரீதியில் இணைத்தல் போன்ற மாற்றங்கள் புதிய இடப்பெயர்வுகளை ஏற்படுத்துவதுடன் நிலம், கரையோர வளங்களில் தங்கியிருப் போரின் மீள்குடியிருப்பு வாழ்வாதாரங்களின் மீள் நிர்மாணரிப்பு போன்றவற்றை மேலும் உறுதியற்ற நிலைக்குத் தள்ளி அவர்களை இடர் பாட்டுக்குள்ளாக்குகின்றன. யாழ்ப்பாணத்தில் வலிகாமம் வடக்கில் இராணுவப்பிரதேசமாக இருந்தபகுதியில் தனியாருக்குச் சொந்தமான 6381 ஏக்கர் (25.8 சதுர கிலோ மீட்டர்கள்) நிலப்பரப்பை பாதுகாப்புப்படையின் தலைமயகத்திற்காக எடுத்துக் கொள்வ அரசாங்கம் முடிபு செய்துள்ளது. ஏற்கனவே 20 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து வாழும் இந்த நிலங்களின் உரிமையாளர்களும் ஆதரவாளர்களும் இராணுவத்தின் நிலஅபகரிப்புக்கெதிராக நடவடிக்கைகள் எடுக்க முயற்சிக்கின்றனர்.

இணையம்

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி என்னும் ஆயுதத்தை இறுக பற்றிப் பிடியுங்கள்

## அரியம் எம்.பி. அறிவுரை

(மட்டக்களப்பு)

**தமிழ்மக்களிடம் தற்போது எஞ்சியிருப்பது கல்வி என்ற ஆயுதம் மட்டும்தான். அதனை தமிழ் பிள்ளைகள் இறுக பற்றிப் பிடிக்க வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு பிரித்தானியா எனின் தரோ பல்கலைக்கழக மாணவர்களால் அமைக்கப்பட்ட பாலர் பாடசாலை திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இன்று தமிழர்களிடம் எஞ்சியிருப்பது இரண்டு விடயங்கள்தான். அதில் ஒன்று தமிழ் தேசிய உணர்வு மற்றையது கல்வி கற்க வேண்டும் என்ற உணர்வு. இந்த இரு விடயங்களுமே இன்று தமிழர்களின் அடையாளமாகவுள்ளன.

குறிப்பாக தமிழ் மக்கள் கடந்த காலங்களில்தங்களது உரிமைகளை வென்றெடுப்பதற்கு பல ஆயுதங்களைக் கையில் எடுத்திருந்தாலும் இன்று தமிழ் மக்களிடம் எஞ்சியிருப்பது கல்வி என்ற ஆயுதம் மட்டுமே.

அந்த வகையில் தமிழர்களின் கல்வியை விருத்தி செய்யும் நோக்குடன் இவ்வாறான பாலர் பாடசாலைகளைத் திறப்பதற்கு முன்வந்துள்ள பிரித்தானிய பல்கலைக்கழக மாணவர்களை தமிழ் மக்கள் சார்பாக நாம் பாராட்டி வரவேற்கின்றோம்.

இதேபோன்று இங்குள்ள பெற்றோர்கள் வெறுமனே அபிவிருத்தி சலுகைகள் என்று கூறி ஏமாற்றுபவர்களுக்கு பின்னால் சென்று தங்களுடையபிள்ளைகளின்எதிர்காலத்தை வீணடிக்காமல் பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்தி அவர்களை எதிர்காலத்தில் ஏனைய சமுகங்களுக்கு இணையாக வளர்த்தெடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும். அதன் ஊடாகவே தமிழினம் எதிர்காலத்தில் சுயமாக தலைநிமிர்ந்து நிற்கும் என்றார். (அ-2)

# தமிழர்களுக்கு தீர்வின்றேல் சாகும் வரை உண்ணாவிரதம்

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

(குருமன்காடு)



தமிழ் மக்களுடைய தேசிய பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிடைக்காவிடின் தான் சாகும் வரை உண்ணாவிரதத்தில் ஈடுபடப் போவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்தாவது,

அரசாங்கத்தால் அடுத்த வருடத்துக்குள் தமிழ் மக்களுக்கான தீர்வு முன்வைக்கப்படாவிடின் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டமொன்றை மேற்கொள்ளப் போவதாக கடந்த வருடம் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் நான் தெரிவித்திருந்தேன்.

7 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் அரசால் இன்னமும் எந்தவொரு தீர்வும் வழங்கப்படவில்லை. அது தொடர்பில் அரசுக்கான கால அவகாசம் இன்னும் நான்கு மாதங்களே உள்ளன.

அதற்குள் தமிழ் மக்களுடைய தேசிய பிரச்சினை தீர்க்கப்படாது போனால் நான் ஏற்கனவே கூறியபடி எதிர்வரும் நவம்பரில் இருந்து சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவேன் என அவர் தெரிவித்தார். (அ-250)

# உலகின் கடற்கரைகளில் காலிக்கரைக்கு 79வது இடம்

உலகிலுள்ள சிறந்த 100 கடற்கரைகளுள் இலங்கையின் காலி மாவட்டத்திலுள்ள உனவடுன கடற்கரை 79 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

செய்தி நிறுவனம் ஒன்றால் நடத்தப்பட்ட தரப்படுத்தலிலேயே இலங்கையின் உனவடுன கடற்கரை சிறந்த 100 கடற்கரைகளுள் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

உலகில் உள்ள பல்வேறுபட்ட நிலப்பகுதிகளை தரப்படுத்தலுக்குட்படுத்தி அதில் சிறந்த நிலப்பகுதிகளைத் தெரிவு செய்யும் அச்செய்தி நிறுவனம் இம்முறை உலகிலுள்ள கடற்கரைகளைத் தரப்படுத்தலுக்குட்படுத்தி அதில் சிறந்த 100 கடற்கரைகளைத் தெரிவு செய்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளால் ஈர்க்கப்பட்ட அனைத்து நாடுகளும் குறித்த தரப்படுத்தலுக்கு உள்வாங்கப்பட்டதுடன் அதில் சிறந்த நூறு கடற்கரைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

உலக நாடுகளில் காணப்படும் சிறந்த கடற்கரைகளுள் முதலாவது இடத்தை சீசெல்ஸ், டிக்யூ தீவில் அமைந்துள்ள கிரேண்டி அன்சே கடற்கரை பெற்றுள்ளது.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட உனவடுன கடற்கரைப் பகுதி இன்று சிறந்த 100 கடற்கரைகளுள் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டமை பெருமைக்குரிய விடயமாக கருதப்படுமென அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன் கடலலைச் சறுக்கல் விளையாட்டுப் போட்டிகளுக்கு சிறந்த 100 கடற்கரைகளுள் 46 ஆவது இடத்தை அறுகம்பே கடற்கரை பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தெரிவுக் குழுவில் இருந்து சம்பிக்கவும் விலகுவாரா?

(கொழும்பு)

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களைநீக்குவது தொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்தப்படாவிடின் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்கெடுப்பதில் எந்தப் பயனுமில்லை என ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக வெளியிடப்படவுள்ள அறிக்கையை ஜாதிக ஹெல உறுமயவின் மத்திய செயற்குழுவில் சமர்ப்பித்து அதுபற்றி ஆராய்ந்த பின்னர் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டில் ஐக்கியத்திற்கு குந்தகம் ஏற்படுத்தும் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள பொலிஸ் , காணி உட்பட பிரிவினைவாத அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும்.

அவற்றை நீக்காது போனால் தாம் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்து கொள்வதில் பயனெதுவுமில்லை என்றார். (அ-2)

# பேய்ச்சி அம்மன் ஆலய மஹோற்சம்

யாழ். நாயன்மார்கட்டு அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 11 நாட்கள் நடைபெறவுள்ள இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.15 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெற்று மாலை 6.30 மணிக்கு கொடியிறக்க நிகழ்வும் நடைபெறவுள்ளது. இம் மஹோற்சவத்தில் மங்கல வாத்திய இசையை யசோதரன் புதல்வர் குழுவினர் நிகழ்த்தவுள்ளனர். (வ)




★ 1567 - முதலாம் ஜேம்ஸ் ஸ்கொட்லாந்தின் மன்னனாக முடிசூடினான்.

★ 1830 - பிரான்சின் பத்தாம் சார்ல்ஸ் முடி துறந்தான்.

★ 1851 - 15 யுனோமியா என்ற சிறுகோள் கண்டு பிடிக்கப்பட்டது.

★ 1899 - முதலாவது ஹேக் ஒப்பந்தம் நெதர்லாந்தில் ஹேக் என்ற இடத்தில் கைச்சாத்திடப்பட்டது.

★ 1900 - இத்தாலியில், முதலாம் உம்பேர்ட்டோ மன்னர் கொலை செய்யப்பட்டார்.

★ 1907 - சேர் பேடன் பவல் லண்டனில் சாரணர் இயக்க முகாம் ஒன்றைத் திறந்து வைத்தார். இதுவே சாரணர் இயக்கத்தை ஆரம்பிக்க முதற்படியாக இருந்தது.

★ 1921 - ஹிட்லர் ஜேர்மன் தேசிய சோசலிச தொழிலாளர் கட்சியின் தலைவரானார்.

★ 1944 - இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1948 - இரண்டாம் உலகப் போர் காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மீண்டும் லண்டனில் ஆரம்பமாகின.

★ 1957 - அணு சக்தியின் அமைதி வழி பயன்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக பன்னாட்டு அணுசக்தி முகமையகம் அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1959 - ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி நிறுவனம் நாசா ஆரம்பிக்கப்பட்டது.

★ 1981 - வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ் - டயானா திருமணம் நடைபெற்றது.

★ 1987 - ஆங்கிலக் கால்வாயூடாக யூரோ சுரங்கம் அமைப்பதற்கான உடன்படிக்கையில் ஐக்கிய இராச்சிய பிரதமர் மார்கரட் தாட்சர் மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா மித்தரான் ஆகியோர் கைச்சாத் திட்டனர்.

★ 1987 - இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வாக இலங்கை - இந்திய ஒப்பந்தம் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும் இடையில் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

★ 1987 - இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொழும்பில் இடம்பெற்ற மரியாதை அணிவகுப்பின் போது இலங்கை இராணுவத்தினன் ஒருவனால் துப்பாக்கியால் தலையில் குத்தப்பட்டு காயம் அடைந்தார்.

★ 2005 - ஏரிஸ் (குறுங்கோள்) கண்டுபிடிக்கப்பட்டது.

**பிறப்புகள்**

★ 1883 - முசோலினி, இத்தாலிய சர்வாதிகாரி (இ. 1945)

★ 1904 - ஜே. ஆர். டி. டாடா, இந்தியத் தொழிலதிபர் (இ. 1993)

★ 1905 - டாக் ஹமாஷெல்ட், ஐக்கிய நாடுகள் அவையின் 2ஆவது பொதுச் செயலர் (இ. 1961)

**இறப்புகள்**

★ 1913 - டோபியாஸ் மைக்கல் ஆசர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1838)

★ 1974 - கருமுத்து தியாகராஜன், இந்தியத் தொழிலதிபர் (பி. 1893)

★ 2009 - காயத்திரி தேவி, ஜெய்ப்பூர் மகாராணி (பி 1920)

### பெனிட்டோ முசோலினி



பெனிட்டோ அமில்கார் அன்டிரியா முசோலினி என்ற முழுப்பெயர் கொண்ட இவர் இத்தாலி நாட்டில் 1922 - 1943 காலப்பகுதியில் தலைமை வகித்தவர். இத்தாலிய அரசை பாசிச அரசாக மாற்றி ஏகபோக சர்வாதிகார ஆட்சியை முசோலினி நடத்தினார். அரச கட்டமைப்புகளையும், தனியார் நிறுவனங்களையும், ஊடகங்களையும், திறனாளர்களையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்து வன்முறை, பரப்புரை, ஏகபோக அணுகுமுறை ஊடாக பாசிச அரசை உருவாக்கி பேணினார். ஹிட்லருடன் சேர்ந்து இரண்டாம் உலகப் போரின் போது நேச நாடுகளுக்கு எதிராகப் போரிட்டுத் தோற்றார். 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முசோலினி தம் மனைவி கிளாரா பெட்டாசியுடன் சுவிட்சர்லாந்துக்குத் தப்பியோட முற்படுகையில், இத்தாலியின் கோமோ ஆற்றின் அருகில் பார்ட்டிசான்களால் பிடிபட்டு பின் அவரும் அவர் மனைவியும் 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் திகதி சுட்டு கொல்லப்பட்டனர். இவரது உடல் மிலானுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள ஒரு எண்ணெய் விற்பனை நிலையத்தில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடப்பட்டு மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர்களுக்கு சிறப்பு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்

## அமெரிக்காவில் அனந்த்குமார் பேட்டி

(நியூயோர்க்)

**இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு சிறப்பு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். தமிழர்களுக்கான பாதுகாப்பை இலங்கை அரசு உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு அமெரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய பாரதீய ஜனதா கட்சியின் பொதுச் செயலாளர் அனந்த்குமார் தெரிவித்துள்ளார்.**



பா.ஜ.க.தலைவர்ராஜ்நாத்சிங்அமெரிக்காவில் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். அவருடன் அக்கட்சியின் பொதுச் செயலாளர் அனந்த்குமாரும் சென்றுள்ளார்.

இந்நிலையில் நியூயோர்க்கில் பேட் டியளித்த அனந்த்குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். எல்லா குடிமக்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். எந்த பிரிவினரும் வஞ்சிக்கப்படக் கூடாது.

நமது உணர்வுகளை இராஜாங்க ரீதியாக இலங்கை அரசிடம் வெளிப்படுத்த நாம் தயக்கம் காட்டக் கூடாது.

பா.ஜ.க. மீண்டும் மத்தியில் ஆட்சி அமைத்தால் இவற்றை உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்.

இலங்கையின் சமூக அரசியல் பொருளாதார அமைப்பில் தமிழர்களுக்கு முன்னுரிமை தரும் புதிய வழிமுறையை இலங்கை அரசு ஏற்படுத்தி தர வேண்டும்.

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு சிறப்பு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். தமிழர்களுக்கான பாதுகாப்பை இலங்கை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என அவர் கூறினார். (அ-2)

# நபர் மீது தாக்குதல் நடத்தியவர் தர்மபணம் செலுத்த வேண்டும்

## பரு. நீதிமன்றம் உத்தரவு

(கரவெட்டி)

வடமராட்சி துன்னாலை பகுதியில் தகராறொன்றில் கூரிய ஆயுதத்தால் நபர் ஒருவரை தாக்கி பெருங்காயம் விளைவித்த வழக்கின் எதிராளியை வதிரி ஸ்ரீ பரந்தாமன் ஆச்சிரம மடத்திற்கு 50 ஆயிரம் ரூபா தர்மப்பணமாக செலுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் சம்பவதினம் இருவருக்குமிடையில் ஏற்பட்ட தகராறில் நபர் ஒருவர் எதிராளியைக் கூரிய ஆயுதத்தால் தாக்கி பெருங்காயத்தை விளைவித்துள்ளார்.

இவ்வழக்கின் இறுதி தீர்ப்பு நேற்று முன்தினம் பருத்தித்தறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரத்தினால் வழங்கப்பட்டது.

இரு நபர்களும் மன்றில் தாம் சமாதானமாக செல்வதாக தெரிவித்ததையடுத்து முறைப்பாட்டாளரான பாதிக்கப்பட்ட நபர் தனக்கு நட்ட ஈடு எதுவும் தேவையில்லை என மன்றில் தெரிவித்ததையடுத்து எதிராளிக்கு தவணை அடிப்படையில் வதிரி ஸ்ரீ பரந்தாமன் ஆச்சிரமம் மடத்திற்கு தர்மப்பணம் செலுத்த வேண்டுமென நீதவான் உத்தரவிட்டார். (அ-ம-24)

# பொதுநலவாய மாநாட்டுக்கு 1930 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

இலங்கைக்கு நவம்பர் மாதத்தில் வருகை தரும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் பயன்படுத்துவதற்காகஅதிசொகுசுவாகனங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் தயாராகி வருகிறது. இதன்படி 7 ஆம் வரிசை பி.எம்.டபிள்யூ, மெஸ்டாஸ், பென்ஸ் எஸ் கிளாஸ் வாகனங்களை இறக்குமதி செய்ய திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

குறித்த வாகனங்கள் பொதுநலவாய தலைவர்களால் பயன்படுத்தப்பட்ட பின்னர் அவற்றை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எனினும்சிலஅமைச்சர்கள்குறித்த வாகனங்களைப் பயன்படுத்த அனுமதி தருமாறு அரசாங்கத்தின் உயர் மட்டத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மற்றும் 6 ஆயிரம் பிரதிநிதிகளின் போக்குவரத்துக்கள் தொடர்பில் மாத்திரம் 1930 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் பொதுநலவாய மாநாட்டு செலவுகளின் அடிப்படையில் பொது நலவாய பிரதிநிதிகளின் தங்குமிடங் களுக்காக 85 மில்லியன் ரூபாயும் வர்த்தக அமர்வுகளுக்காக 90 மில்லியன் ரூபாயும் பொதுமக்கள் அமர்வுக்காக 95 மில்லியன் ரூபாயும் உத்தியோகபூர்வ வசதி களுக்காக 290 மில்லியன் களும் உறவினர்களின் நலன்களுக்காக 35 மில்லியன் ரூபாயும் சமூக திட்டங்களுக்காக 75 மில்லியன் ரூபாயும் மாநாட்டு அனுமதிகளுக்காக 850 மில்லியன் ரூபாய்களும் ஏனைய செலவுக்காக 105 மில்லியன் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதனைத்தவிர பிரசாரங்கள் மற்றும் இணையத்தளங்களுக்காக 1900 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்படவுள்ளனஎனஅச்செய்திகுறிப் பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# விபத்தில் சிக்கி ஒருவர் பலி

வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் சிலாபம்–கொழும்பு வீதியில் மாரவில பகுதியில் நேற்றையதினம் அதிகாலை இடம்பெற்றது.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

கெப் ஒன்றுடன் துவிச்சக்கரவண்டி மோதி இவ்விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபர் மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் இதுவரை அடையாளம்காணப்படவில்லை. மாரவிலபொலிஸார் விசாரணைணகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# 10 வீதமானோருக்கு உளவியல் பாதிப்பு

நாட்டின் மொத்த சனத்தொகையில் 10 வீதமானவர்களுக்கு உளவியல் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பத்தில் ஒருவர் உளவியல் அழுத்தங்களால் அவதியுறுவதாக சுகாதார அமைச்சின் ஆய்வுப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

2007ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது. நாடு தழுவிய ரீதியில் நடத்தப்பட்ட முதலாவது உளவியல் சார் ஆய்வு மதிப்பீடு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

அதிக அழுத்தம், அதிக யோசனை மற்றும் பிற காரணிகளால் அதிகளவான மக்கள் உளவியல்சார் நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளனர். நோய்களால் பாதிக்கப்பட்ட பலர் சிகிச்சை பெற்றுக்கொள்வதில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)



யாழ். கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் வாசிப்பு முகாம் நடைபெற்ற போது...

# காணி, பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும்-ஹெல உறுமய

(கொழும்பு)

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதாக காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரியுள்ளது.

குறிப்பாக வட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னதாக பிரிவினைவாதத்தைத் தூண்டும் சகல சரத்துக்களும் நீக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள் ளது.

இவ்வாறு காணி, பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்படாவிட்டால் 13 ஆவது திருத்தச் சட்டத்தை மாற்றியமைப்பது குறித்து நாடாளுமன்ற தெரிவுக்குழுவிலிருந்து வெளியேற நேரிடும் என கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகன் குறித்து அதன் தலைவர் நிமால் சிறிபால டி.சில்வா அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளார்.

இந்த அறிக்கை கட்சியின் மத்திய செயற்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் எனவும் அதன் பின்னர் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

காணி, பொலிஸ் அதிகாரங்கள் இரத்து செய்யப்படாவிட்டால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதில் பயனில்லை என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை காணி, பொலிஸ் அதிகாரங்கள் வட மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னதாக இரத்து செய்யப்படாவிடின் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலிருந்து விலகிக் கொள்ளப் போவதாக அமைச்சர் விமல் வீரவன்ச அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# யாழில் ஸ்ரீ.சுதந்திர கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள்

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் விபரங்களை சுதந்திரக் கட்சி வெளியிட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு ஏழுபேர் தெரிவு செய்யப்பட்டுள்ளன்ரெனவும் கொழும்பில் நேற்று இவர்கள் வேட்பு மனுத்தாக்கல் செய்தனர் எனவும் அக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன், முன்னாள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மாநகரசபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான முடியப்பு றெமீடியஸ், சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எஸ். பொன்னம்பலம், நெல்லியடி வணிகர் கழகத்தலைவர் அகிலதாஸ், யாழ். மாநகர சபை உறுப்பினர் அஹமட் சுபியான், எஸ். செந்தூரன், எஸ்.கதிரவேல் ஆகியோர் போட்டியிடவுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணைக்குழுக்களை அமைப்பதால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை

## சட்டத்தரணிகள் சம்மேளனம் தெரிவிப்பு

(கொழும்பு)

**போர் நடைபெற்ற 30 வருட காலத்தில் காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்த ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க எடுத்துள்ள முடிவானது பாரதூரமான சந்தேகங்களை எழுப்பியுள்ளது என்று மனிதவுரிமை ஆர்வலர்களான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.**

சட்டத்தரணிகள் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

போர் நடைபெற்ற காலத்தில் காணாமற்போனவர்கள்பற்றிவிசாரணைநடத்தஆணைக்குழுவொன்றை நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

காணாமற் போனவர்கள் பற்றி அறிய விரிவான விசாரணைகள் நடத்தப்படுவது அவசியம் எனக் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனினும் இவ்வாறான ஆணைக்குழுக்கள் மூலம் நியாயத்தை எதிர்பார்க்க முடியாது என காணாமற் போனவர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வருபவரும் ஜனநாயகத்திற்காக சட்டத்தரணிகள் சம்மேளனத்தின் செயலாளருமான சந்திரபால குமாரகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமற்போனவர்கள் குறித்து கண்டறிய கடந்த காலங்களிலும் பல ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. எனினும் அவற்றால் எந்தப் பயனும் ஏற்படவில்லை.

சர்வதேச அழுத்தங்கள் காரணமாகவே அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது என்றார். (அ-2)

# புளொட் அமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள்

(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) வேட்பாளர்களின் விபரங்களை அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் புளொட் தலைவர் திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன், முல்லைத்தீவு மாவட்டத்தில் கந்தையா சிவநேசன்(பவன்), வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகர சபை முன்னாள் தலைவர் ஜி.ரி. லிங்கநாதன் (விசுபாரதி) மற்றும் வவுனியா நகரசபை முன்னாள் உபதலைவர் க.சந்திரகுலசிங்கம் (மோகன்), மன்னார் மாவட்டத்தில் இதயராஜா சார்ள்ஸ் ஆகியோர் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் புளொட் சார்பில் போட்டியிடவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)

# சர்வதேச நடுவர் நீதிமன்றத்தை தளமாக பயன்படுத்த வேண்டும்

## சர்வதேசத்தை கோருகிறார் பீரிஸ்

சர்வதேச நடுவர் நீதிமன்றத்தை சர்வதேசம் ஒரு தளமாக பயன்படுத்த வேண்டும் என தான் யோசனையை முன்வைத்ததாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நெதர்லாந்து சென்றிருந்த பீரிஸ் ஹேக் நகரில் உள்ள நிரந்த சர்வதேச நடுவர் நீதிமன்றத்தின் செயலாளர் யூகோ சீபெல்சை சந்தித்த போதே இந்த யோசனையை முன்வைத்துள்ளார்.

சர்வதேச மத்தியஸ்தம் தொடர்பில் இலங்கை சிறந்த பங்களிப்பை வழங்க முடியும் எனவும் இந்தத் துறையில் நிபுணத்துவம், உட்கட்டமைப்பு போன்றவற்றை செயற்படுத்துவது தொடர்பிலும் இணக்கம் காணப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சர்வதேச நடுவர் நீதிமன்றம் வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் சர்வதேச உறவுகளில் இருந்து வரும் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் முன்னணியில் இருந்து செயற்பட்டு வருகிறது.

இந்த நீதிமன்றம் 1899 ஆம் ஆண்டு நெதர்லாந்தின் ஹேக் நகரில் ஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# புதையல் தோண்டிய 10 பேர் கைதாகினர்

(கொழும்பு)

மொரவெவ-மஹதிவுல்வெவ- திபிரிவெவ பகுதியில் புதையல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 10 சந்தேக நபர்கள் மொரவெவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதையல் அகழ பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் சந்தேக நபர்கள் பயன்படுத்திய ஜீப் என்பவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மாதம்பை, கல்குளம், லுனுவில, நிட்டம்புவ மற்றும் மொரவெவ பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

சம்பவம் தொடர்பில் மேலும் ஐவர் கைது செய்யப்படவுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலை நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். (அ-2)

# காற்பந்தாட்ட பிரிவில் மன்னார் அணி சம்பியன்

(மானிப்பாய்)

இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் மாவட்ட ரீதியிலான இளைஞர் கழக சம்மேளனங்களின் அணிகளுக்கிடையில் தற்போது காற்பந்தாட்ட போட்டி நடைபெற்று வருகின்றது.

காற்பந்தாட்டப் போட்டிகளின் இறுதிப் போட்டி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வுகளுடன் பொலனறுவையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முதன்முறையாக இந்த இறுதிப் போட்டியில் வடமாகாணத்தைச் சேர்ந்த யாழ். மாவட்டம் மற்றும் மன்னார் மாவட்ட அணிகள் மோதின.

முதற்பாதியாட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் எதுவும் பெறவில்லை. தொடர்ந்து இரண்டாவது பாதியாட்டத்தில் மன்னார் மாவட்ட அணி ஆட்டத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

தாக்குதல் ஆட்டங்கள் மேற்கொண்ட மன்னார் மாவட்ட அணி அடுத்தடுத்து இரண்டு கோல்களை அடித்தது.

போட்டி முடியும் வரையும் இந்த இரண்டு கோல்களும் நிலைக்க மன்னார் மாவட்ட அணி 2:0 என்ற கோல்கள் கணக்கில் தேசிய சம்பியனாகியது. (அ-23)

# இந்து மக்கள் கட்சி சார்பில் கச்சதீவில் கொடியேற்றுவோம்

## அர்ஜூன் சம்பத் கூறுகிறார்

(கொழும்பு)

கச்சதீவில் இந்து மக்கள் கட்சி சார்பில் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி தேசிய கொடியேற்றப்படும் என அக்கட்சி தலைவர் அர்ஜுன் சம்பத் கூறியுள்ளார். அவர் கூறியதாவது,

கச்சதீவில் தேசிய கொடியேற்ற வேண்டுமென அனைத்து மாவட்ட கலெக்டர்களிடமும் அனுமதி கேட்போம். அங்கு நமது தேசிய கொடி பறப்பதற்கு அனுமதியுள்ளது. தமிழக மீனவர்களின் உரிமையை நிலை நாட்ட தேசிய கொடி பறக்க தமிழக, மத்தியரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அரசு கொடியேற்ற மறுத்தால் இந்து மக்கள் கட்சி சார்பில் ஒத்த கருத்துடைய கட்சிகளுடன் இணைந்து அங்கு கொடியேற்றி உரிமையை நிலை நிறுத்துவோம்.

கூடங்குளத்தில் மின்னுற்பத்தி ஆரம்பமாகிய பின்பும் உதயகுமார் போன்றவர்கள் அப்பாவி மக்களைத் தூண்டி விட்டு உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக போராடி வருகின்றனர்.

கூடங்குளம் கடற்கரையோர பகுதிகளில் மத்திய, மாநில அரசுகளின் நடவடிக்கைகள் செயலிழந்து விட்டன.

அங்கு சட்டத்தின் ஆட்சிகள் நடைபெறவில்லை. மேலும் உதயகுமாரின் நடவடிக்கைகள் உள்நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தானதாகவுமுள்ளது என்றார். (அ-2)

# மன்னாரில் கடலுக்குச் சென்ற இரு மீனவர்கள் கரை திரும்பவில்லை

(மன்னார்)

கடலுக்குச் சென்ற மன்னார் மீனவர்கள் இருவர் கரைக்கு திரும்பி வரவில்லையென தலைமன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மன்னார் பேசாலையிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை கடலுக்குச் சென்ற மீனவர்கள் இருவரே இன்னமும் கரைக்கு திரும்பி வரவில்லையென பொலிஸார் கூறினர்.

பேசலையை சேர்ந்த டியூரன் அப்புகாமி (வயது 38), கமால்டீன் சமீன் (வயது 26) ஆகியோரே கடற்றொழிலுக்காக படகில் சென்றவர்களாவர். இது தொடர்பில் இம்மீனவர்களின் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கையை கடற்படையுடன் இணைந்து தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-2)



யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் வி.ரி.ஜயந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் மாணவர் ஒருவருக்கு விருந்தினர் பரிசில் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்;- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்ச்சைக்குரிய களத்துள் நுழையும் இலங்கை பாதுகாப்புப் படை...!



இலங்கை இராணுவத்தின் வரலாற்றில் இதுவரை தளபதிகளாக இருந்த மூன்று பேர் தான், நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக இந்தப் பதவியை வகித்துள்ளனர்.

1947 ஆம் ஆண்டு வரையில் 10 ஆண்டுகள் இராணுவத்தின் தளபதியாக இருந்தவர் ஜெனரல் சேபால ஆட்டிக்கல.

இராணுவத் தளபதி பதவியை வகித்த முதல் இலங்கையரான மேஜர் ஜெனரல் அன்ரன் முத்துக்குமாரு, 1955 ஆம் ஆண்டு தொடக்கம், 1959 ஆம் ஆண்டுவரை, 4 ஆண்டுகள் 10 மாதங்கள் இந்தப் பதவியில் இருந்தார்.

இவர்களை அடுத்து, ஜெனரல் ஜெகத் ஜெய சூரிய தான் நான்கு ஆண்டுகளுக்கும் அதிகமாக இராணுவத் தளபதியாக இருந்தவர். இந்தப் பதவியில் இருக்கும்போதே, சரத் பொன்சேகாவுக்கு நிகரான ஜெனரல் பட்டமும், அவருக்கு வழங்கப் பட்டுவிட்டது. போரில்வெற்றி பெற்றதும் சரத் பொன்சேகாவுக்கு ஜெனரல் பட்டம் அளிக்கப்பட்டது. அப்போது, இராணுவத் தளபதியாக பதவியில் இருக்கும்போதே, ஜெனரல் பட்டத்தைப் பெற்ற ஒரே ஒருவர் என்ற பெருமையையும் அவர், பெற்றிருந்தார். அந்தப் பெருமையை நீக்கவேண்டும் என்பதால், ஜெகத் ஜெயசூரிய இராணுவத் தளபதியாக இருக்கும் போது, அவருக்கும் ஜெனரல் பட்டம் அளிக்கப்பட்டது.

அரசாங்கத்துக்கு எந்த வகையிலும் தலைவலி கொடுக்கக் கூடியவராக இல்லாத இவரது இயல்பினால், கூட்டுப்படைகளின் தளபதி பதவியும் இவரைத் தேடி வந்தது. இம்மாத இறுதியுடன் இராணுவத் தளபதி பொறுப்பில் இருந்து இவர் விலகிக் கொண்டதும், அடுத்த இராணுவத் தளபதியாக, மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க அந்தப் பதவியை பொறுப்பேற்பார். புதிய இராணுவத் தளபதி பதவியேற்புடன், இலங்கை இராணுவத்தின் உயர்மட்டக் கட்டளை அமைப்பில் மாற்றங்கள் செய்யப்படும் வாய்ப்புகள் உள்ளன. இந்த நிலையில், இராணுவத் தளபதி பதவியில் இருந்து விலகவுள்ள, ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய அண்மையில் வெளியிட்ட தகவல் ஒன்று பலத்த சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

சீனா, ரஷ்யா, ஈரான், ஆகிய நாடுகளில் உள்ளது போன்று, இலங்கை இராணுவமும், இலாப மீட்டும் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான அமைச்சரவை அனுமதிக்காக காத்திருப்பதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை இராணுவம் இலாப மீட்டும் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதென்பது வேறு விடயம். ஈரான், ரஸ்யா, சீனா இராணுவங்களைப் போன்று செயற்பட நினைப்பதென்பது வேறு விடயம்.

இந்த நாடுகளின் இராணுவங்கள், ஏனைய நாடுகளினது இராணுவங்கள் அழைக்கப்படுவது போன்று அழைக்கப் படுவதில்லை.

ஈரானில் புரட்சிக்காவல் படை என்றும், சோவியத் ரஸ்யாவில் செஞ்சேனை என்றும், சீனாவில் மக்கள் விடுதலைப் படை என்றும் அழைக்கப்பட்டும் வழக்கம் உள்ளது. இந்த நாடுகள் அனைத்துமே, மேற்கு நாடுகளுக்கு எதிரான போக்கையும், கடும்போக்கு இராணுவ வாதக் கொள்கையும் கடைப் பிடிப்பவை. இந்த நாடுகளின் முன்னுதாரணத்தை பின்பற்ற இலங்கை முற்படுவது தான், பல்வேறு தரப்பினரிடமும் கேள்விகளை எழுப்பியுள்ளது. இலாப மீட்டும் தொழில் முயற்சிகளில் இராணுவம் ஈடுபடுவதற்கு அளிக்கப்படும் அனுமதியானது, எகிப்தில் தற்போது ஏற்பட்டுள்ள நிலையையே இலங்கையிலும் ஏற்படுத்தும் என்று ஐ.தே.க எச்சரித்துள்ளது.

ஏற்கனவே, இராணுவத்தின் சேவையில் உள்ள அதிகாரிகள் மற்றும் ஓய்வுபெற்ற அதிகாரிகளே அரசாங்கத்தின் சேவைகளில் கணிசமாக புகுத்தப்பட்டுள்ளனர்.

எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், அதற்குள் இராணுவ சேவையில் இருந்தவர்கள்- இருப்பவர்களின் ஆதிக்கம் உள்ளது.

வெளிவிவகாரச் சேவையில் கூட, இராணுவச் செல்வாக்கே மேலோங்கி வருகிறது.

இரண்டு இலட்சம் பேரைக் கொண்ட இராணுவத்தைக் கட்டிக் காப்பதில் அரசாங்கத்திற்கு நெருக்கடி உள்ளது என்பதற்காக, அவர்கள் இலாப மீட்டும் தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்தப்படுவது, ஆபத்தானது என்கிறது ஐ.தே.க.

இலங்கையைப் பொறுத்த வரையில், போர்க்காலத்தில் 2 இலட்சம் படையினர் தேவைப் பட்டது உண்மை. ஆனால், இப் போது அந்தத் தேவை இல்லை. ஆனாலும், இராணுவத்தை நிலையாகப் பராமரிக்கத் திட்டமிட்டுள்ளது அரசாங்கம்.

இரண்டு இலட்சம் படையினரை கட்டியாள்வது ஒன்றும் சுலபமான விடயமல்ல.

இந்தப் பிரச்சினையை சமாளிக்க இரண்டு வழிகள் உள்ளன.

ஒன்று, படைக்குறைப்புச் செய்வது- பொருளாதார நெருக்கடியால், பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகள் இந்த வழியை இப்போது பின் பற்றுகின்றன.

இரண்டாவது- அவர்களை இராணுவத்தில் வைத்துக் கொண்டே வேறு பணிகளில் ஈடுபடுத்துவது.

இரண்டாவது வழியைத்தான் அரசாங்கம் கையாள முனைகிறது.

இந்த வழிமுறையை சீனா, ஈரான் போன்ற நாடுகள் பின் பற்றுகின்றன. அங்கு எத்தகைய நெருக்கடி வந்தாலும், இராணுவத்துக்கான வளங்கள் ஒதுக்கப்பட்டு, படை பலம் பாதுகாக்கப்படும். அதேவேளை, படையினர் உற்பத்தி, அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்தப் படுவர்.

இலங்கை அரசாங்கத்திற்கு இரண்டு இலட்சம் படையினரை பராமரிக்க வேண்டிய தேவை யில்லாத போதிலும், உடனடியாக படைக்குறைப்புச் செய்து அவர்களை வீட்டிற்கு அனுப்பவதும் சிக்கலானது. ஆதனால் தான், சீனா, ஈரான் போன்ற இலாபமீட்ம் தொழில்களில் ஈடுபடும் ஆர்வத்தை அது கொண்டுள்ளது.

சீனாவை பொறுத்தவரையில், றியல் எஸ்ரெட் துறையில் சீன இராணுவ நிறுவனங்கள் நீண்டகாலமாகவே ஈடுபட்டுவருகின்றன.

ஈரான், ரஸ்யா போன்ற நாடுகளிலும், பல்வேறு பாதுகாப்பு, உற்பத்தி உள்ளிட்ட துறைகளில் தொழில் முயற்சிகளில் இராணுவ நிறுவனங்கள் ஈடுபடுத் தப்படுகின்றன.

ஒரு வகையில் இது இந்த நாடுகளின் அபிவிருத்திக்கான பங்களிப்பாக இருந்தாலும், இன்னொரு பக்கத்தில் அந்த நாடுகளில் தேசிய பாதுகாப்பு நலன்களை பாதுகாக்கவும், பலத்தை அதிகரிக்கவும், பெருமளவிலான நிறுவனங்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் ஜெய சூரியவே குறிப்பிட்டுள்ளார்.

இதிலிருந்து ஒன்றை விளங்கிக்கொள்ள முடிகிறது.

தேசிய பாதுகாப்பு நலன்களை காரணம் காட்டி, பல்வேறு துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தும் சக்தியாக நிமிர்ந்து கொள்ள இராணுவம் விரும்புகிறது என்பது இதன் பொருள்- இது ஜனநாயக நாடுகளைப் பொறுத்தவரையில், ஏற்றுக் கொள்ளப்படாத செயல்முறை. ஏனென்றால், பாதுகாப்புத்துறை முக்கிய சக்தியாக இருந்தாலும், அது அரசாங்கத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் ஒன்றாக வளர்வதற்கு இடமளித்துவிடும் என்று ஜனநாயக நாடுகள் கருதுகின்றன.

இலங்கை அவ்வாறு கருதியிருந்தால். இத்தகைய யோசனையொன்றை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கும் அளவுக்குச் சென்றிருக்காது. இராணுவத்தைச் சார்ந்த கடும் போக்கு இராணுவ நிலைப்பாட்டைக்கொண்ட பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் செல்வாக்கு, அரசாங்கத்தில் அதிகமாக இருப்பதால், இதனை சுலபமாக கையாள முடிகிறது. ஆனால், இந்தப் பதவிக்கு ஒரு சிவில் அதிகாரி நியமிக்கப்பட்டாலோ, அல்லது வேறொரு அரசாங்கம் பதவிக்கு வந்தாலோ, இராணுவத்திற்கு இந்தளவுக்கு இடமளிக்க அனுமதிக்கப்படும் என்று கருதுவதற்கில்லை.

இன்னொரு பக்கத்தில், பொருளாதார ரீதியாக இலாப மீட்டும்தொழில்களில் இலங்கை இராணுவம் ஈடுபடுத்தப்பட்டால், அதுஏனைய நிறுவனங்களுக்கிடையிலான தொழிற் போட்டியை சாதாரணமான முறையில் அணுகுவதற்கும் வாய்ப்புகள் குறைவு, இதனால், நிறுவனங்களின் தொழில் சுதந்திரம் பாதிக்கப்படும்.

அண்மையில் இலங்கைக்கு வந்திருக்கும் ஐரோப்பிய ஒன்றிய, நாடாளுமன்றக் குழு, வடக்கில் பொரளாதார முயற்சிகளில் இராணுவத்தின் தலையீட்டைக் கடுமையாக விமர்சித்துள்ளது. இந்த பொருளாதார செயற்பாடுகளில் இராணுவம் ஈடுபடுவதால், சர்வதேச உடன்படிக்கைகளை இலங்கை இழக்கும் நிலை ஏற்படலாம் என்றும், ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் குழுவுக்குத் தலைமை தாங்கிய ஜீன்லம்பேர்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவம் மீது போர்க்குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்ற சூழிலில், அதனுடன் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்கள், தொழில் முயற்சிகளுக்கு வருவதை மேற்குலக நாடுகள் விரும்பாது என்பது இவரது கருத்தில் இருந்து புரிந்துகொள்ள முடிகிறது.

பங்களாதேசில் தொழிலாளர் உரிமைகள் மீறப்படுவதால் தான், அந்த நாட்டுக்கான வர்த்தக சலுகைகள் நிறுத்தப்பட்டன.

இலங்கைக்கும் கூட அத்தகைய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், போருடன் தொடர்புபட்டிருந்த படையினரைச் சார்ந்து இயங்கும் நிறுவனங்கள் தொழில் முயற்சிகளுக்கு வருவதை, தம்முடனான உடன்பாடுகளுக்கு முரணானது என்று மேற்கு நாடுகள் கருதலாம். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள எதிர்ப்பை மீறி, இலங்கை இராணுவத்துக்கு, இலாப மீட்டும் தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதியை அரசாங்கம் பெற்றுக் கொடுக்கலாம். ஆனால், அது நாட்டின் அபிவிருத்திக்கான- பொருளாதார பங்களிப்புக்கான முயற்சி என்று கூறப்பட்டாலும் கூட சீன, ஈரானிய முன்னுதாரணங்களே. சர்வதேச அரங்கில் முதன்மைப்படுத்தப்படும், அதுவும், இந்த இரு நாடுகளுடனும் நெருங்கிய நட்புறவைக் கொண்டுள்ள இலங்கைக்கு, சர்வதேச அரங்கு, புதிய விம்பம் ஒன்றையே காண்பிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> கோயில்களில் இடாம்பீகம் முட்டாள்தனமான செயல் மட்டுமல்ல; அது இறைவனையே அவமதிப்பதாகும். *– நீயூட்டன்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பிரம்ம தேவர் தலைமையிலான குழுவிடம் யாழ்ப்பாணத்து மாணவர்கள் முறையீடு - 3

தொடர்ச்சியாகமின்சாரம்வழங்கவேண்டும்எனபிரம்மா தலைமையிலான தேவர் குழு சுன்னாகம் மின் அத்தியட்சகருக்கு கடும் உத்தரவு பிறப்பித்து தீர்ப்பளித்தது.

அதேநேரம் மின்தடை தொடர்பில் பொதுமக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் பொருட்டு சுன்னாகம் மின்சார சபைக்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி தமது பிரச்சினையை வெளிக்கொணர வேண்டும் எனவும் தேவையேற்படின் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவேண்டும் எனவும் தேவர் குழு பரிந்துரை செய்தது.

தொடர்ந்து யாழ்ப்பாண மாணவர்கள் சமர்ப்பித்த மகஜர் இரண்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நந்திதேவர் மகஜரை வாசித்தார்.

**நந்திதேவர் :** (மகஜர் 2)

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்களில் ஒலிபெருக்கிகள் அதிகூடிய சத்தத்துடன் இயக்கப்படுகின்றன. இதனால் ஆலயச்சூழலில் இருக்கின்ற மாணவர்கள் கல்வி கற்க முடியாமல் உள்ளது.

அதிகாலை, மாலை, இரவுப்பொழுது என்று ஒலிபெருக்கிகளின் தொல்லை மாணவர்களை மட்டுமல்ல; சாதாரண இயல்பு வாழ்க்கைக்கும் குந்தகமாக அமைந்து விடுகின்றது.

முன்பெல்லாம் கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றார்கள்! ஆனால் இப்போது கோயில் உள்ள ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று கூறும் அளவில் ஒலிபெருக்கிகளின் தொல்லை அதிகரித்துவிட்டது.

இதுமட்டும் அல்ல; ஐஸ்பழ வாகனங்களின் சத்தங்கள் சொல்லும் தரம் அன்று.

எனவே ஒலிபெருக்கிகளின் தொல்லையை நீக்கி மாணவர்களாகிய நாங்கள் கற்பதற்கு தேவர்குழு உதவவேண்டும்.

*(மாணவர்களின் இரண்டாவது மகஜரை நந்தி தேவர் வாசித்ததும் பிரம்மதேவருக்கு கடும் கோபம் வந்தது.)*

**பிரம்மா :** அமைதியான சூழலைப் பேணவேண்டிய ஆலயங்களில் ஒலிபெருக்கிச் சத்தமா? அனுமதிக்கவே முடியாது. எனக்குக் கோயில் கட்டாமல் விட்டதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கோயிலைக் கட்டி அந்தச் சூழலின் அமைதியைக் குலைப்பதை எந்த வகையிலும் ஏற்க முடியாது. ஒலிபெருக்கியின் சத்தம் மிகவும் மெல்லியதாக இருக்கவேண்டும். அதுவே தெய்வீக சூழலுக்குப் பொருத்துடையது.

உலகப் பிரசித்தி பெற்ற திருப்பதி ஆலயத்திற்கு சென்று பாருங்கள். மிகவும் நுண்ணிய ஒலியில் கோவிந்த நாமம் உச்சரிக்கப்படும். நல்லூர் கந்தப் பெருமானின் ஆலயத்தில் மிக அமைதியான ஓசை ஒலி. இத்தகைய நடைமுறையை ஏனைய ஆலயங்களும் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆலய அறங்காவலர்கள், தர்மகர்த்தா சபைகள் ஒலி பெருக்கி விடயத்தில் அதீத கவனம் செலுத்தி ஆலய சூழலில் அமைதியான – தெய்வீகமான சூழல் நிலவுவதை உறுதி செய்வது அவசியம். இது தொடர்பில் கடுமையான கண்டனத்தை தேவர்குழு விடுக்கின்றது.

ஆலய ஒலிபெருக்கி விடயத்தில் அந்தந்த பிரதேச செயலகங்கள், கலாசார உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தேவர் குழு உத்தரவிடுகின்றது.

ஐஸ்பழ வாகனங்களின் ஒலிபெருக்கி தொடர்பில் வியாபார அனுமதி வழங்குகின்ற அமைப்புகள், வரிப் பணம் அறவிடுகின்ற உள்ளூராட்சி சபைகள் கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டும்.

இதுமட்டுமல்ல; வீதிகளில், வீடுகளில், பொது அமைப்புகளில் ஒலிபெருக்கிகளை இயக்குவதாயினும் அவை அடக்கமாக ஒலிக்கவேண்டும் என்பதில் சம்மந்தப்பட்டவர்கள் அக்கறையுடன் இருக்கவேண்டும். தவறும் பட்சத்தில் உரியவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படும். இவ்வாறு பிரம்மதேவர் கூறினார்.

தொடர்ந்து மாணவர்கள் சமர்ப்பித்த மூன்றாவது மகஜரை வாசிக்க முன்னதாக தேவர்குழு தமக்குள் ரகசியமாக கதைத்துக் கொண்டது.

காதுகொடுத்து உற்றுக்கேட்டபோது **போதைப் பாக்கு** என்பது மட்டும் விளங்கியது. நந்திதேவர் மூன்றாவது மகஜரை வாசிக்கத் தொடங்கினார். *(நாளை தொடரும்..)*

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உதவுகிறது முஸ்லிம் காங்கிரஸ்

## தேசிய சுதந்திர முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு மாகாண சபை தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உதவும் வகையில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் செயற்படுகின்றது என தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

இதன் காரணமாகவே ரவூப் ஹக்கீம் தனித்துப் போட்டியிட தீர்மானித்துள்ளார் என தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரவூப் ஹக்கீம் பிரிவினைவா தத்தை ஆதரிப்பது தெளிவாகத் தெரிகின்றது. இதன் காரணமாகவே இம்முறை மாகாண சபை தேர்தலில் தனித்து போட்டியிகின்றார்.

அத்துடன் ரவூப் ஹக்கீம் மறைமுகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுகிறார். ஆனால் இதனை இலங்கை முஸ்லிம் காங்கிரஸில் உள்ள பலர் விரும்பவில்லை. முஸ்லிம் காங்கிரஸில் இது தொடர்பில் எதிர்ப்புக்கள் எழுந்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாட்டின் பிரிவினையை ஏற்படுத்தி நாட்டை பிரிக்கவே முயற்சித்து வருகிறது.

நாட்டில் மூவின மக்களும் சுமுகமாக வாழ்ந்து வரும் நிலையில் சம்பந்தன், விக்னேஸ்வரன் போன்ற பிரிவினை வாதிகள் நாட்டின் அமைதியை சீர்குலைக்கின்றனர். இதற்கு தற்போது ரவூப் ஹக்கீமும் துணை போயுள்ளார். இது முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றும் ஒரு செயல்.

இந்த அராஜக செயலுக்கு முஸ்லிம் மக்கள் துணைபோகக்கூடாது. முஸ்லிம் மக்கள் இதை புரிந்து செயற்பட வேண்டும். நாட்டின் பிரிவினைவாதத்தினை ஏற்படுத்தும் வட மாகாண சபைத் தேர்தலில் தேசிய சுதந்திர முன்னணி போட்டியிடாது.

13-வது சீர்திருத்தத்தினை இல்லாதொழிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் நாம் தொடர்ந்தும் முன்னெடுப்போம் என்றார். (எ-8)

# சுன்னாகத்தில் விபத்து; இருவர் படுகாயம்

முச்சக்கரவண்டி ஒன்று சமிஞ்ஞை இன்றி பிரதான வீதியைக் கடக்க முற்பட்டபோது இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவரும் யுவதி ஒருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

காங்கேசன்துறை வீதி சுன்னாகத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த இளைஞர் ஒருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்த யுவதி ஒருவருமே காயமடைந்துள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

முச்சக்கரவண்டி ஒன்று சமிஞ்ஞை இன்றி காங்கேசன்துறை பிரதான வீதியைக் கடக்க முயன்றுள்ளது. இதன்போது யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த துவிச்சக்கரவண்டியில் வந்த இளைஞன் குறித்த முச்சக்கர வண்டியுடன் மோதி, தன் பின்னால் வந்து கொண்டிருந்த யுவதி ஒருவரின் மோட்டார் சைக்கிளுடன் மோதி விழுந்துள்ளார்.

இவ்விபத்தில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த குறித்த இளைஞரும் மோட்டார்சைக்கிளில் பயணித்த யுவதியும் படுகாயமடைந்தனர்.

இதையடுத்து விபத்து தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை காயப்பட்ட யுவதியை பொலிஸார் வரும் வரையிலும் வைத்திய சாலைக்கு கொண்டுசெல்ல கூடியிருந்தவர்களில் சிலர் அனுமதி வழங்காத போதிலும் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் காயப்பட்ட யுவதியை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்த பின்னரேயே விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். (அ-5)

# அரச வாகனங்கள் குறித்து கணிப்பீடு செய்யப் பணிப்பு

(கொழும்பு)

மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாண சபை தேர்தல்களின் போது இணைத்துக் கொள்ளப்படவுள்ள அரசாங்க அதிகாரிகள் மற்றும் வாகனங்கள் தொடர்பில் கணிப்பீடு ஒன்று நடத்தப்படவுள்ளது.

இதன்படி அரசாங்க அதிகாரிகள் மற்றும் வாகனங்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையாளர் அனைத்து அமைச்சர்கள், மாகாண அமைச்சின் செயாளர்கள் மற்றும் திணைக்களங்களின் பிரதானிகளுக்கு சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

அதுபற்றி இரண்டு வாரங்களுக்குள் மாவட்ட தேர்தல்கள் காரியாலயம் அல்லது மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் அறிக்கைப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை கலைக்கப்பட்ட மாகாண சபைகளின் அமைச்சர்கள் மற்றும் கண்காணிப்பு உறுப்பினர்கள் தங்களின் வாகனங்களை இன்னும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கவில்லை என்று கபே அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் குறித்த மாகாணங்களின் ஆளுநர்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்திருப்பதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (எ-8)

# இந்தோனேசியர்கள் நால்வர் கைது!

(ஜகர்த்தா)

இந்தோனேசியாவின் ஜாவா பிரதேசத்தின் தென்மேற்கு கடற்பகுதியில் கடந்த வாரம் மூழ்கிய படகில் இருந்த புகலிட கோரிக்கையாளர்களை சட்டவிரோதமாக அனுப்பி வைத்த சம்பவத்துடன் தொடர்புடைய 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனை இந்தோனேசிய தேசிய பொலிஸ் பேச்சாளர் பிரிகேடியர் ரொனி சொம்பி உறுதிப்படுத்தியுள்ளார்.

200 பேரை ஏற்றிய படகு ஜாவாவுக்கு அருகில் உள்ள ஆழ்கடல் பகுதியில் மூழ்கியது. இந்த சம்பவத்தில் குறைந்தது 15 பேர் உயிரிழந்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் புகலிட கோரிக்கையாளர்களுக்கு படகை பெற்றுக் கொடுக்க உதவியுள்ளனர். இவர்கள் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பிரிகேடியர் ரொனி சொம்பி தெரிவித்தார்.

படகை ஓட்டிச்சென்ற மாலுமி தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்த படகில் இலங்கை, ஈரான் மற்றும் ஈராக், ஆப்கானிஸ்தான் நாடுகளைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணம் செய்திருந்தனர். (எ-8)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

# நல்வரம்



நாம் வெற்றியாக, அமைதியாக வாழவேண்டும். அதற்கு என்னென்ன வேண்டும் என்கின்றபோது ''உடல்நலம், நீளாயுள், நிறை செல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி வாழ்வோம்'' இதைவிட உங்களுக்கு என்னவேண்டும்? ஒரு அன்பர் ஒருமுறை ஒரு கேள்வியெழுப்பினார். நாம் தெய்வத்தன்மையில் இருந்து தவம் செய்த பின்பு நமக்காக இவையெல்லாம் கேட்க வேண்டுமா என்று நான் விளக்கினேன். பொதுவாக எல்லோருக்கும் அது தேவை என்று சொல்கிறேன்.

நீங்களே எண்ணிப்பாருங்கள். உடல் நலம் வேண்டுமா, வேண்டாமா? பின்பு நீளாயுள். நாம் எடுத்த காரியத்தை முடிக்கவேண்டும்; அறிவை அறிவதற்காகப் பிறந்திருக்கின்றோம். அதற்காக அந்த வழியில் (process) இருக்கின்றோம். அது நிறைவேற வேண்டும். அதற்கு இடையில் துண்டு போட்ட மாதிரி இந்த உயிரை விட்டுவிட்டால் வேலை முடியாது. ஆகவே நீளாயுள் வேண்டும். அடுத்தது நிறை செல்வம். இந்த உலகத்தில் வாழும் வரை வசதிகள் வேண்டுமல்லவா? எல்லாம் நல்லபடியாக எண்ணுவதுதான் நிறைசெல்வம். உயர்புகழ் என்றால் என்ன? நம்முடைய செயல் எல்லோருக்கும் நல்லபடியாக அமைவது, அமையும் போது அதனால் பயன்பெற்ற மக்களுடைய பாராட்டுத்தான் புகழ்.

ஆகவே, புகழ் என்பது ஏதோ நமக்குத் தனிப்பட்ட சொத்து அன்ற. நான் செய்யக்கூடிய காரியங்கள் எல்லாம் எல்லோருக்கும் நன்மை அளிக்கட்டும் என்பதுதான் புகழில் இருக்கக்கூடியது. கடைசியாக மெய்ஞ்ஞானம். நாம் எந்த நோக்கத்தோடு பிறந்தோமா, அந்த நோக்கத்தை அடைவதற்கு மெய்ப்பொருள் விளக்கம் வேண்டும். இந்த ஐந்தையும்தான் "உடல்நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி வாழ்க'' என்று சொல்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி.மாவட்ட கிராமங்களில்

# அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க கோரிக்கை

(மல்லாவி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, கரைச்சி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு நான்கு வருடங்கள் கடந்துள்ள நிலையில் இப் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள பல கிராமங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

ஏ-9 வீதியை அண்டிய பகுதியிலுள்ள மக்கள் ஓரளவு வசதி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஆயினும் கிராமத்திற்குள் உள்ள பல பிரதேசங்கள் வீட்டத்திட்டம் பெறல், மின்சாரம், போக்குவரத்து, சுகாதார வசதிகளிலும் வீதி புனரமைப்பு போன்றவற்றில் பின்தங்கி உள்ளனர்.

யுத்தத்தினால் கிளிநொச்சி மாவட்டம் பேரழிவுகளை சந்தித்து இருந்தது.

இதனால் இங்கு மாற்றுத் திறனாளிகள், கணவனை இழந்த பெண்கள் ஆகிய நிலையிலுள்ளவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் தேவையாகவுள்ளன.

குறிப்பாக வட்டக்கச்சி, பூநகரி, பரவிப்பாஞ்சன் ஆகிய கிராமங்களுக்கு அடிப்படை வசதிகள் முழுமையாக சென்றடையவில்லை.

கடந்த 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டுவரை கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விவசாய நடவடிக்கைகளின் போது வெள்ளத்தினாலும் வரட்சியினாலும் விவசாயம் பாதிக்கப்பட்டிருந்தது.

இதற்கான நிவாரணங்களோ, நட்டஈடோ விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. இதனால் வங்கிகளில் வைத்த கடனை மீள முடியாமல் விவசாயிகள் திண்டாடி வருகின்றனர்.

மீள்குடியேற்றம் நடைபெற்று போதிலும் அங்கு இராணுவத்தினர் இருப்பதனால் அதிகமான மக்கள் தமது சொந்தக் காணிகளுக்கு செல்லமுடியாது உறவினர் வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

ஆகவே, மாவட்டத்தினை அபிவிருத்தி செய்கின்ற போது அங்குள்ள அனைத்து கிராமங்களின் பிரச்சினைகளையும் ஆராய்ந்து உதவிகளை பெற்றுக் கொடுக்க அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டுமென கிராமமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-9-15)




# புனித அந்தோனியார் ஆலய திருவிழா

(பூந்தோட்டம்)

வவுனியா பெரியகட்டு புனித அந்தோனியார் ஆலய தலயாத்திரை திருவிழா கடந்த 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில் தொடர்ந்து நவநாட்கள் இடம்பெற்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதிவரை இடம் பெறவுள்ளதாக செட்டிகுளம் பிரதேச செயலர் என்.கமலதாஸ் தெரி வித்துள்ளார்.

மேற்படி திருவிழா தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

தலயாத்திரைக்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செட்டிகுளம் பிரதேச செயலகமும் தேவாலய நிர்வாகத்தினரும் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

இம் முறையும் அதிகமான பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதனால் அவர்களுக்கான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள், போக்குவரத்து வசதிகள் என்பன ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன என்றார். திருவிழாவின் இறுதி மூன்று நாட்களும் விஷேட திருப்பலிகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9-266)

# வடமாகாண மீலாத் விழா போட்டியில் வவு. முஸ்லிம் மகா வித்தி. முன்னிலை

(பூந்தோட்டம்)

வடமாகாண கல்வி திணைக்களத்தினால் நடத்தப்பட்ட வட மாகாண முஸ்லிம் பாடசாலைகளுக் கிடையிலான மீலாத் விழாவில் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம் 18 இடங்களை தனதாக்கி முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இப் போட்டிகளின் அடிப்படையில் அல்குர்ஆன் மனனப் போட்டிகளில் முதலாமிடங்கள் மூன்றினையும் கதாபிரசங்கம், கோலாட்டம், நாடகம், கட்டுரை (ஆரம்ப பிரிவு) போன்ற போட்டிகளில் முதலாமிடத்தையும் கிராஅத் (இடைநிலை பிரிவு, கனிஷ்ட பிரிவு),பேச்சு (ஆரம்ப பிரிவு), கட்டுரை (சிரேஷ்ட பிரிவு), அரபு எழுத்தணி (இடைநிலை பிரிவு) போன்ற பிரிவுகளில் மூன்றாமிடங்களையும் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள் பெற்று சாதனை புரிந்துள்ளனர் என பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இருந்து மாணவர்கள் போட்டியில் பங்கேற்றிருந்த நிலையில் மன் னார் மாவட்டம் மாவட்ட ரீதியில் முத லாமிடத்தை பெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ம-266)

# இறுவெட்டு வெளியீடு


(பூந்தோட்டம்)

சு.வரதகுமாரின் இயக்கத்தில் தயாரிக்கப்படவுள்ள பூவிழி டொட் கொம் என்ற திரைப்படத்தின் பாடல் தொகுப்புக்களின் இறுவெட்டு வெளியீடு எதிர்வரும் 16 ஆம் திகதி வவுனியாவில் இடம் பெறவுள்ளது.

ஏ.வி.ஆர். மூவியின் தயாரிப்பில் வெளிவரவுள்ள இத் திரைப்படம் தீபாவளியன்று இந்தியாவின் வட பழனியிலுள்ள திரையரங்கொன்றில் வெளியிடப்படவுள்ளது.

இப் படத்திற்கான இசையை இசையமைப்பாளர் கந்தப்பு ஜெயந்தன் வழங்கியுள்ளார். (ம-9-266)





வவுனியா வடக்கு தெற்கு கல்வி வலயங்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழுள்ள மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி மாணவரொருவருக்கு காசோலை வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் கலந்து கொண்ட மாணவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

# இலட்சார்ச்சனை

வற்றாப்பளை கண்ணகையம் மன் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வை முன்னிட்டு இலட்ச இலட்சார்த்த அர்ச்சனை விஞ்ஞாபனம் நாளை செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகி எதிர்வரும் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அத்தோடு, எதிர்வரும் 9 ஆம் திகதி இடம் பெறவுள்ள ஆடிப் பூரத் திருவிழா அன்று வற்றாப்பளை அம்மன் ஆலயத்திற்கு மேற்கு பகுதி யிலுள்ள ஞானமூர்த்தி பிள்ளை யார் ஆலயத்திலிருந்து 108 பாற் குடங்கள் எடுத்து வரப்பட்டு அபிஷே கம் நடைபெறவுள்ளதாக ஆலயப்பூ சகரும் முகாமையாளருமான குல சேகரம் சிவத்திரு கிருஷ்ண பவான் அறிவித்துள்ளார்.

வற்றாப்பளை அம்மன் ஆல யத்தில் பன்னிரெண்டு வருடங்க ளுக்கு ஒரு தடவை மட்டும் தான் கும் பாபிஷேக நிகழ்வு இடம் பெறுகின் றமை குறிப்பிடத்தக்கது. (ம-9-15)

# முதியோர் அமைப்பின் திட்டங்களை தெளிவுபடுத்தும் நிகழ்வு நாளை

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் இயங்கும் முதியோர்களுக்கான செயலகத்தினால் இலங்கை முழு வதும் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட முதியோர் அமைப்பினால் மேற்கொள்ளப்படும் திட்டங்களை தெளிவு படுத்தும் நிகழ்ச்சி கொழும்பு சமூக சேவைகள் திணைக்கள கேட்போர் கூடத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது.

இதற்கமைய, ஒவ்வொரு மாவட்ட செயலகத்திலும் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட முதியோர் அமைப்பின் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட அங்கத்தவர்கள் மூன்று பேருடன் பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, கிராமிய முதியோர் அமைப்பு மற்றும் பிரதேச முதி யோர் அமைப்பின் தகவல்கள், நிதி யுதவி வழங்கும் நடவடிக்கை, மாவட்ட முதியோர் அமைப்பின் அங் கத்தவர் தொடர்பான தகவல்கள் விஷேட நிகழ்வுகள் பற் றிய தகவல்களை சமர்ப்பிக்குமாறு முதியோருக்கான தேசிய செயலகத்தின் பிரதிப் பணிப்பாளர் என். வசந்திகா டயஸ், பதில் பணிப்பாளர் அனுஷா கோகுள பெர்னாண்டோ ஆகியோரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9-254)

# ஓய்வூதியத்திட்ட நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

இலங்கை சமூக பாதுகாப்பு சபை யின் ஓய்வூதியத் திட்ட நடமாடும் சேவையும் விழிப்புணர்வு கருத் தரங்கும் கிளிநொச்சிமாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது என இலங்கை சமூக பாதுகாப்புச் சபை யின் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி பாக்கியராசா பிரதீபன் தெரிவித் துள்ளார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக இலங்கை சமூக பாதுகாப் புச் சபையின் தலைவர் திருமதி சுமுணா ஆரியதாச கலந்து கொள் ளவுள்ளதோடு, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஸ்ரீனிவாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரை வென்றது இந்தியா

## சிம்பாவே ஏமாற்றம்

இந்தியா- சிம்பாப்வே அணிகள் மோதிய 3-வது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி ஹராரேயில் நேற்று மதியம் 12.30 மணிக்கு தொடங்கியது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் வீராட் ஹோலி, சிம்பாவே அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

ஆரம்ப வீரர்களாக சிம்பாவேயின் சிபாண்டா- சிகந்தர் ரஸா களம் இறங்கினார்கள்.


சிபாண்டர் ரன் ஏதும் எடுக்காமல் வினய் குமார் பந்தில் ஆட்டம் இழந்தார்.

ரஸா 1 ரன்னில் முகமது சமி பந்தில் ஆட்டமிழந்தார்.

அதன்பின் வந்தவர்கள் தொடர்ச்சியாக ஆட்டமிழக்க சிம்பாவே 46 ஓவரில் 183 ஓட்டங்களை எடுப்பதற்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

அந்த அணியின் வில்லியம்ஸ் அதிகபட்சமாக 45 ஓட்டங்களை எடுத்தார். இந்தியா தரப்பில் மிஸ்ரா 4 விக்கெட் வீழ்த்தினார்.

184 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியாவின் தொடக்க




ஆட்டக்காரர்களாக ஷர்மா மற்றும் தவான் களம் இறங்கினார்கள்.

இருவரும் சிறப்பான தொடக்கத்தை கொண்டுவந்த நிலையில் ஷர்மா 14 ரன்னில் அவுட் ஆனார். அதன்பின் தவானுடன் ஜோடி சேர ஹோலி களம் இறங்கினார்.

சிறப்பாக விளையாடி வந்த தவான் 32 பந்தில் 35 ரன் எடுத்து அவுட் ஆனார். அடுத்து ஹோலியுடன் ஜோடி சேர்ந்த ராயுடு 33 ரன்னில் ஆட்டம் இழந்தார்.

அடுத்து ஹோலியுடன் ரெய்னா ஜோடி சேர்ந்தார். இறுதியில் இந்திய அணி 35.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 187 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது.

ஹோலி அதிரடியாக விளையாடி 68 ரன்னிலும் ரெய்னா 28 ரன்னிலும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

ஆட்ட நாயகன் விருது மிஷ்ராவுக்கு வழங்கப்பட்டது.

5 ஒருநாள் போட்டி கொண்ட இந்த தொடரில் இந்தியா 3-0 என போட்டிகளில் வெற்றி பெற்று தொடரையும் வென்றுள்ளது.

## டில்சானின் சதத்தின் உதவியுடன்

# தொடரைக் கைப்பற்றியது இலங்கை

தென்னாபிரிக்க அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி, 36 பந்துகள் மீதமிருக்கையில் 8 விக்கெட்டுக்களால் அபார வெற்றியைப் பெற்று ஒரு போட்டி எஞ்சியிருக்கும் நிலையில் தொடரை 3:1 என்று தனதாக்கியது.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் இலங்கை அணிக்கும் 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது.

இத்தொடரின் முதல் மூன்று போட்டிகளின் முடிபில் இலங்கை அணி 2:1 என்ற கணக்கில் முன்னிலை வகித்த நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 4-வது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய அவ்வணி சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ஹசிம் அம்லாவும் குயின்ரன் டி ஹொக்கும் களமிறங்கினர்.

ஆரம்பம் அவ்வளவாகச் சரியாக அமையவில்லை. இதில் குயின்ரன் டி ஹொக் 8 ஓட்டங்களை மாத்திரமே பெற்று மலிங்கவினால் போல்ட் செய்யப்பட்டார்.

தொடர்ந்து வந்த டுமினி, களத்தில் நின்ற அம்லாவுடன் இணைந்து சிறப்பாக ஆடினார்.

இவர்களின் ஆட்டத்தில் அனல் பறந்தது. இருவரும் தமக்கிடையில் 101 ஓட்டங்களை இணைப்பாட்டாகப் பகிர்ந்த வேளையில் ஹசிம் அம்லா 71 பந்துகளில் 77 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை டில்சானின் பந்தில் எல்.பி. டபிள்யூ ஆனார்.




தொடர்ந்து வந்த வீரர்களின் போதிய பங்களிப்பு இல்லாத காரணத்தினால் தென்னாபிரிக்க அணியின் ஓட்டக்குவிப்பு மந்தமாகியது.

எனினும் தனிவீரராகத் தனித்து நின்று போராடிய டுமினி, தென்னாபிரிக்காவுக்கு உயிர்கொடுத்தார். இவரின் சிறப்பான ஆட்டத்தினால் தென்னாபிரிக்க அணி 200 ஓட்டங்களைக் கடந்தது. இவ்வாறு சிறப்பாக ஆடிய டுமினி 3 ஓட்டங்களினால் சதத்தைக் இழந்து இறுதி விக்கெட்டாக ஆட்டமிழக்க அவ்வணி 48.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 238 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக ஜே.பி.டுமினி 121 பந்துகளில் 7 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உள்ளடங்கலாக 97 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக அஜந்த மென்டிஸ் 51 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், லசித் மலிங்க 52 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், டில்சான் 40 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

239 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இலங்கை அணிக்கு திலகரத்ன டில்சான் - குமார் சங்கக்கார இணையின் 2-வது விக்கெட் இணைப்பாட்டமான 184 ஓட்டங்கள் கைகொடுக்க அவ்வணி 44 ஓவர்களில் வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக திலகரத்ன டில்சான் 130 பந்துகளில் 16 பவுண்டரிகள் அடங்கலாக 115 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்ததுடன், குமார் சங்கக்கார 101 பந்துகளில் 8 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 91 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக ரிசொற்சோபே, மோர்னி மோர்கல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக இலங்கை அணியின் டில்சான் தெரிவு செய்யப்பட்டார்.

5 போட்டிகளைக்கொண்ட இத்தொடரின் முதல 4 போட்டிகளின் முடிபில் இலங்கை அணி 3:1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான இறுதி ஒருநாள் போட்டி வரும் ஓகஸ்ட் மாதம் 2-ம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

## மீனவர்களிடையே...

வருடங்களாக முயற்சிகளை மேற்கொண்டிருந்த தலைவர்களை இந்தப் பேச்சுக்களில் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும் என்று கோரியிருக்கின்றது.

இந்தியத் தரப்பினருடன் ஏற்கெனவே பலசுற்றுப் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்த இலங்கை மீனவர் தலைவர்களை உள்ளடக்கிய பேச்சுக்களே அர்த்தமுள்ளவையாக இருக்க முடியும் என்பதையும் அந்த அமைப்பு சுட்டிக் காட்டியிருக்கின்றது.

பல வருடங்கள் மீனவர்களுடன் நெருங்கிச் செயற்பட்டு வந்துள்ள தேசிய மீனவ ஒத்துழைப்பு அமைப்பை, அரசாங்கம் தனக்கு எதிரான சக்தியாகப் பார்க்காமல், அந்த அமைப்பின் அனுபவம், இந்தப் பிரச்சினையில் அதற்கு உள்ள அக்கறை என்பவற்றைப் பயன்படுத்தி பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்றும் அந்த அமைப்பு கோரியிருக்கின்றது.

இதேவேளை, இந்திய இலங்கை மீனவர்களிடையே மீன்பிடிப்பது தொடர்பில் கொள்கையளவில் ஒரு உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக இலங்கை செல்லவுள்ள இந்தியக் குழுவுக்குத் தலைமையேற்கும் ராமேஸ்வரம் மீனவர்கள் கூட்டுறவு சங்கத்தின் தலைவரான தேவதாஸ் கூறினார்(எ-8)

## தமிழ் தேசிய....

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (எ-4)

## சிராஸை இணை....

ஈடுபட்ட இளைஞர் ஒருவர் சீராஸ் அண்ணனை வேட்பாளர் பட்டியலில் இணைத்துக் கொள்ளாவிட்டால் தீக்குளிப்பேன் என்று சொல்லி அருகில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தில் இருந்த மண்ணெண்ணெயை எடுத்து வந்து தனது உடலில் ஊற்ற முற்பட்டுள்ளார்.

ஆர்ப்பாட்டத்திற்கு வருகை தந்த இளைஞர்கள் சிலர் தீக்குளிக்க முயற்சித்த இளைஞனிடம் இருந்து மண்ணெண்ணெய் கானை பறித்துள்ளனர்.

குறித்த இளைஞனே இந்த மறியல் போராட்டத்தை முன்னின்று நடத்தியுள்ளதுடன் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாமல் முன்னெடுக்குமாறு பொலிஸார் தெரிவித்த போதும் குறித்த இளைஞன் பொருட்படுத்தாமல் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த யாழ். பொலிஸ் தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா குறித்த இளைஞனைக் கைது செய்து சக பொலிஸாரிடம் ஒப்படைத்த போதும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட சில இளைஞர்களின் எதிர்ப்பை அடுத்து பொலிஸார் கைது செய்த குறித்த இளைஞனை விடுவித்துள்ளனர். (எ-4,8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**VACANCY**

நீங்கள் நிலையானதொரு தொழில் தேடுனரா? நிரந்தரமான பதவி முன்னேற்றத்தினை பெற விரும்புபவரா? செய்யும் தொழிலில் நல்லதொரு வருமானம் பெற விரும்புபவரா? இதோ... பல வருடகாலமாக இயங்கிவரும் எமது முன்னணி கம்பனியின் மேலும் புதிய 4 கிளைகளுக்கான 40 புதிய வெற்றிடங்கள்.

01 Supervisor's 02 Assistant Manager's 03 Administration's 04 Training Manager's

குறிப்பு : பயிற்சியின் போது 12,000/- பின் 35,000/-+ தொழில் புரிவோருக்கான தங்குமிட வசதியுண்டு. (3489)

தொடர்பு : 0779994807, 0779298842, 0214993166



Shakthy **microtec** Computer wholesaler
Hotline: 0779120842

19"-Rs.7,000/- 17"-Rs.6,000/- 15"-Rs.5,000/-
Rs.13,000/- Rs.14,000/- Rs.15,000/-

Branded கணனிகள், மடிக் கணனிகளை (Labtop) 13000 ரூபா முதல் 35000 வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

100ற்கு மேற்பட்ட கணனிக் கொள்வனவிற்கு விஷேட விலைக்கழிவு

Head Office: 4500, Sheppard Ave, East, unit 27, Toronto, ON, M1S 1V2, Canada.
Branches: No.191/1, Grand pass Road, Colombo - 14
No.170, Palaly Road, Vigneswara Building, Kondavil East, Jaffna. Hotline : 0779120842 (C-4158)



**மின் உபகரணங்கள் திருத்துதல்**

Washing Machine, Fridge, TV மற்றும் வீட்டு மின் உபகரணங்கள் அனைத்தும் உங்கள் வீட்டுக்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும். அத்துடன் வீட்டு வயரிங், திருத்த வேலைகளும் Bathroom, Commode, Hot Water Shower திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும். (3481)

தொடர்பு : 0778006748



# கண்ணீர்க் காணிக்கை



அன்னையின் மடியில் 1993 - 11 - 05

ஆண்டவன் அடியில் 2013 - 07 - 27

எமது பிரதேச செயலகத்தில் பணிபுரியும் சண்முகநாதன் கலைறஞ்சன் அவர்களின் அன்புச் சகோதரன்

**சண்முகநாதன் பிரசாத்**

ஓடும் கண்ணீரின் ஒலி கேட்கிறதா
உருகும் உறவுகளின் நிலை தெரிகிறதா
பாடிப்பறந்த நட்புகள் பரிதவித்து நீர்க்கதியாகிடவே
ஓடித் திரிந்த உறவொன்று ஓய்ந்து கிடப்பது சரிதானோ!
நேற்றிருந்த வாழ்வு இன்று இல்லையே
நினைக்கும் ஒரு பொழுதும் நிற்பதில்லையே
நினைப்பதெல்லாம் வாழ்வில் நடப்பதில்லையே
நீந்துகின்றோம் கவலையில் தேறவில்லையே
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரதேச செயலர், ஊழியர்கள்.
- நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பூநகரி. -

(3490)


## தயாசிறிக்கு எதிராக....

வளையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த நிலைப்பாட்டை வெளியிட்டார்.

அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதற்காக தயாசிறி ஜய சேகர 25 கோடி ரூபாய் பெற்றுக் கொண்டமையைத் தாம் ஆதாரத்துடனேயே கூறியதாக அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற வரப்பிரதாசங்களுக்கு அமையவே தயாசிறி தொடர்பில் குற்றச்சாட்டு வெளியிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சித் தரப்பினரால் முறைகேடுகள் மேற்கொள்ளப்பட்டதாக தயாசிறி ஜயசேகரவினால் கூற முடியுமானால், நாங்கள் ஏன் அவருக்கு எதிராக சில வழக்குகளை தாக்கல் செய்ய முடியாது.

தற்போதைய நிலையில், அவரது தனிப்பட்ட பணிகளை மேற்கொண்டால் மிகுதியை நீதிமன்றத்தில் நாங்கள் பார்த்துக்கொள்ள முடியும் என்று ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கத்துடன் தாம் இணைந்து கொள்வதற்கு 25 கோடி ரூபாய் லஞ்சமாக பெற்றதாக தெரிவிக்கும் தரப்பினருக்கு எதிராக வழக்குத் தொடரவுள்ளதாக தயாசிறி ஜயசேகர கூறியிருந்தார்.

சிரேஷ்ட அமைச்சர் எஸ்.பி. நாவின்னவின் வாரியபொல இல்லத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டிருந்தார்.

ஒருவர் கட்சியிலிருந்து விலகினால் அவருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த கூடாது. எனவே, அவர்கள் மீது வழக்குத் தொடர நடவடிக்கை எடுப்பேன்.

ஐக்கிய தேசிய கட்சியில் தினமும் இதனைத்தான் செய்தார்கள். நான் நாடாளுமன்றத்தில் இருந்து விலகி, மாகாண சபையில் போட்டியிடவே வந்திருக்கின்றேன் என்றார் தயாசிறி. (எ-8)


**கடை கட்டிடங்கள் விற்பனைக்கு**

பரந்தன், யாழ்ப்பாணம் - கண்டி வீதி, பரந்தன் சந்தியிலிருந்து முல்லைத்தீவு வீதியில் 150 யார் தூரத்திற்குள் ஒவ்வொன்றும் பதினைந்து அடி அகலமும் 105 அடி நீளமும் கொண்ட நான்கு கடைகள் தனித் தனியாகவோ மொத்தமாகவோ விற்பனைக்கு உண்டு. (C-4139)

K. முருகன் : 0775272093
P. சிங்கம் : 0776027324, 021 228 0020



**மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி**

Jaffna Heros வெற்றிக்கிண்ணத்திற்கான சுற்றுப்போட்டிக்கு யாழ்ப்பாணத்தை சேர்ந்த சகல அணிகளையும் எதிர்வரும் 31-ம் திகதிக்கு முன் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பதிவுகளுக்கு : S.R. Marketing
தொ.பே : 0785050447, 0773727524, 0785048915

பிரதான அனுசரணை : Hutch Telecommunication

பதிவு செய்யும் அனைத்து வீரர்களுக்கும் 300/- ரூபா ரீலோட்டுடன் Hutch இணைப்பு இலவசமாக வழங்கப்படும். (C-4151)


## த.தே.கூட்டமைப்பின்....

கேதுரட்ணம், முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி முல்லை.மந்துவில் அரசரட்ணம் வித்தியாலய உபஅதிபர் திருமதி மேரி கமலா குணசீலன் ஆகியோரே இந்தத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

36 பேரைக் கொண்ட வட மாகாண சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் 51 பேர் போட்டியிடுகின்றனர். இதில் 48 ஆண்களும், 3 பெண்களும் உள்ளடங்குவதாகக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது. (எ-4)


சிகை அலங்காரம், முக ஒப்பனை, நக வடிவமைப்பு (Facial) துறைகளில் கனடாவில் படிக்க உழைக்க

**நேர்முகத் தேர்வும் வழிகாட்டலும்**



கனடாவின் மேற்படி துறைசார்ந்த நிபுணர்கள் பங்கு பெறுவர்

இடம்: திசைகாட்டி பிறைவேற் லிமிட்

காலம்: 31/07/2013

நேரம் முற்பதிவின்போது தெரிவிக்கப்படும்

உடனடியாகப் பயணிக்க சட்ட ஆலோசனை

இத்துறையில் முன்னனுபவம் இல்லாதவர்களும் பயிலுநர்களாகச் செல்ல அரிய இறுதி வாய்ப்பு (c-4160)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 2219016, 021568 9090



# அன்பு மடல்!

அகவை அறுபதில் மணிவிழாக் கண்டு இன்று (2013.07.29) பணி நிறைவெய்தும் எமது பல்கலை நண்பன்

**உயர்திரு.சுப்பிரமணியம் தர்மலிங்கத்துக்கு . .**



கல்வி என்னும் சாகரத்தில்
பல்கலையில் ஒன்றானோம்.
கண்டுகொண்ட களங்கள் பல!
பசுமையாகி கண்கள் பனிக்கின்றன,
உன்னதமாம்
ஆசிரியத் தொழிலில் அடிபதித்து
அரிய சேவையினால் அதிபராகி
இடைக்குறிச்சி
ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தை
இறுதிவரை அலங்கரித்து
புகழ் பரப்பி
அகவை அறுபதில்
சேவையின் பூரிப்போடு
பணி ஓய்வில்
எமக்கு முன்னோடியாகி நிற்கும்
அன்பு நண்பனை
நீடுழி வாழ்கவென
மனமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

பல்கலை நண்பர்கள்
(சேது, அருணி, அகிலன், நேசன், அருந்தவன், தேசிகன், தயா)



Digital **இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062 (C-4155)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.